
அவனும்
அவளும்
ரமணிசந்திரன்

# அவனும் அவளும்

**ரமணிசந்திரன்**

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600014.

## நூல் விவரப் பட்டியல்

| | |
|---|---|
| நூலின் பெயர் | : அவனும் அவளும் |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| முதல் பதிப்பு | : மார்ச், 1978 |
| இரண்டாம் பதிப்பு | : ஆகஸ்ட், 1984 |
| மூன்றாம் பதிப்பு | : நவம்பர், 1986 |
| நான்காம் பதிப்பு | : ஜூன், 1989 |
| ஐந்தாம் பதிப்பு | : மே, 1991 |
| ஆறாம் பதிப்பு | : நவம்பர், 1992 |
| ஏழாம் பதிப்பு | : டிசம்பர், 1993 |
| எட்டாம் பதிப்பு | : டிசம்பர், 1995 |
| ஒன்பதாம் பதிப்பு | : ஏப்ரல், 1998 |
| பத்தாம் பதிப்பு | : ஜனவரி, 2000 |
| பதினைந்தாம் பதிப்பு | : பிப்ரவரி, 2009 |
| பதினாறாம் பதிப்பு | : நவம்பர், 2010 |
| பதினேழாம் பதிப்பு | : செப்டம்பர், 2012 |
| பதினெட்டாம் பதிப்பு | : செப்டம்பர், 2014 |
| மொத்தப் பக்கங்கள் | : 160 |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.70.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14. |

அவனும்
அவளும்

# 1

"நாயகி, இந்தச் சட்டைக்குப் பித்தானை சற்றுத்தைத்துத் தந்துவிடேன்."

மூன்றாவது முறையாக மனைவியிடம் கெஞ்சினார் தில்லைநாதர்.

"அப்பப்பா.ஓர் ஐந்து நிமிடம் நிம்மதியாகப் படிக்க விடமாட்டேன் என்கிறீர்களே. வினாடிக்கு ஒரு தடவை கூப்பிட்டுக் கொண்டே இருந்தால் எப்படி? இந்தக் கதாநாயகி கழுத்தில் சுருக்குக் கயிறு மாட்டிக் கொண்டது. அவள்பிழைக்கிறாளா இல்லையா என்று தெரிய வேண்டாமா? கொஞ்சம் வாயை மூடிக்கொண்டு இருங்கள்."

நாயகி எரிந்து விழுந்தாள்.

"நல்ல நேரம் பார்த்தார், தொல்லை பண்ண" என்று முணுமுணுத்துக் கொண்டே மீண்டும் கையில் இருந்த கதைப் புத்தகத்தில் கண்ணைப் பதித்தாள்.

நேரத்தைப் பற்றி இவள் பேசுகிறாளே.

தில்லைநாதர் ஒருமுறை கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஒன்பதைத் தாண்டி விட்டது.

இவளுடைய கதாநாயகி எப்போது பிழைப்பது?

அதன்பின் இவள் எப்போது பித்தான் தைத்துத் தருவது?

அதன்பிறகு அந்த சட்டையை மாட்டிக் கொண்டு அவர் எப்போது அலுவலகத்திற்குப் போய்ச் சேருவது?

எப்போதும் திறந்திருக்கும் சிடுமூஞ்சி நிர்வாகியின் நெற்றிக்கண் நினைவுக்கு வந்தது.

துணிந்து மீண்டும் வாயைத் திறந்து, “நாயகி......” என்று இழுத்தார்.

அப்போது தம்பி மதுவையும் தங்கை சசியையும் பள்ளிக்கு அனுப்பிவிட்டு மீரா உள்ளே வந்தாள்.

சசியும் மதுவும் நாயகி பெற்ற செல்வங்கள்.

ஆனால், அவர்களை வளர்ப்பது மீராதான். காலையில் பாடம் சொல்லிக் கொடுப்பது, குளிப்பாட்டுவது, தலைகோதி உடை மாற்றுவது, சாப்பாடு கொடுப்பது, பள்ளிக்கூடம் அனுப்புவது எல்லாமே மீராதான்.

உள்ளே வந்த மீரா கையில் சட்டையோடு நின்ற தந்தையையும் புத்தகத்தில் மூழ்கியிருந்த சிற்றன்னையையும் பார்த்தாள்.

சிரிப்பு வந்தது.

சித்தியாவது, கதைப் புத்தகத்தை இடையில் வைத்து விட்டு எழுவதாவது?

“உனக்கு சிரிப்பா இருக்கிறதா அம்மா” என்றார். தில்லைநாதர் வருத்தத்துடன்.

மீராவுக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது.

“சேச்சே, இல்லையப்பா, இங்கே கொடுங்கள். சட்டையை நான் தைத்துத் தருகிறேன்” என்று தந்தையிடம் சட்டையை வாங்கினாள்.

“இந்தாம்மா...... இந்தா. கொஞ்சம் சீக்கிரம் பார்” என்று நன்றியோடு சட்டையை நீட்டினார் தில்லைநாதர்.

மீரா ஓரக்கண்ணால் நாயகியைப் பார்த்தாள்.

அவளுக்கு இதுதான் பூலோகம் என்ற எண்ணங்கூட இருப்பதாகத் தெரியவில்லை.

இதழ்களில் இளநகை படர மீரா உள்ளே சென்றாள்.

விரைவில் பித்தான் தைத்துக்கொண்டு வந்தாள்.

சட்டையை வாங்கி மாட்டிக்கொண்டு தில்லைநாதர் கிளம்பினார்.

திடீர் என்று நின்றார்.

மீராவிடம் ஒரு கடிதத்தை நீட்டினார். “இந்தாம்மா, நேற்று வந்த கடிதம், நேற்றிரவு மிகவும் பிந்திவந்ததில் இது மறந்தே போயிற்று. படித்துப்பார்” என்றார்.

“சரிப்பா, அப்புறம் படித்துக் கொள்கிறேன். நீங்கள் கிளம்புங்கள், நேரம் ஆகிறது” என்று அவசரப்படுத்தினாள் மீரா.

“ஆமாம் பெரிய வேலை, வெறும் பீத்தல் உத்தியோகம். கடிதத்தை படியம்மா, நம்ம முகுந்தன் வருகிறானாக்கும்.”

“பெரிய மகாராஜாவா என்ன? வரட்டுமே? அப்பா” என்றாள், மீரா அலட்சியமாக. “இப்போது நீங்கள் சீக்கிரம் புறப்படுங்கள், இல்லாவிட்டால் அங்கே உங்கள் ஆபீஸ் நிர்வாகியிடம் நன்றாக டோஸ் வாங்குவீர்கள்.”

“அதென்னம்மா அவ்வளவு அலட்சியமாகச் சொல்லி விட்டாய். சின்னப்பிள்ளையில் எப்படி அவன் பின்னேயே சுற்றுவாய் தெரியுமா? இப்போது மட்டும் என்ன

நடக்கப்போகிறதாம்? அவன் மட்டும் வரட்டும்; நீ அப்படியே மயங்கிப்போய்..." என்று சிரித்தார் தில்லைநாதர்.

"சீ! என்னப்பா பேச்சு இது? அந்த முகுந்தன் பெரிய மன்மதக் குரங்காக்கும், நான் காலடியில் விழ. இப்போது அந்தப் பேச்சை விட்டுவிட்டு ஆபீசுக்குப் போகிறீர்களா? அல்லது உங்களுக்கு பதிலாக நானே போகட்டுமா?" என்றாள், மீரா மிரட்டுவது போல.

"இதோ போகிறேனம்மா, நீ கடிதத்தைப் படி..... அவன் வருவது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அதைத்தான் சொல்ல வந்தேன். முன்பு வாசுவும் உன் அம்மாவும் உயிரோடு இருந்தபோது நம்வீடு இருந்ததெல்லாம் நினைவு வருகிறது இல்லையாம்மா, முறைக்காதே நான் இதோ கிளம்பிவிட்டேன்" என்று பொய்யான வேகத்துடன், குள்ளத்தாராபோல குடுகுடு என்று வீட்டைவிட்டு வெளியேறினார், தில்லைநாதர்.

அதைப் பார்த்து, "களுக்" என்று சிரித்த மீராவின் நினைவில் முகுந்தன் தோன்றினான்.

நீளமாய்க் குச்சிபோல் கையும் காலுமாய் ஒரு பையன் நினைவில் தெரிந்தான்.

முகம் சரியாக ஞாபகம் இல்லை.

மீராவைவிட அவன் நாலைந்து வயது பெரியவனாக இருப்பான்.

மீராவின் அன்னை இறந்தபோது அவள் அந்த முகுந்தனுடைய கையைப் பிடித்தபடி அச்சத்துடன்நின்றிருந்தது மனதில் நன்றாகத் தெரிந்தது.

அந்த முகுந்தனுடைய தந்தை ஒரு லாரியில் மாட்டிக் கொண்டு இறந்தபோது அவனுடைய அன்னையும் சகோதரியும் கதறித் துடித்ததும், இவன் கற்சிலைபோல

உதட்டைப் பல்லால் ரத்தம் கசிய அழுத்தியபடி நின்றதும் மனத்திரையில் தோன்றின.

நல்ல நல்ல பலகாரங்களை எல்லாம் தன்னை அழைத்துத் தந்த முகுந்தனுடைய அன்னையின் முகம் நன்றாகவே தெரிந்தது.

ஒரு பெருமூச்சுடன் மீரா கையில் இருந்த கடிதத்தைப் படிக்கத் தொடங்கினாள்.

அவள் இரண்டு வரி படிக்குமுன், "மீரா இங்கே வா. இந்த சமையலைக் கொஞ்சம் பார், நான் அந்த லைப்ரரி பையனைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று நாயகி மீராவை அழைத்தாள்.

பிறகு படிக்கலாம் என்று கடிதத்தை மடித்து மாடத்தில் வைத்துவிட்டு, மீரா வேலையில் இறங்கினாள்.

மாலையில் தந்தை வந்ததும், "கடிதத்தைப் படித்தாயா?" என்று கேட்டபோதுதான், மீண்டும் கடித நினைவு மீராவுக்கு வந்தது. கடிதத்தை எடுக்க ஓடினாள்.

"என்னம்மா, இன்னும் படிக்கக்கூட இல்லையா?" என்று குறைப்பட்டார் தில்லைநாதர், "உனக்கு கூடவா அந்தக் குடும்பத்து அருமை தெரியவில்லை?"

மீராவின் அன்னை உயிருடன் இருந்தபோது இரு குடும்பங்களும் மிகவும் நெருக்கம்.

மனைவியும் இறந்து, நெருங்கிய நண்பனான வாசுதேவனும் அடுத்து உடனே இறந்ததில் தில்லைநாதர் மிகவும் ஒடுங்கிப் போனார்.

பழைய நண்பனுடைய பிள்ளையை மீண்டும் பார்க்கப் போகிறோம் என்று அவருக்கு மிகவும் ஆனந்தம். அந்த மகிழ்ச்சியைக் கொண்டாட, பகிர்ந்து கொள்ள நாயகியை நாடினார்.

அவளுக்கு அதில் அக்கறை இல்லை.

மீராவும் கவனம் இல்லாமல் இருக்கிறாளே என்று அவருக்குக் குறையாக இருந்தது.

"இதோ, இப்போதுதான் படிக்கப் போகிறேனே அப்பா" என்றாள் மீரா.

"என்னம்மா, சித்திக்குத்தான் அவர்களைத் தெரியாது அதனால் அக்கறையில்லை. நீ அப்படியா? அவர்கள் வீட்டிலேயே பழி கிடப்பாயே" என்றார் பழைய மாதிரியே.

மீரா தந்தையைப் பார்த்தாள். அவர் மனம் புரிந்தது. "கொஞ்சம் வேலை அப்பா. அதனால்தான் படிக்க முடியாமல் போயிற்று. ஆமாம், அந்த மாமா இறந்ததும் எல்லோரும் எங்கே போனார்கள், அப்பா?" என்று பேச்சுக் கொடுத்தாள்.

உடனே தில்லைநாதருக்கு மனம் சமாதானம் ஆகிவிட்டது. "அவர்களுடைய கிராமத்துக்குத்தான் அம்மா. சிதம்பரம் பக்கத்தில். அங்கே அவர்களுக்கு நிலங்களும் இருக்கின்றன... அங்கேயே குடியேறி விட்டார்கள். முகுந்தனும் அண்ணாமலையிலேயே என்ஜினியரிங் படித்தானாம். இப்போது இங்கே அவனுக்கு நல்ல வேலை கிடைத்து இருக்கிறதாம்... அதனால் மீண்டும் இங்கேயே குடி வருகிறார்கள்" என்று மகிழ்ச்சியோடு கூறினார்.

"எப்போது அப்பா?"

"நாளைக்கே வருகிறார்களாம்."

"நாளைக்கே என்றால் அவர்கள் தங்க இடம்? நம் வீட்டிற்கே வருகிறார்களா அப்பா?"

"இல்லை... மீராம்மா, அவனுடைய நண்பன் வாசவன் என்று ஒரு பையன்! அவனும் அதே கம்பெனியில் வேலை பார்க்கிறானாம். அவன் மூலமாய் வீடு எல்லாம் ஏற்பாடு செய்து விட்டார்களாம். கடிதத்தைப் படியேன்? எல்லாம் முகுந்தன் விளக்கமாக எழுதி இருக்கிறான்."

மீரா கடிதத்தில் கண்ணைப் பதித்தாள்.

கடைசிப் பகுதியைப் படித்ததும் மீராவின் முகம் சிவந்தது.

'அழுகுணி மீராவைக் கேட்டதாகச் சொல்லுங்கள்' என்று முகுந்தன் எழுதியிருந்தான்.

அழுகுணி மீராவாமே? அவளுக்கு நினைவு தெரிந்து மீரா அழுததே இல்லை. "நானா அழுகுணி? வரட்டும் சொல்கிறேன்" என்று கறுவினாள்.

ஆனால், மறுநாள் காலையில் முகுந்தன் அவள் முன்னே வந்து நின்றபோது மீரா அயர்ந்து போனாள்.

மீராவின் நினைவில் இருந்த பையனைப் போலவே இவனுக்கும் நீளமான கையும் காலும்தான்.

ஆனால் அந்த அளவு உயரத்துக்கு ஏற்றப்படி கட்டு திட்டமான தோற்றம்.

இவனா மரத்தின் மேல் ஏறி விழுந்து கையை ஒடித்துக் கொண்டவன்? அந்த கம்பீரம் எங்கே? அந்த விளையாட்டுத் தனம் எங்கே?

மீரா திகைத்து நிற்பதைக் கண்டதும் முகுந்தனின் கண்களில் குறுஞ்சிரிப்பு எட்டிப் பார்த்தது.

"அடடே! மீராவா? பரவாயில்லையே! நீ கூட வளர்ந்து விட்டாயே? நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. பழைய மாதிரி குண்டுக் கத்தரிக்காயாகவே இருப்பாய் என்று எண்ணி வந்தேன். ம்... கொஞ்சம் பரவாயில்லை" என்று சிரியாமல் சொன்னான்.

மீராவுக்கு ஒரே அதிர்ச்சி!

குண்டுக் கத்திரிக்காயா!

அவளா!

இந்த மீராவா!

மீரா தன்னையே குனிந்து பார்த்துக் கொண்டாள். கொடி மாதிரி ஒல்லியான இந்த உடலையா குண்டுக் கத்திரிக்காயோடு ஒப்பிடுகிறான்?

அவன் ஆறடி ஆண் பிள்ளை என்றால், மீராவும் ஐந்தரை அடிப் பெண் பிள்ளை அல்லவா? பொதுவாகப் பெண்களுக்குள் அவள் வளர்த்தி ஆயிற்றே.

மீரா சண்டைக் கோழி மாதிரித் தலையைச் சிலுப்பிக் கொண்டு நிமிர்ந்தாள்.

## 2

மீரா மிகவும் ரோஷக்காரி!

"ஒவ்வொருவருக்கும் தான் தான் பெரிய நெட்டைக் கொக்கு என்று நினைப்பு போல் இருக்கிறது. மற்றவர்கள் எல்லாம் குள்ளவாத்து என்று நினைப்பு" என்றாள் அலட்சியமாக.

"ஆகா சிலை பேசி விட்டதே!" - என்று முகுந்தன் சிரித்தான். "இதுவரை பொம்மை மாதிரி நிற்கவும், அய்யோடா, பேசாமடந்தையோ என்று எண்ணி விட்டேன். இவளைப் பேச வைக்க பட்டி, விக்கிரமாதித்தனுக்கு எங்கே போவது என்று பயந்து போனேன். நல்லவேளை சமயத்தில் காப்பாற்றினாயே."

மீராவுக்கும் சிரிப்பு வந்து விட்டது. நாணத்துடன் தலை கவிழ்ந்தாள்.

அப்பொழுது "ஊரில் இருந்து ஒரு மாமா வருவதாகச் சொன்னாயே அக்கா; அது இந்த மாமா தானா?" என்று கேட்டுக்கொண்டே சசி வந்தாள்.

அவளுக்கு ஏழெட்டு வயது இருக்கும். கொழுகொழு என்று அழகாக இருந்தாள்.

அவளைச் சுட்டிக் காட்டிய முகுந்தன், "மாமா மீரா முன்பு இப்படித்தான் இருப்பாள் இல்லையா?" என்ற தில்லைநாதரிடம் கேட்டான்.

"உன் அம்மாவும், அவன் அம்மாவும் மீராவுக்கு எப்பொழுதும் வயிற்றில் எதையாவது அடைத்துக்கொண்டே இருப்பார்கள். குண்டாக இருந்தாள்... அவர்கள் போனார்கள், மீராவும் மெலிந்து விட்டாள்" என்றார் தில்லைநாதர், அவரது குரலில் முதல் மனைவியின் நினைவு - ஏக்கம் இழைந்து இருந்தது.

"ஆனால், முகம் சிறு குழந்தையில் பார்த்தது போலத்தான் இருக்கிறது" முகுந்தன் மீராவை நோக்கினான்.

"உனக்கு பழைய மீராவின் முகம் அவ்வளவு நினைவு இருக்கிறதா? பார்த்துப் பத்து ஆண்டுக்கு மேல் ஆகிறதே" என்று தில்லைநாதர் ஆச்சரியப்பட்டார்.

கையில் காபித் தம்ளர்களோடு வந்த நாயகி இதற்கு பதில் சொன்னாள். "அட, நீங்க ஒன்று, ஏழேழு பிறவி எடுத்தாலும் இது மாதிரி நினைவுகள் தொடர்ந்து வரும் என்கிறார்கள். நீங்கள் பத்து வருடத்தைப் பெரிதாகச் சொல்ல வந்து விட்டீர்களே" என்று தன் புத்திசாலித்தனத்தைக் காட்டினாள். "என்ன தம்பி அப்படித் தானே" என்று ஒரு மாதிரிச் சிரிக்கவும் செய்தாள்.

மீராவுக்கு முகம் செக்கச் சிவந்து போயிற்று.

முதல் தடவையாக வரும் ஒருவரிடம் இந்தச் சித்தி என்ன கேவலமாகக் குறிப்புக் கொடுத்துப் பேசிவிட்டாள்.

முகுந்தன் இந்த வீட்டைப் பற்றி என்ன நினைப்பான்? வயதுப் பையன் வந்து விட்டால் விடமாட்டார்கள் போல் இருக்கிறதே என்று எண்ண மாட்டானா? மட்டமாய் நினைப்பானே! என்றெல்லாம் எண்ணி, அவமானத்தால் கூனிக்குறுகிப் போனாள் மீரா.

முகுந்தனுடைய பார்வை மீராவின் மீது பதிந்து மீண்டது.

அவன் பார்வை புரியாமல் மீரா மேலும் திணறினாள்.

அதற்குள் சிறுவன் மது நல்லகாலத்துக்கு உதவிக்கு வந்தான். "ஏழேழு நாற்பத்திரண்டு தானே அம்மா?" என்று கேட்டான்.

நாயகிக்கு ஒரு விநாடி முகம் குப்பென்று வியர்த்தது.

'சீ! நாலுபேர் முன்னால் அவமானப்படுத்துவதே இந்த சனியன்களுக்கு வேலை' என்று சினம் கொணடாள்.

"அது கூடத்தெரியாமல் என்னடா பள்ளிக்கூடம் போகிறாய். மாதம் இருபது ரூபாய் தண்டமா? பேசாமல் மாடு மேய்க்கப் போ. எனக்கு வருகிற கோபத்துக்கு அறைந்தேன் என்றால்..." எனும் போதே சசியும் மதுவும் மீராவின் பக்கம் நகர்ந்து விட்டனர்.

"விட்டது சனி" என்று நாயகி மீண்டும் முகுந்தனிடம் திரும்பினாள். "இந்தாருங்கள் தம்பி. காபி சாப்பிடுங்கள்" என்று காபியை நீட்டினாள்.

முகுந்தன் எதுவுமே நிகழாதது போல் சாவதானமாக காபியை வாங்கி கொண்டான். ஒரு மடக்கு குடித்தான். நிமிர்ந்து நாயகியைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

"உங்களுக்கு மிகவும் இனிமையான சுபாவம் போல் இருக்கிறதே. சாதாரண மனிதரைவிட இரட்டிப்பு இனிமை" என்றான்.

நாயகியின் முகம் ஒரேயடியாகப் பூரித்து போயிற்று. "ஹி ஹி, அது மெய்தான் தம்பி. ஆனால் அது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று வாயெல்லாம் பல்லாகக் கேட்டாள்.

"இன்னொருவர் சொல்ல வேண்டுமா? உங்கள் காபியே சொல்லுகிறதே. அப்பப்பா... சர்க்கரை ரொம்ப அதிகம், திகட்டுகிறது" என்று காபி டம்ளரை கீழே வைத்துவிட்டு சிரித்தான்.

தில்லைநாதர் கொல்லென்று சிரித்து விட்டார்.

மீராவுக்குத் திகைப்பும் கூட.

சமயம் பார்த்து மட்டம் தட்டி விட்டானே! கெட்டிக்காரன் தான்.

நாயகியின் முகம் சுருங்கியது. ஐஸ் வைப்பது போல் பேசிக் காலையல்லவோ வாரி விட்டுவிட்டான்! பாபி!!

'தன்னை அசடு வழிய வைத்து விட்டானே இந்த முகுந்தன்' என்று நாயகிக்கு ஆத்திரம் வந்த போதும், அதை வெளிக்காட்ட முடியாமல் அடக்கினாள்.

சிரித்துக் கொண்டு இருந்த கணவரைப் பார்த்து ஒரு விழி விழித்தாள்.

"தம்பி மிகவும் நகைச்சுவையாகப் பேசுகிறது" என்று சிரித்து சமாளித்தாள்.

"சின்னக் கணக்குக்கூட இவனுக்குத் தெரியவில்லை. தினமும் பாடம் பாடம் என்று என்னதான் சொல்லிக் கொடுக்கிறாயோ?" என்று மீராவைச் சாடினாள்.

"மூணாம் வகுப்பு படிக்கிற கழுதைக்கு ஏழாம் வாய்ப்பாடு தெரியவில்லை" என்று மதுவின் முதுகில் ஒன்று போட்டாள்.

"இந்தப் புத்தகத்தை இன்று திருப்பிக் கொடுக்க வேணடும். இன்னமும் முடியவில்லை" என்று தனது 'மஞ்சள் மாளிகை

மர்மக் கொலை'யை எடுத்துக் கொண்டாள். புத்தக சகிதம் உள்ளே போய் விட்டாள்.

மீரா கவலையுடன் அடிபட்ட தம்பியைப் பார்த்தாள்.

ஒரு கண்ணை அன்னையின் பின்னே ஓட்டிவிட்டு, "நான் நெளிந்து கொடுத்து விட்டேன். அக்கா அதனால் அடி வலிக்க வில்லை" என்று புன்னகையோடு ரகசியம் பேசினான் பொடியன்.

மீராவும் மெல்லச் சிரித்தாள். "படவா, மெய்யாகவே உன்னை உதைக்க வேண்டுமடா, வாய்ப்பாடு எல்லாம் நன்றாகப் படிக்கச் சொன்னேன் இல்லையா" என்று அவனை லேசாகக் கடிந்தாள்.

முகுந்தன் எழுந்தான். "நான் வருகிறேன் மாமா இன்றே அலுவலகம் செல்ல வேண்டும். மாலையில் அம்மாவை அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்று விடை பெற்றான்.

"அம்மாவும் வந்தாயிற்றா தம்பி? அவர்களையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கலாமே. வந்த அலுப்பு தீர ஒருநாள் ஓயவாக இருந்துவிட்டு வீட்டுக்கு சென்றிருக்கலாமே" என்றார் தில்லைநாதர்.

"அம்மாவாவது ஓய்வாக இருப்பதாவது! அதோடு அம்மாதான். 'முதன் முதலாகப் போகிறாய்; நானும் உடன் வரவேண்டாம்' என்று சொல்லி விட்டார்கள். அப்பா இறந்த பிறகு அம்மா இதெல்லாம் அதிகமாகப் பார்க்கிறார்கள். நான் சொன்னாலும் கேட்பது இல்லை" என்றான் முகுந்தன்.

"அட அது என்னப்பா, நம் வீட்டுக்குக்கூட அதெல்லாம் பார்க்க வேண்டுமா? நானும் வாசுவும் இருந்த நட்புக்கு உன் அம்மா என் உடன் பிறந்த சகோதரி போல் அல்லவா? எங்கள் வீட்டுக்கெல்லாம் இந்த சம்பிரதாயங்கள் பார்க்க வேண்டாம்.

என்று அம்மாவிடம் சொல்லப்பா" என்றார் தில்லைநாதர். நண்பனின் நினைவில் அவருடைய கண்கள் லேசாகக் கலங்கின.

முகுந்தன் ஒரு கணம் பேசாமல் இருந்தான்.

பிறகு, "அம்மாவிடம் சொல்லுகிறேன்... வந்தால், மாலையில் அழைத்துக் கொண்டு வருகிறேன்" என்று கிளம்பினான்.

முகுந்தன் சொன்னது போலவே, மாலையில் அம்மாவை அழைத்துக்கொண்டு வந்தான்!

வந்ததும் வராததுமாக அந்த அம்மா, ஆவலே வடிவாக மீராவிடம் சென்றாள்.

அன்போடு ஏற இறங்கப் பார்த்தாள். "முகுந்தன் சொன்னது சரிதான். நீ அப்படியே ரதியாகத்தான் இருக்கிறாய்" என்றாள் புன்னகையோடு.

மீரா வெட்கத்துடன் அவளைப் பார்த்தாள்.

பாசத்தின் உருப்போன்ற தோற்றம் தேவகி அம்மாளுக்கு.

அவர் தன்னையே பார்க்கவும் மீரா சற்றுத் தடுமாறினாள்.

அதோடு, 'முகுந்தன் சொன்னதுபோல்' என்று அவர் சொன்னது மனதில் பதிந்து, நெஞ்சு படபடத்தது.

"ஹே, அம்மா. என்ன இது? இப்படிச் சொல்லி விட்டீர்கள்? இல்லாததையும் பொல்லாததையும் போட்டு உடைப்பதில் உங்களுக்கு நிகர் நீங்களேதான்" என்று முகுந்தன் சிரித்தான்.

"என்னடா, இல்லாததைச் சொல்லிவிட்டேன்? மீரா அழகாக வளர்ந்து இருக்கிறாள் என்று நீ சொன்னாயா இல்லையா?" என்று தேவகி ரோஷத்தோடு கேட்டார்.

"அவ்வளவுதானே சொன்னேன். நீங்கள் பாட்டில் என்னவோ 'ரதி கிதி' என்கிறீர்களே?" என்றான் முகுந்தன்.

"அழகு என்றால் ரதி என்றுதானே அர்த்தம் பெரிதாக ஆட்சேபிக்க வந்து விட்டான். போடா போ" என்று திரும்பினார் அந்த அம்மாள்.

அதற்குள், "அப்போ நானும் அழகு தான்," என்றாள் சசி.

"போடீ, நீ ஒன்றும் அழகு இல்லை. பலூன் போல இருக்கிறாயே! எங்காவது பூசணிக்காய் அழகாக இருக்குமா?" என்று ஆணித்தரமாகக் கேட்டான் மது.

"ஏய் போடா, நான் மீராக்கா மாதிரியே இருக்கிறேன் என்று முகுந்தண்ணா காலையில் சொன்னார்களே! அக்கா மாதிரி என்றால் அப்போ நானும் அழகுதானே, இல்லையா" என்று சசி, தேவகி அம்மாளை நீதிபதியாக அழைத்தாள். "நீங்களே சொல்லுங்கள் அ... அம்... அ என்று" எப்படி அழைப்பது என்று புரியாமல் தடுமாறினாள்.

"அத்தை என்று சொல்லடி கண்ணு. மீராவுக்கு அத்தை என்றால் உனக்கும் அதே முறைதானே." என்றார் தேவகி.

முகுந்தன் மீராவைப் பார்த்தான்.

அப்பொழுது வாசலில் சைக்கிள் மணி ஓசை கேட்டது. எட்டிப் பார்த்தான். பிறகு "லைப்ரரி பையன் வந்து இருக்கிறான் அம்மா," என்று கத்தினான்.

'லைப்ரரி' எனவும் ஏதோ என்று எண்ணிவிட வேண்டாம்.

மலிவாகக் கிடைக்கும் மூன்றாந்தர மர்ம நாவல்களை, ஒரு பையன், கட்டணம் வாங்கிக் கொண்டு படிக்கக் கொடுத்து வந்தான். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை புதிய புத்தகம் கொண்டு வந்து தந்துவிட்டு, முந்தியதை வாங்கிக் கொண்டு போவான். நாயகிக்கு இந்தப் புத்தகங்களிடம் அபாரப் பிரேமை.

மீராவுக்கு அந்த நாவல்களின் பெயர்களே சகிப்பது இல்லை.

சமையல் அறையில் இருந்து வந்த நாயகி, மேசை மேல் இருந்த புத்தகத்தை எடுத்துக்கொண்டு வெளியே போனாள். "பச்சையம்மன் கோவிலில் பயங்கரக் கொள்ளை" என்ற புத்தகத்துடன் திரும்பினாள். புத்தகத்தை மேசை மேல் வைத்துவிட்டு மீண்டும் அடுப்படியில் அடைக்கலம் புகுந்தாள்.

வீட்டுக்கு விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள் என்ற நினைப்பே அவளுக்கு இல்லை.

'வேண்டாத விருந்தாளிகள்' என்பது போல நடந்து கொண்டாள்.

"முகுந்தன் மீது அவளுக்கு அவ்வளவு வெறுப்பு ஏற்பட்டு இருந்தது.

"இது எப்படி முடியுமோ?" என்று மீரா வேதனைப்பட்டாள்.

## 3

மேசைமேல் இருந்த புத்தகத்தை தேவகி எடுத்துப் பார்த்தாள்.

"பச்சையம்மாள் கோவிலில் பயங்கரக் கொள்ளை."

தேவகி அம்மாளின் முகம் சுளித்தது. "இதை யாரெல்லாம் படிக்கிறீர்கள்?" என்று ஒரு மாதிரிக் குரலில் கேட்டார்.

"அம்மாதான் அத்தை. அதைப் படிக்கும்போது நாங்கள் ஏதாவது கேட்டால், அவ்வளவுதான். முதுகில் டின் கட்டிவிடுவார்கள்" என்று கண்களை விரித்து உடலைச் சிலிர்த்தாள் சசி.

"உஸ், சும்மாயிரு சசி" என்று அடக்கினாள் மீரா.

"சசி மெய்தானே சொல்கிறாள். ஏன் சும்மா இருக்கச் சொல்கிறீர்கள் அக்கா?" என்று கேட்டான் மது.

மீராவால் பதில் சொல்ல முடியவில்லை. சங்கடத்தோடு, "நானும் சித்திக்கு உதவி செய்யப்போகிறேன்" என்று உள்ளே போய் விட்டாள்.

சற்று நேரத்தில் மீரா பலகாரத்தோடு வந்தாள்.

எல்லோரும் பேசிக் கொண்டே உண்டார்கள்.

அப்போது முகுந்தனுக்கு லேசாக விக்கல் வந்தது. மீரா மதுவிடம் முகுந்தனுக்குத் தண்ணீர் கொடுக்கும்படி மெல்லக் கூறினாள்.

அதைப் பார்த்துக் கொண்டே இருந்துவிட்டு முகுந்தன் சொன்னான். "சின்ன வயதில் நான் ஏவினதை எல்லாம் அசடு மாதிரி செய்து கொண்டு கிட்ப்பாளே, அந்த மீரா தானா இது!" வெகுவாக அதிசயத்தான்.

தில்லைநாதர் வேடிக்கையாக, "இப்போது அப்படி ஏவிப்பார், சிறுத்தை சீறிவிடும்" என்றார்.

"என்னப்பா இது. நான் எப்போது சீறினேனாம்?" ஆத்திரத்தோடு கேட்டாள் மீரா. சீறி கீறி என்றால் முகுந்தன் என்ன நினைப்பான்? என்று அவளுக்கு அவமானமாகி விட்டது.

"இப்போது வேறு என்ன செய்கிறாயாம்?" என்று முகுந்தன் கேட்டான்.

மீரா திகைப்புடன் வாயடங்கிப்போனாள். உண்மையாகவே அவள் இப்போது சீறித்தானே விழுந்தாள். 'உதாரணமே காட்டி விட்டோமே' என்று உள்ளூர வெட்கினாள்.

சுதாரித்துக்கொண்டு, "பின்னே இல்லாததை எல்லாம் அப்பா சொன்னால் எப்படிக் கேட்டுக்கொண்டு இருப்பது? அது போன்ற நேரத்தில் கூட அடங்கி இருக்க வேண்டுமா? அது கோழைத்தனம்" என்றாள் விடாப்பிடியாக.

"ஆனால் 'இம்' என்னுமுன் எகிறிக் குதிப்பது கூடாது" என்றான் முகுந்தன்.

"நான் குதித்தேன் என்கிறீர்களா?" என்று திரும்பினாள் மீரா.

"என்னிடமே பாய்கிறாயாக்கும்?" என்றான் முகுந்தன்.

கடைசி வார்த்தையை விட்டுக் கொடுக்க இருவருக்கும் விருப்பம் இல்லை.

"அதது நேரம் காலத்துக்கு தக்கபடி யோசித்துச் செய்ய வேண்டும்" என்று தேவகி அம்மாள் சமாதானமாகச் சொல்லி முடித்தார்.

பிறகு முகுந்தனுடைய வேலையைப் பற்றிய பேச்சு வந்தது. "அவன் அப்பா வேலை செய்த இடத்திலேயே அவனுக்கும் வேலை கிடைத்தது நம் அதிருஷ்டம்" என்றார் தேவகி அம்மாள்.

"அதனால்தான் உடனே கிடைத்தது அம்மா. நான் அப்பாவின் பெயரையும் விண்ணப்பத்தில் குறித்து இருந்தேன். அந்தப் பழைய பெரிய மானேஜரேதான் இன்னமும் இருக்கிறார். அப்பாவை நினைவு வைத்து மிகவும் பிரியமாகப் பேசினார்" என்றான் முகுந்தன்.

"நல்ல கம்பெனி. நீ கூடப் பார்த்து இருப்பாய் மீரா" என்றார் தில்லைநாதர்.

"என்ன பெயர் அப்பா?"

"சென் அன் கோ. மது, சசியின் பள்ளிக்குப் பக்கத்தில்."

"ஓ. அதுவா? பூங்காவுக்கு முன்னால் இருக்கின்றதே" என்றாள் மீரா.

"அதுவேதான் பூங்காவைத் தாண்டினால் பின் பக்கம் வீடு" என்றான் முகுந்தன்.

"மிகச் சின்ன வீடு" என்றார் தேவகி.

"தனி வீடு இப்போது சென்னையில் எங்கே கிடைக்கிறது? கிடைத்தாலும் ரூ. 300, 350 என்று வாடகை ஆகும்" என்றார் தில்லைநாதர்.

"நான் வீட்டைக் குறை சொல்லவில்லை அண்ணா! சின்னதாக இருந்தாலும் அழகாக வசதியாக, முன்புறம் சிறு தோட்டத்தோடு நன்றாக இருக்கிறது. நாளை குடும்பம் பெரிதாகும்போது இடம் போதாதே என்று பார்த்தேன்" என்றார் தேவகி.

"அப்போது வேறு வீடு பார்த்துக் கொள்ளலாம்" என்று முடித்தான் முகுந்தன்.

மீராவின் மனம் வெகு வேகமாக வேலை செய்தது.

"முகுந்தனுக்கு எப்போது வேலை முடியும்? அதிக நேரம் ஆகிவிட்டால்....?"

ஆனால் முகுந்தன் தான் அவளை மட்டம் தட்டுகிறானே! அப்படி இருந்தும்கூட அவளைப் பார்க்கப் பேச ஆசை ஏன்? மீராவுக்குப் புரியவில்லை.

மறுநாள் மாலை மீரா தன் சித்தியை அழைத்தாள்.

"ஏண்டி தொண தொணக்கிறாய்?" என்று சலித்துக் கொண்டாள் நாயகி.

"இல்லை சித்தி பிள்ளைகளுக்கு மாலை டிபனைக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு, சற்றுநேரம் பூங்காவில் விளையாடி விட்டு விட்டு வரட்டுமா?" என்று கேட்டாள் மீரா.

எப்போதேனும் அப்படிச் செய்வது வழக்கம்தான். ஆனாலும், இன்று சித்தி அனுமதி மறுத்து விடுவாளோ என்று அஞ்சினாள்.

"நீங்களும் சற்றுநேரம் நிம்மதியாகப் படிக்கலாம்" என்று ஆசை காட்டினாள்.

"அப்படியே செய்" என்று உடனே அனுமதி தந்தாள் நாயகி.

மீராவுக்கு ஒரே உற்சாகம்.

மாலைப் பலகாரத்தை மூன்று பிரிவாகக் கட்டி எடுத்துக் கொண்டாள்.

சசி, மதுவின் பள்ளிக்கூடத்துக்கு கிளம்பினாள்.

பள்ளியின் அருகில் சென்றதும் 'சென் அன் கோ' வை ஓரக் கண்ணால் கவனித்தாள். மூன்று மாடிக் கட்டடம் முகுந்தன் இதில் எந்த இடத்தில் இருப்பான் என்று யோசித்தாள். மெல்லப் பள்ளியை அடைந்தாள்.

சிறுவர்களுக்கு மீராவைக் கண்டதும் ஒரே மகிழ்ச்சி. கும்மாளத்துடன் ஓடிவந்தனர்.

மூவரும் பூங்காவை அடைந்தனர். பலகாரத்தைப் பிரித்தனர். ஏதோ எண்ணிவிட்டு மீரா தன் பங்கை உண்ணாமல் வைத்தாள்.

உண்டு முடித்ததும், சசியும் மதுவும் ஊஞ்சலிலும் சறுக்கு மரத்திலும் விளையாடச் சென்றனர்.

மீராவின் கடைக்கண் 'சென் அன் கோ' விலேயே இருந்தது. 'இந்த ஆபீசை மூடவே மாட்டார்களோ?' என்று நினைத்தாள்.

ஓர் அரை மணி நேரம் ஆனதும் சசியும் மதுவும் "வீட்டுக்கு போகலாமா?" என்று ஓடிவந்தனர்.

“இன்னும் கொஞ்ச நேரம் ஆகட்டும். போகும் நேரம் நான் கூப்பிடுகிறேன்” என்று மீரா அவர்களை மீண்டும் விளையாட அனுப்பினாள்.

மீண்டும் ‘சென் அன் கோ’ வைப் பார்த்தாள்.

நெஞ்சு படபடக்கலாயிற்று.

அலுவலகம் முடிந்து நிறைய பேர் வெளியே வரலாயினர்.

முகுந்தன் காணவில்லையே. ஒருவேளை அவன் வரவில்லையோ என்று மீரா ஒருகணம் பயந்து விட்டாள்.

அடுத்த கணமே முகுந்தனின் தலை தெரிந்தது. நிமிர்ந்த நடையோடு அவன் இருபுறமும் நோக்கி ரோட்டைக் கடந்தான்.

பூங்காவின் பக்க வாயிலின் வழியே பூங்காவின் உள்ளே வந்தான்.

மீரா அவசரமாகத் த்லையைத் திருப்பினாள். அருகில் இருந்த பூச்செடியை வெகு கவனமாகப் பார்ப்பது போல் பாவனை செய்தாள்.

முகுந்தன் அவளைத் தாண்டித்தான் செல்லவேண்டும். பார்த்துவிட்டு அழைப்பான் என்று எதிர்பார்த்தபடி செடியையே நோக்கினாள்.

சற்று நேரம் ஆயிற்று.

முகுந்தனுடைய குரலையே காணவில்லை. தன்னைப் பாராமலேயே போயிருப்பானோ என்று அதிர்ச்சியுடன் மீரா நிமிர்ந்து பார்த்தாள்.

அவனை முன்னே காணவில்லை. திரும்பிப் பார்த்தாள்.

கைகளை மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு குறும்புப் பார்வையுடன் வெகு ஸ்டைலாக நின்று கொண்டு இருந்தான்

முகுந்தன். அவனுடைய உதடுகளில் மெல்லிய புன்னகை தவழ்ந்தது.

குறும்புப் புன்னகையோடு முகுந்தன் நிற்கக் கண்டதும் மீராவுக்கு ஒன்றும் ஓடவில்லை. போதாதற்கு, "எனக்காகக் காத்துக் கொண்டு நிற்கிறாயா, மீரா?" என்று வேறு அவன் சிரித்துக் கொண்டே கேட்டு விட்டான்.

முகுந்தன் தன்னை அறிந்து கொண்டானே! மீரா ஒருகணம் தடுமாறிப் போனாள்.

உடனே சமாளித்துக் கொண்டாள். "மிகவும் கர்வப் படாதீர்கள். உங்களுக்காக நான் ஏன் காத்து நிற்க வேண்டுமாம்? நான் என் பாட்டில் வழக்கம்போல பிள்ளைகளைக் கூட்டிப் போக வந்தேன்" என்றாள் அலட்சியமாகப் பேசுவது போல்.

"ஒகோ, தினமும் வருவாயாக்கும்?" என்று விழிகள் மின்னக் கேட்டான் முகுந்தன்.

"திதி... னமும் என்று இல்லை. விடுமுறை இருக்கும் நாளில் நாலு எட்டில் வருவேன். மாலைப் பலகாரத்தை இங்கேயே சாப்பிட்டுவிட்டு கொஞ்ச நேரம் பொழுது போக்கிவிட்டுப் போவோம்" என்றாள் மீரா.

"இன்றும் அப்படித்தான் வந்தாயாக்கும்?" என்று முகுந்தன் அப்பாவி போலக் கேட்டான்.

"ஆமாம்" என்றாள் அழுத்தமாக.

"சரிதான். ஒரு நிமிடம் இரு மீரா, நான் இதோ வருகிறேன்" என்று முகுந்தன், தான் வந்த வழியே திரும்பிச் சென்றான்.

"இல்லை..... இல்லை, நான் போக வேண்டும், சும்மாவே வழக்கத்தைவிட அரைமணி நேரம் அதிகம் ஆகிவிட்டது. சித்தி

ஏதேனும்'' என்று மீரா அவசரமாகக் கூறியதை முகுந்தன் காதில் வாங்கவே இல்லை.

அவன் போய்க்கொண்டே இருந்தான்.

எங்கே போகிறான்? மீரா திகைத்தாள்!

## 4

முகுந்தன் போன பக்கத்தையே மீரா பார்த்துக் கொண்டே நின்றாள்.

அவன் எங்கே போகிறான், ஏன் போகிறான் என்று அவளுக்குப் புரியவில்லை.

இதற்குள், விளையாடிக் கொண்டு இருந்த குழந்தைகள் ஓடி வந்தார்கள். "வீட்டுக்குப் போகலாமா?" என்று மீராவை கையைப் பிடித்தார்கள்.

யோசனையும் தயக்கமுமாக அவள் நின்றபோது முகுந்தன் திரும்பிவந்தான். அவன் கையில் நான்கு ஐஸ்கிரீம் கிண்ணங்கள் இருந்தன.

அவனைப் பார்த்ததும், குழந்தைகள் உற்சாகம் அடைந்தார்கள்.

அவர்களுக்கு முகுந்தன் ஐஸ் கிரீம் கொடுத்தான்.

மீராவிடம் ஒரு கிண்ணத்தை நீட்டினான்.

அவள் நாணத்துடன் தயங்கினாள். ஆனால், 'வேண்டாம்' என்று சொல்லவும் முடியவில்லை.

இன்னும் பஜ்ஜி இருந்தது. அதில் இரண்டு எடுத்து அவனுக்குக் கொடுக்க மீரா விரும்பினாள். ஆனால் வெட்கம் தடுத்தது.

அதற்குள், 'மாமா, நீங்கள் சாப்பிடுங்கள்'' என்று சசி இரண்டு பஜ்ஜிகளை எடுத்துக் கொடுத்தாள்.

குழந்தைகள் ஐஸ்கிரீமை சுவைத்துச் சாப்பிட்டார்கள்.

முகுந்தனும் அவர்களுடன் அமர்ந்து ஐஸ்கிரீம் காலி செய்தான்.

மீராவும் இருந்தாள். முகுந்தன் அவளுடன் பேசாமல் ''அதோ பாருங்கள், அதுதான் என் அலுவலகம்; அந்தப் பக்கம் போனால் என் வீடு வரும்'' என்று குழந்தைகளுடன் பேசிக் கொண்டே இருந்தான்.

அவனுடன் அமர்ந்து இருப்பது, மீராவுக்கு என்னவோ போல இருந்தது. ''நேரமாகிறது. நாங்கள் கிளம்புகிறோம்'' என்று அவனைப் பார்க்காமலேயே சொன்னாள்.

''என் வீட்டுக்கு வரக்கூடாதா?'' என்று அவளை முகுந்தன் அழைத்தான். ''பக்கத்தில்தானே எல்லோருமாகப் போய்விட்டு விரைவில் வந்து விடலாம்'' என்றான்.

மீரா தயங்கினாள். ''சித்தி தேடுவார்கள். அப்பா கூட வந்து விடுவார்'' என்று மறுத்தாள்.

ஆனால், சசியும் மதுவும் முகுந்தனுடன் வீட்டுக்குச் சென்றனர்.

வீட்டின் முன்புறம் பலவகைப் பூஞ்செடிகள், சசியும், மதுவும் செடிகளிடையே ஓடினர்.

தேவகி அம்மாள் மீராவை வரவேற்றார்.

முகுந்தன் வீட்டைச் சுற்றிக் காட்டினான்.

ஒரு வராண்டா, ஒரு படுக்கை அறை, ஒரு சமையல் அறை, குளியல் அறை எல்லாம் கச்சிதமாக இருந்தது.

ஆனால் "ஒரு ஆள்கூட வந்தால் இருக்க இடம் இல்லை" என்று லேசாகக் குறைபட்டார். முகுந்தனுடைய தாயார்.

"அந்த ஒரு ஆள் வரும்போது வேறு வீடு பார்த்துக் கொள்ளலாம் அம்மா" என்று சிரித்தான் முகுந்தன்.

"உன்னோடு யார் பேசுவதாம்?" என்று புன்னகையோடு உள்ளே போனார், தேவகி அம்மாள்.

"மீரா இங்கே பார்த்தாயா? இவை எல்லாம் பள்ளியில் கல்லூரியில் நான் வாங்கிய பரிசுகளாக்கும்" என்று ஓர் அலமாரியில் வரிசையாக இருந்த வெள்ளிக் கோப்பைகளை முகுந்தன் காட்டினான்.

கோப்பைகளின் எண்ணிக்கையைப் பார்த்ததும் மீரா வியப்புடன் விழிகளை விரித்தாள்.

"நிறைய இருக்கிறது அல்லவா? படிப்பு, விளையாட்டு இரண்டிலுமே நான்தான் முதல்" என்றான் முகுந்தன் பெருமிதத்தோடு.

"அடேயப்பா , என்ன பெருமையடா" என்றாள் மீரா.

"ஆமாண்டி" என்றான் முகுந்தன்!

மீரா திடுக்கிட்டாள். "யாரை 'டி' என்கிறீர்கள்" என்று விறைப்போடு கேட்டாள்.

"நீ யாரை 'டா' என்றாய்!"

"நான் எப்போது?" என்று மீரா புரியாமல் விழித்தாள்.

"இப்போது 'என்ன பெருமையடா?' என்றாயே."

"நான் உங்களையா சொன்னேன்?"

“வேறு யாரைச் சொன்னாயாம்? இங்கே வேறு ஒருவரும் இல்லையே” என்று மடக்கினான் முகுந்தன்.

மீரா திகைத்தாள். சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னால் இது என்ன குதர்க்கம்? சரியான சண்டைக்காரன் போலும்? பிரமிப்புடன் முகுந்தனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் புன்னகையோடு தன் முகத்தையே பார்ப்பதைப் கண்டாள், முகம் சிவந்து தலை குனிந்தாள்.

தேவகி அம்மாள் கையில் பலகாரத் தட்டுகளோடு வந்தார். “அவனிடம் வாய் கொடுக்கிறாயே, அந்த வாயாடியிடம் பேசி யாரால் மீள முடியும்?” என்று மகனை செல்லமாகப் பார்த்துச் சிரித்தார்.

‘எங்கள் பேச்சைக் கேட்டிருப்பார்கள் போலும்’ என்று மீரா நினைத்தாள். ஆனால் அந்தச் சின்ன வீட்டில் கேளாமல் இருக்கவும் வழி கிடையாதுதான்.

பூஞ்செடியைப் பார்த்துக் கொண்டு நின்ற சசியையும் மதுவையும் முகுந்தன் அழைத்து வந்தான். இருவரிடமும் இருதட்டு பலகாரங்களைக் கொடுத்து விட்டு மீராவிடமும் ஒன்றை நீட்டினார் தேவகி, “சாப்பிடுங்கள்” என்று அன்போடு கூறினார்.

தட்டில் பால்கோவாவும் மிக்சரும் இருந்தன. மீராவுக்கு இனிப்பை விடக் காரம்தான் விருப்பம். மிக்சரை எடுக்கப் போனாள்.

அவளையே பார்த்துக் கொண்டு இருந்த முகுந்தன் சட்டென, “முதல் முறையாக வந்து இருக்கிறாய். முதலில் இனிப்பு சாப்பிடு மீரா” என்றான் மிருதுவான குரலில். ‘சற்றுமுன் சீண்டினானே, இவன் பேச்சுக்குப் பணிவதா’ என்று தோன்றியது. மிக்சரைத் தட்டில் போடாமலே அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் பார்வையில் மனம் குழம்பிக் குனிந்தாள். கையில்

இருந்ததைத் தவிர்த்து பால்கோவாவை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள்.

இருவரையும் கவனித்துக் கொண்டு இருந்த தேவகியின் முகம் மலர்ந்தது.

"அக்கா இப்போது மீராவைப் பார்க்க வேண்டும்" என்று திடீர் என்று சொல்லி குபீர் என்று சிரித்தான் முகுந்தன்.

"எனக்குக்கூட அக்காவைப் பார்க்க ஆசைதான். ஆனால், நீங்கள் ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டாள் மீரா.

"அக்காவுக்கு நீ இன்னும் சின்ன பாப்பா என்ற எண்ணம். மீராவுக்கு 'லாலிபாப்' மிகவும் பிடிக்கும் என்று சொல்லிக் கொண்டு இருந்தாள்" என்று மீண்டும் சிரித்தான் முகுந்தன்.

மீராவும் சிரித்து விட்டாள்.

"ஆனாலும் மீராவின் வளர்ச்சியை நம்பவே முடியவில்லை, இல்லையாம்மா? குள்ள வாத்து என்று என் வாயால் நானே கேலி செய்த அந்தப் பெண்!"

"நீங்கள் மட்டும் எப்படியாம்? அப்பா சொன்னதும் நான் கூடக் குச்சி குச்சியாய் எட்டுக்கால் பூச்சி மாதிரிக் கையும் காலும் உள்ள ஒரு பையனைத்தான் எதிர்பார்த்தேன்" என்றாள் பதிலுக்கு.

"குச்சி குச்சியாகவா? நா...னா?" முகுந்தன் நம்பாதவன் போல் கையை முறுக்கிப் பார்த்தான். தசைகள் திண்ணென்று எழுந்தன.

"அவள் சொல்வது மெய்தானடா. நீ முன்பெல்லாம் என்ன தின்றாலும் ஒல்லியாகத்தான் இருப்பாய்" என்றார் தேவகி.

பலவாறான பேச்சில் நேரம் போவதே தெரியவில்லை. சுவர்க் கடிகாரத்தில் ஆறு மணி அடிக்கவும் மீரா திடுக்கிட்டுப் போனாள்.

“நேரமாகி விட்டதே அத்தை. நான் கவனிக்கவே இல்லையே” என்று பதறிப்போய் எழுந்தாள்.

“அவ்வளவு பதட்டம் ஏன்? உன் சித்தி உனக்காக ஏங்கித் தவித்து விடுவார்களோ?” என்று ஏளனமாகக் கேட்டபடி முகுந்தனும் எழுந்தான்.

“தவிக்கிறார்களோ இல்லையோ, நேரத்துக்கு வீடு திரும்ப வேண்டியது என் கடமைதானே” என்று பதில் சொன்னாள் மீரா.

முகுந்தன் ஏதோ கூற, வாயெடுத்தான். அதற்குள் தேவகி குறுக்கிட்டார் “முகுந்தன், நேரமாகிவிட்டது. காலம் கிடக்கிற கிடப்பில் இந்நேரத்தில் அவள் தனியே செல்ல வேண்டாம். நீ கூடப் போய் அவளை வீட்டில் விட்டு விட்டு வா” என்று பணித்தார்.

“வேண்டாம்” என்று சொல்ல மீராவுக்கு வாய் வரவில்லை அதிக நேரமாகி விட்டதாலோ! அல்லது அவன் தன்னோடு வரவேண்டும் என்று விரும்பினாளோ!

முகுந்தனும் மறுபேச்சின்றி மிதியடிகளை மாட்டிக் கொண்டு கிளம்பினான்.

மீராவும் முகுந்தனும் சிறுவர்களோடு செல்லுவதை அவர்கள் மறையும் வரை தேவகி பார்த்துக் கொண்டு நின்றார்.

அவர் மனதில் ஒரு திட்டம் உருவாகியது!

# 5

எல்லோரும் பஸ் ஏறி இறங்கி வீடு சென்று சேர்ந்த போது, தில்லைநாதர் வாசலில் நின்றிருந்தார்.

அவர்களைக் கண்டதும் "அப்பாடா! வந்தீர்களா?" என்று நிம்மதிப் பெருமூச்செறிந்தார்.

"நான்தான் வந்து விடுவார்கள் என்றேனே சின்னப் பாப்பாக்களா? மீரா பெரிய பெண் இல்லையா? அப்படியா தொலைந்து போவார்கள்? எங்கே எங்கே என்று நீங்களும் பதறி, என்னையும் படிக்கவிடாமல் தொண தொணத்து விட்டீர்களே" என்று பொரிந்து தள்ளினாள் நாயகி.

"ஏண்டி மீரா போனால் நேரத்துக்கு வருகிற அளவு அறிவு இல்லையா?" என்று மீராவிடம் ஓர் அதட்டல் போட்டாள்.

அப்போதுதான் முகுந்தனைப் பார்த்தவள் போல் "வாங்க தம்பி" என்று வரவேற்றாள்.

முகுந்தன் நிதானமாக அவளைப் பார்த்தான். "பரவாயில்லையே, நீங்கள் டெக்னிக் கலராகப் படிக்கிறீர்களே?" என்றான்.

நாயகி புரியாமல் விழித்தாள்..

முகுந்தன் விளக்கம் கூறினான். "நேற்று ஏதோ பச்சையம்மன் என்று, காலையில் மஞ்சள் மாளிகை, இப்போது சிவப்பு இரத்தம். இதற்குள்ளேயே மூன்று நிறங்கள் ஆகிவிட்டனவே அதைத்தான் சொன்னேன்" என்றான் சற்றே ஏளனமாக.

மீராவுக்குப் புன்னகை அரும்பியது. தன்னை அதட்டியதற்காக அவன் சித்தியைப் பழி வாங்குகிறான் என்பதைப் புரிந்து கொண்டாள்.

நாயகி பிறகும் சற்று விழித்துவிட்டு, "நல்ல புத்தகம் தம்பி, இந்தக் கதை நன்றாகப் போகிறது" என்றாள். மேலே, எதுவும் சொல்லி விடுவானோ என்று அஞ்சியவள் போல, "கதை இப்பொழுதுதான் வேகமாகப் போகிறது" என்று உள்ளே நழுவி விட்டாள்.

முகுந்தனும் விடை பெற்றுக் கொண்டு சென்றான்.

அவன் செல்வதையே பார்த்துக் கொண்டு நின்ற மீராவை தில்லைநாதர் வீட்டுக்குள் அழைத்துப் போனார்.

பூங்காவில் சந்திப்புகள் அடிக்கடி நடந்தன.

முகுந்தனைக் காணத் தன் மனம் ஏங்குவதையும், கண்டால் படபடப்பதையும், அவன் சிரிப்பில் தன் உள்ளம் குளிருவதையும் மீரா உணர்ந்தாள். அவள் மட்டும் இன்றி தேவகியும் உணர்ந்தாரோ?

ஒரு நாள் மாலை அவரும் உடன் வந்தார். உள்ளே வரவும், "முகுந்தண்ணா, பழைய டின்னை வைத்து நாங்கள் ஓர் கார் செய்து இருக்கிறோம் பாருங்களேன்" என்று மதுவும் சசியும் முகுந்தனைப் பக்கத்து அறைக்கு இழுத்துச் சென்றனர்.

"நீ சற்று உள்ளே போ மீரா" என்றார் முகுந்தனுடைய தாயார் தேவகி.

மாறு சொல்லாமல் மீரா உள்ளே சென்றாள். ஏதோ தோன்றவும் ஓசைப்படாமல் நடந்து மீண்டும் வந்தாள். கதவின் பின்னே மறைந்து நின்று கொண்டு வரவேற்பு அறையில் நடந்த பேச்சுக்களை கேட்டாள். அதாவது ஒட்டுக் கேட்டாள்.

ஒட்டுக் கேட்பது தவறு என்று மீராவுக்குத் தெரியும். ஆனால் முகுந்தனின் அன்னை தன்னை உள்ளே செல்லுமாறு

சொன்னதில் இருந்து பேச்சு தன்னைப் பற்றித்தான் என்று புரிந்து கொண்டாள். 'என்னைப்பற்றி எனக்குத் தெரியாமல் என்ன பேச்சு' என்று தோன்றவும் வீம்புடன் ஒட்டுக் கேட்க ஓடி வந்து விட்டாள்.

"...... செய்ய வேண்டியதுதான். பணம் இல்லையே" என்று தில்லைநாதர் ஏதோ சொல்லிக் கொண்டு இருந்தார்.

"பணம் ஏன் இல்லை, அண்ணா? என்றைக்குப் பெண் பிறக்கிறதோ அன்றைக்கே அதன் கன்னி கழிக்கும் கடனும் பெற்றோருக்குத்தானே? அதற்கு ஆகும் செலவுக்குச் சேர்த்து வர வேண்டாமா?" என்று கேட்டார் தேவகி.

'ஓகோ. என் திருமண விஷயமா?' என்று எண்ணிக் கொண்டாள் மீரா.

"எப்படி சேர்ப்பது மதினி? இங்கேதான் 'கடுகை எண்ணிப் போடவா? அரிசியை நிறுத்துப் போடவா?' என்பது போல, வரவுக்கும் செலவுக்கும் சரியாகப் போய் விடுகிறதே! நன்றாக உண்டு உடுக்கக்கூட முடியவில்லை!" என்றாள் நாயகி.

உண்டு உடுக்கவில்லை என்றதும் தில்லைநாதருக்கு ரோசம் வந்தது. "என்னவோ பட்டினி கிடந்த மாதிரி அல்லவா பேசுகிறாய்? எனக்கு சம்பளம் ரூ. 200 தான் என்றாலும் நிலத்து குத்தகையோடு சராசரி மாதம் ஐந்நூறு ரூபாய் வரவில்லையா? நாம் சிக்கனமாக இருந்திருந்தால் இப்போது மீராவின் திருமணத்திற்குப் பணம் இல்லாமல் கையைக் கட்டிக் கொண்டு இருக்கத் தேவையே இல்லையே" என்றார்.

"ஆமாம் ஆமாம். இன்னமும் சிக்கனமாக இருக்க வேண்டியதுதான். இப்போதே இந்தப் பிசாசுகளை நோயும் நொடியும் பிடுங்கித் தின்கின்றன. இன்னமும் கஞ்சத்தனம் செய்தால் எலும்பு, மேல் தோல் தவிர ஒன்றும் இராது. விரைவில்

அதையும் குழிக்குள் போட்டு விட்டு நிம்மதியாக இருக்கலாம்" என்று சினத்துடன் வெடு வெடுத்தாள் நாயகி.

மீராவுக்கு திக்கென்றது. 'இந்தச் சித்தி எவ்வளவு கடுமையாகப் பேசுகிறாள்! குழிக்குள் போடுவதாமே' மீரா மேலே வருமுன் தேவகியின் குரல் கேட்டது.

"அந்த மாதிரி பேச்செல்லாம் வேண்டாம் நாயகி, ஏன் அண்ணா, மீராவின் திருமணத்துக்குக் கொஞ்சம் கூடச் சேர்க்கவில்லையா?" என்று தெளிவாகக் கேட்டார்.

"இல்லையே தங்கச்சி!" என்றார் தில்லைநாதர் குன்றிப் போய்.

"அண்ணியின் நகைகள்..."

"அதெல்லாம் பத்திரமாய் இருக்கின்றன. நான் தொட்டது கூடக் கிடையாது" என்றாள் நாயகி.

"அதில் ஒன்றிரண்டை விற்று..." என்று சொல்லு முன் கணவனும் மனைவியும் குறுக்கிட்டனர். "அந்தப் பேச்சு மட்டும் வேண்டாம்" என்றனர்.

தேவகி புரியாமல் விழித்தாள்.

"பிறகு இளையாள் தின்று தீர்த்துவிட்டாள் என்பார்கள்" என்றாள் நாயகி.

"அவள் சாகிறபோது அந்த நகைகளை அப்படியே மீராவுக்குப் போட வேண்டும் என்றாளே, மறந்து விட்டதா தங்கச்சி?" என்றார் தில்லைநாதர்.

"அந்த நகை போட்டாவது திருமணம் என்று ஒன்று நடக்க வேண்டும் அல்லவா?" என்றார் தேவகி. "ஊரில் உள்ள நிலத்தில் கொஞ்சத்தை..."

"ஊகூம். அது எப்படி? நிலத்தை விற்று விட்டால் இங்கே சாப்பாட்டுக்கு என்ன செய்வது? காற்றைக் குடித்து வாழ நான்

என்ன பாம்பா? நீங்களே சொல்லுங்கள், அக்கா?" என்றாள் நாயகி.

உள்ள வசதிகளை எள்ளளவும் குறைத்துக் கொள்ள நாயகி தயாராக இல்லை.

தேவகி பெருமூச்சு விட்டார். "ம்... மீராவுக்கும் வயது பத்தொன்பது முடிந்து விட்டது. சீக்கிரமாக கல்யாணம் செய்தால் தான் நன்றாக இருக்கும். இனியேனும் கொஞ்சம் பணம் சேர்க்க முயற்சி செய்யுங்கள். ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். அண்ணா தப்பாக எண்ண வேண்டாம்" என்று எழுந்தாள் முகுந்தனைப் பெற்றவள்.

அவள் சென்றதும் நாயகி ஒரு மூச்சுப் பொரிந்தாள். "பெற்றவர்களுக்கு இல்லாத அக்கறை மற்றவர்களுக்கு வந்து விட்டது. அப்படி உருகி வழிகிறவர்கள் தன் மகனுக்கு சும்மா செய்து கொள்வதுதானே? அது மாட்டார்கள். நம்மிடம் உபதேசிக்க வந்து விட்டார்கள். இங்கே கொட்டிக் கிடப்பதை நான் கரைத்துக் கொண்டு இருப்பது போல் பேச்சு வேறு. அவரவர் காரியத்தைப் பார்த்துக் கொண்டு போகாமல் அடுத்தவர் வீட்டில் மூக்கை நுழைக்கிறார்களே" என்று ஆத்திரத்துடன் மொழிந்தாள்.

"அவர்கள் சொல்வதும் நியாயந்தானே நாயகி" என்று மெல்லச் சொன்னார் தில்லைநாதர்.

"இந்த ஞானோதயம் முன்பே பிறந்து நிறையச் சம்பாதித்து இருக்க வேண்டும்" என்று குத்தினாள் நாயகி.

"என் சம்பாத்தியத்தில்..."

"உங்கள் சம்பாத்தியத்தில் இதை விட சிக்கனமாய் இருந்து அரை வயிற்றுக்கும் கால் வயிற்றுக்குமாய்ச் சாப்பிட என்னால் ஆகாது. மூத்தாள் மகளுக்காகப் பட்டினி கிடக்க நான்

உங்களுக்கு இரண்டாம் தாரமாக வாழ்க்கைப் படவில்லை" என்று முத்தாய்ப்பாக முடித்து விட்டு அகன்று விட்டாள் நாயகி.

இதை எல்லாம் கேட்டுக் கொண்டே நின்ற மீரா யோசனையில் ஆழ்ந்தாள்.

வெறும் உள்ளத்தின் துள்ளலில் எல்லாம் முடிந்து விடாது. இதயங்கள் ஒன்றுபட்டு இணையும் திருமணம் நடக்க வேண்டுமானால் பணம் வேண்டும். தில்லைநாதரிடம் இல்லாத பணம்... அது எங்கிருந்து வரும்?

## 6

மீராவுக்கு அன்று இரவு முழுவதும் தூக்கம் இல்லை.

மீண்டும் மீண்டும் அந்தப் பணப்பிரச்சினையே அவள் மனதைக் குழப்பியது. ஒருவேளை இப்படி எல்லாம் குழம்பித் தவிப்பாளே என்றுதான் அவளை அங்கிருந்து போகச் சொன்னாரோ என்னவோ!

மீரா இதுவரை திருமணத்தைப் பற்றி அதிகம் நினைத்தது இல்லை. எல்லோரையும் போல ஒரு நாள் திருமணம் நடக்கும் என்று எண்ணி இருந்தாளே தவிர, அது என்று நடக்கும் எப்படி நடக்கும் என்று கற்பனையில் இறங்கியது இல்லை. அப்படி இறங்க அவளுக்கு நேரமும் இல்லை.

மீரா பன்னிரண்டு வயதுச் சிறுமியாக இருந்தபோது நாயகிக்கு சசியும் மதுவும் இரட்டையராகப் பிறந்தனர். கொஞ்சம் சிரமமான பிரசவம். கடவுள் அருளால்தான் நாயகி தப்பித்தது.

ஆனால், உடல் நலம் தேற வெகு நாள் ஆயிற்று. மீரா இயல்பாகச் சிற்றன்னையின் உதவிக்கு வந்தாள். பள்ளிக்குச் செல்லு முன்னும், பள்ளியில் இருந்து வந்த பிறகும் தம்பியையும் தங்கையையும் கவனிப்பதில் தன்னால் ஆனதைச் செய்தாள். இயற்கையிலேயே சூடிகையான பெண் என்பதால் பள்ளியிலும் தவறாமல் பாஸ் செய்து வந்தாள்.

வீடு இருந்த நிலையில் அவளது படிப்பு தொடர்ந்ததே அதிசயம். படிப்பை நிறுத்தினால், பள்ளிக்கு செல்ல விடாமல் இளையாள் வேலை வாங்குகிறாள் என்ற கெட்ட பெயர் வந்து விடுமே என்ற நாயகியின் அச்சம்தான் மீரா மேலும் படிக்க உதவி செய்தது.

படித்த போதும் அவளுக்குப் பள்ளியிலோ, கல்லூரியிலோ தோழிகள் என்று யாரும் இல்லை. அப்படித் தோழிகள் தேடிப்பழகும் அளவுக்கு பொழுது கிடைக்கவும் இல்லை. உடனொத்த பெண்களின் எண்ணங்களை அனுபவங்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பு மீராவுக்கு இல்லை. அறிந்து கொண்டு மனதை குழப்பிக் கொள்ளவும் இல்லை. வீடு, தம்பி, தங்கைகள், தந்தை. சிற்றன்னை என்று அவள் வட்டம் சிறியதாக சலனமற்று அமைதியாக இருந்தது.

அவளுடைய அந்த அமைதியில் அலையெழுப்ப முகுந்தன் வந்து சேர்ந்தான். அவளைச் சீண்டினான்; சிரிக்க வைத்தான்; சிந்திக்கவும் வைத்தான். உள்ளூர அவனோடு இணைந்த வாழ்வைப் பற்றி எண்ணங்கள் பிறந்தன; வளர்ந்தன. அப்போது அவள் திருமணத்தைப் பிரச்சினையாக எண்ணவில்லை, காதல் கனிந்ததும் கல்யாணம் தானே என்று எளிதாக நினைத்து விட்டாள்.

இன்று தேவகியின் பேச்சு புதிய பாதையில் மனதைத் திருப்பி விட்டது. திருமணத்துக்குப் பணம் தேவை அந்தப் பணம் இன்று தந்தையிடம் இல்லை. இன்று மட்டும் அல்ல

என்றுமே அந்தப் பணம் சேர வழியும் இல்லை என்ற போது மீரா யோசனையில் ஆழ்ந்தாள்.

இன்றைக்கே முகுந்தனோடு வாழ்வில் இணைந்துதான் ஆக வேண்டும் என்பது இல்லை. ஆனால் என்றைக்காவது இணைய முடியுமா? வீட்டின் நிலை அதைச் சந்தேகத்தில் ஆழ்த்தியது. வேதனையைக் கொடுத்தது.

இதில் இருந்து மீள வழி தேடினாள். நீண்ட சிந்தனைக்குப் பிறகு ஒரு வழி கிடைத்தது. உடனடியாகச் செயலாக்கவும் திட்டமிட்டாள்.

மறு நாள் காலைப் பத்திரிகையை மிகவும் ஊன்றி, ஆராய்ந்தாள். சில குறிப்புகள் எழுதிக் கொண்டாள். நாயகி சமையல் வேலையில் இருந்த போது மெல்லத்தந்தையிடம் வந்தாள்.

"அப்பா, ஒரு விஷயம்" என்றாள் மெல்லிய குரலில்.

"என்னம்மா?"

"ஸ்... மெல்ல அப்பா... அப்பா... வந்து நான் வேலை பார்க்கப் போகிறேன்" என்று சொல்லியே விட்டாள்.

"என்னது" என்று தில்லைநாதர் வாயைப் பிளந்தார்.

"இதிலே என்னப்பா அவ்வளவு அதிசயம்?" என்றாள் மீரா சற்று எரிச்சலுடன்.

"இல்லேம்மா, நம்ம குடும்பத்தில் இதுவரை பெண்கள் வேலைக்குப் போனது இல்லையே" என்று இழுத்தார்.

"இப்போது போய் விட்டால் போகிறது. எதற்கும் முதல் தடவை ஒன்று இருக்கத்தானே செய்யும்" என்றாள் மீரா. குரலில் மெல்லிய பிடிவாதம் தெரிந்தது.

"அது சரிம்மா. ஆனால் உனக்கு வேலை யார் தருவார்கள்? பெரிய பெரிய பட்டங்கள் வாங்கியவர்கள் கூட ஆடிக் காற்றுச்

சருகு போல் பறக்கிறார்கள். உன் பரீட்சை முடிவு கூட இன்னமும் வரவில்லையே. சிபாரிசு தேடக்கூடப் பெரிய புள்ளிகள் யாரையும் எனக்குத் தெரியாது..."

"அது பரவாயில்லை அப்பா. நான் விடுமுறை நாட்களில் படித்த டைப்ரைட்டிங்கும், சுருக்கெழுத்தும் கை கொடுக்கும் பி. ஏ. பரீட்சை முடிவு வராவிட்டாலும் நான் பி. யு. சி. தேர்ந்தவள்தானே? அந்தத் தகுதிக்கு உரிய வேலை கிடைக்காதா? வேலைக்கு ஆள் தேவை என்று இன்று கூட விளம்பரம் வந்து இருக்கிறது பாருங்கள்" என்று மீரா பத்திரிகையை எடுத்துக் காட்டினாள்.

"அடேடே, என்னம்மா ஒரே மும்முரம்?" என்று ஆச்சரியப்பட்டார் தில்லைநாதர்.

அவ்வளவுதான், மீராவின் முகம் ஒரேயடியாகச் சிவந்து போயிற்று. மகளுடைய முகத்தைப் பார்த்த தில்லைநாதர் திகைப்படைந்தார்.

"என்னம்மா விஷயம்?" என்று வியப்புடன் கேட்டார்.

மீராவிடம் எல்லாமே பட்பட்டென்றுதான் இருக்கும். தயக்கம் தடுமாற்றம் ஒன்றும் கிடையாது. கை விரல்களை முறுக்கிக் கொண்டு தலை நிமிராமல் அவள் பதில் சொன்னது அவருக்கு வேடிக்கையாக இருந்தது.

"ம்... நேற்று... அத்தை சொன்னார்களே."

"அத்தை என்ன சொன்னார்கள்?" இன்னமும் விளங்காதவராகத் தில்லைநாதர் கேட்டார்.

"அதாம்பா, பணம் இப்போது இல்லை என்று சேர்க்க வேண்டும் என்றார்களே!"

"எதற்கு?... ஓகோகோ, உன் திருமணத்துக்காக! நீ கேட்டுக் கொண்டு தான் இருந்தாயா?"

"ஆமாம் அப்பா... அப்பா... வந்து..."

"சொல்லம்மா."

"நான் வேலை பார்த்தால் மாதம் இருநூறு ரூபாய் கிடைத்தால் கூட மற்ற செலவு போக ஆண்டுக்கு இரண்டாயிரம் ரூபாய் மிஞ்சுமே. அவ்வளவு போதாதா?"

ஒரு வழியாகக் கேட்டு முடித்தாள் மீரா.

'அட என் கெட்டிக்காரப் பெண்ணே' என்று மனதிற்குள் மெச்சிக் கொண்டார் தில்லைநாதர். கூடவே குற்ற உணர்ச்சியும் தோன்றாமல் இல்லை. அவர் செய்திருக்க வேண்டியது, மகள் தானே செய்து கொள்கிறேன் என்கிறாள் - அதுவும் அவரை ஒரு வார்த்தைகூடக் குறை கூறாமல்.

"அப்படியே செய்யலாம் மீரா. ஆனால் வேலை கிடைக்க வேண்டும். அதுதான் கஷ்டம்" என்றார் தில்லைநாதர்.

"எல்லாம் கிடைக்கும் அப்பா. நீங்கள் முதலிலேயே ஏதாவது சொல்லாதீர்கள்" என்று உள்ளே போனாள் மீரா.

அவளுக்கு ஒரே உற்சாகம். குடும்பத்தில் இல்லாத வழக்கம், அது இது என்று ஏதேனும் சொல்லி தில்லைநாதர் மறுத்து விடுவாரோ என்று பயந்து கொண்டு இருந்தாள். இப்போது அவர் பச்சைக் கொடி காட்டி விடவும் மகிழ்ச்சி தாங்கவில்லை. எப்போது மாலை வரும், முகுந்தனிடம் கூறலாம் என்று ஆவலோடு காத்திருந்தாள்.

ஆனால் மாலை வந்தவிதம் வேறாக இருந்தது.

முகுந்தனுடைய தமக்கை திருமணமாகி பெங்களூரில் இருந்தாள். அவளுக்குத் திடீர் என்று குறைப்பிரசவம் ஆகிவிட்டதாம். அன்னையை உடனே வரச் சொல்லி தகவல் வந்தது.

முகுந்தன் தன் அவசரத்தோடு அவசரமாக நண்பனிடம் ஸ்கூட்டரை இரவல் வாங்கிக் கொண்டு மீராவிடம் சொல்ல வந்தான்.

தாயாரைப் பெங்களூரில் விட்டு விட்டு ஒரு நாள் தங்கியிருந்து பார்த்து விட்டு வரப் போவதாகக் கூறினான்.

"ஒரு வேளை நீ பூங்காவுக்கு வந்தால் வீணாகக் காத்திருக்கப் போகிறாளே என்றுதான் சொல்ல வந்தேன்" என்றான்.

பிறகு, "எனக்கு மிகவும் அவசரம் மீரா. நான் வரட்டுமா?" என்று பறந்து கொண்டு போய் விட்டான்.

மீரா ஏமாற்றத்துடன் அவனைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

## 7

பத்திரிகையில் கண்ட விளம்பரத்துக்கு மீரா ஒரு விண்ணப்பத்தை அனுப்பினாள்.

சில நாட்களில் பதில் வந்தது - நேர்முகத் தேர்வுக்கு வரும் படியாக.

பதில் வந்த தினம் தான் முகுந்தனும் பெங்களூரில் இருந்து திரும்பி வருவதாக இருந்தது. மீரா மாலை சிற்றுண்டியை எடுத்துக்கொண்டு கிளம்பினாள்.

பிள்ளைகள் மீராவைக் கண்டதும் குதித்தனர். "ஹையா, பூங்காவுக்குப் போகிறோம். முகுந்தண்ணா வருவார்" என்று அவர்களுக்குக் குதூகலம்.

"வருவாரோ, என்னவோ?" என்று சீண்டினாள் மீரா.

"ஆங். எல்லாம் வருவார்" என்று மது கத்தினான்.

மூவரும் பூங்காவினுள் சென்று அமர்ந்தார்கள்.

மீரா 'சென் அன் கோவை'யே பார்த்தபடி இருந்தாள். மனதில் ஏதேதோ யோசனைகள். ஒரு வேளை அவன் பெங்களூரில் இருந்து வந்திருக்க மாட்டானோ என்று கூட ஒரு கணம் அஞ்சி விட்டாள்.

ஆனால்... அதோ!

மீராவின் கண்கள் மலர்ந்தன. முகுந்தன் வந்து கொண்டு இருந்தான். வேறு யார் இவ்வளவு உயரமாக, வாட்ட சாட்டமாக கம்பீரமாக இருக்கப் போகிறார்கள்?

கண்ணை இமைக்கக்கூட மறந்து அவனையே நோக்கினாள். அதற்குள் முகுந்தனும் மீராவைப் பார்த்து விட்டான்.

"ஹே, மீரா வந்து அதிகநேரம் ஆயிற்றா?" என்று புன்னகையோடு கேட்டான்.

"இல்லையே" என்றாள் மீரா சிரிப்போடு. மிஞ்சி மிஞ்சிப் போனால் கூட சில நூறு நிமிடங்கள் தான் இருக்கும். அது என்ன அதிக நேரமா?" என்று குறும்போடு கண்களை அகல விரித்தாள்.

முகுந்தனுக்குச் சிரிப்பு வந்தது. "வாயைப் பார் வாயை" என்றான் சிரித்தபடியே.

"இதோ பாருங்களேன்" என்று தலையைச் சற்றே சரித்து உதட்டைக் குவித்தாள் மீரா.

ரோஜா இதழ் போலச் சிவந்த அழகிய அதரங்கள்.

சட்டெனக் குனிந்து அந்த மலர் இதழ்களில் முத்தமிட வேண்டும் போல் இருந்தது அவனுக்கு. ஆனால் அதற்கு இது இடமா?

சொல்லப் போனால் காலம் கூடக் கனியவில்லை. அப்படியெல்லாம் மனதை அலையவிடக் கூடாது. மீராவின் வீட்டு நிலைமையில் அவள் மனதை அலைபாய வைப்பது பெரும் தவறும் கூட. அம்மா வேறு... முகுந்தன் மிகவும் சிரமத்துடன் மனதை அடக்கினான்.

அவன் வலுக்கட்டாயமாகப் பார்வையைத் திருப்பினான். சுற்றும் முற்றும் பார்த்தான். "உன் வானரப் படைகள் எல்லாம் எங்கே மீரா?" என்று விளையாட்டாகக் கேட்டான்.

"ஒரு தங்கை, ஒரு தம்பி. ஆக இரண்டே இரண்டு. இதுவே படையா? அதுவும் வானரங்களா? இருங்கள் சொல்லுகிறேன்" என்று மிரட்டுவது போலச் சொன்னாள் மீரா. "சசி, மதூ..." என்று குரல் கொடுத்தாள்.

இருவரும் ஓடி வந்தனர். முகுந்தனுடைய கைகளை ஆளுக்கு ஒன்றாகப் பிடித்துக் கொண்டு, "முகுந்தண்ணா?" என்று குதித்தனர்.

மீரா மனத்திற்குள் சொல்லிக் கொண்டாள். 'இந்த வேலை கிடைத்து விட்டால், இன்னும் ஓர் ஆண்டுதானடா இவர் உனக்கு முகுந்த அண்ணன்; பிறகு வேறு முறையாக்கும். 'முகுந்தன் அத்தான்' என்று மனதோடு சொல்லிப் பார்த்துக் கொண்டாள். நெஞ்சின் இனிப்பு கன்னங்களில் செம்மை பூசியது.

முகுந்தன் கைகளை விடுவித்துக் கொண்டு இருவருக்கும் சாக்லெட்டுகளைக் கொடுத்தான்.

"அக்கா எப்படி இருக்கிறார்கள்?" என்று மீரா விசாரித்தாள்.

"கொஞ்சம் பலவீனமாக இருக்கிறாள். வேறு ஒன்றும் இல்லை. மனதுதான் நொந்து வருவது போல் இருக்கிறது. வேடிக்கையாக இருக்கிறது. முதலில், இரண்டு ஆயிற்று, இனித் தேவை இல்லாத போது வந்து இருக்கிறதே என்று சொல்லிக்கொண்டு இருந்தாள். இப்போது போய்விட்டதே என்று

வருத்தப்படுகிறாள். பெண்புத்தி பின்புத்தி" என்று சிரித்தான் முகுந்தன்.

"பெண்புத்தி என்றால் மட்டமோ?" என்று கேட்டாள் மீரா.

"அய்யோ, அதற்குள் கொண்டையைச் சிலுப்பும் சண்டைக் கோழி மாதிரிப் பாய்கிறாயே. நேரத்துக்கு ஒன்று தோன்றுகிறதே என்றுதான் சொன்னேன்" என்றான் முகுந்தன்.

மீரா ஒரு நிமிடம் பேசாதிருந்தாள். 'இந்த வாய்த்துடுக்கு' என்று நினைத்துக் கொண்டாள். பிறகு சொன்னாள். "முகுந்தன், நீங்கள் வர வேண்டுமே என்று நினைத்தேன் உங்களிடம் ஒரு முக்கியமான சேதி சொல்ல வேண்டும்."

"என்ன விஷயம்" என்று கேட்டான் முகுந்தன்.

"நான் வேலை பார்க்கப் போகிறேன்."

"வீட்டில் இப்போதும் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறாய்?"

"அதல்ல முகுந்தன், வெளியே ஒரு கம்பெனியில் சம்பளத்துக்காக வேலை பார்க்கப் போகிறேன்" என்று மீரா பெருமையுடன் அறிவித்தாள்.

முகுந்தனுடைய முகத்தில் சிரிப்பு மறைந்தது "ஏன்?" என்ற கேள்வி ஒற்றைச் சொல்லாகப் பிறந்தது.

'உனக்கும் எனக்கும் திருமணம் நடப்பதற்காகத்தான் - அதற்குப் பணம் சேர்ப்பதற்காக நான் வேலை பார்க்கப் போகிறேன்' என்று எப்படி சொல்லுவது? அதுவும் தன் மனதை இன்னமும் வார்த்தைகளால் வெளியிடக்கூட இல்லாத அழுத்தக்காரனிடம்? மீரா பதில் சொல்லாமல் புன்னகை செய்தாள்.

"ஏன் என்று கேட்டேன்."

"ம்... ஏதோ அப்படி எனக்கு ஓர் ஆசை என்று வைத்து கொள்ளுங்களேன்" என்றாள், மீரா - உள் சிரிப்புடன்.

முகுந்தன் அவளைக் கூர்ந்து பார்த்தான். "உன் முகத்தைப் பார்த்தால் வெறும் ஆசைக்காக வேலை தேடுவது போல் இல்லை. ஏதோ திட்டம் இருக்கிறது. என்ன அது?"

மீரா முகுந்தனுடைய மாறுதலைக் கவனிக்கவில்லை. "ஊகூம், நான் சொல்ல மாட்டேன்" என்று கன்னங்களில் குழிவிழப் புன்னகை செய்தாள்.

"உனக்கு எவன் வேலை கொடுப்பான்?" என்றான் முகுந்தன் சினத்துடன். அவன் குரலில் பேதம் நன்றாகத் தெரிந்தது.

அப்போதுதான் முகுந்தன் தன்னுடன் இணைந்து பேச வில்லை என்பதை மீரா உணர்ந்தாள். ஆனால்,. அவன் தூக்கி எறிந்தாற் போலப் பேசியது அவளுக்கும் சினத்தை ஊட்டியது. "எவன் கொடுக்க மாட்டான்?" என்று எதிர்த்துக் கேட்டாள்.

முகுந்தன் அவளை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான். பிறகு, "தகுதி எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது" என்றான் இகழ்ச்சியாக.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்றாள் மீரா கோபமும் குழப்பமுமாக.

முகுந்தன் உதட்டைக் கடித்து வார்த்தைகளை அடக்கினான். ஒரு விநாடி பேசாமல் இருந்தான். பிறகு சற்று அமைதியாகச் சொன்னான். "இதோ பார், மீரா கண்டவன் முன்னே நின்று, கண்டவன் ஏவுவதை எல்லாம் நீ செய்ய வேண்டுமா? அதைத்தான் நினைத்தேன்" என்றான்.

"ஏன், பஸ்சில், சினிமா கியூவில் எல்லாம் நிற்கவில்லையா? இதில் என்ன தப்பு? நம் தேவைக்குச் சம்பாதிக்கப் போகிறோம் மற்றபடி என்ன?" என்று தர்க்கம் செய்தாள் மீரா.

"அப்படிப் பொருள் தேடும்படியாக என்ன பஞ்சம் வந்து விட்டது?" என்றான் முகுந்தன். மீண்டும் "சுள்"ளென்று.

அவனது கடுமை மீராவுக்கு உறைத்து விட்டது. "அப்படியே என்ன பஞ்சம் வந்தாலும் அது எங்கள் வீட்டு விஷயம் "உங்களுக்கு என்ன?" என்ற பதிலுக்குக் கூடக் கேட்டு விட்டாள்.

"எனக்கு..." என்று கோபத்துடன் தொடங்கிய முகுந்தன், சட்டென நிறுத்தினான். "எனக்கு என்ன வந்தது? ஒன்றும் இல்லை. சொல்லப் போனால் ஒன்றுமே இல்லை. ஆனால் வேலை பார்ப்பது என்றால் எளிது அல்ல. பலத்தைப் பார்க்க வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும். அதனால் சொன்னேன்" என்றான் அமைதியாக.

"சரி, நீ கிளம்பு. பஸ் நிற்குமிடம் வரை வருகிறேன். நீயே போய்க் கொள்ளுவாய் அல்லவா? எனக்கு இந்த அலைச்சல் கொஞ்சம் சோர்வாக இருக்கிறது. ஓய்வு எடுக்க வேண்டும்" என்று முன்னே நடந்தான்.

மீராவுக்குச் சற்று ஏமாற்றம்தான். ஆனால் இவன் சொல்லுவதும் மெய்தானே? ஊரில் இருந்து வந்த அலுப்பு தீருமுன் அலுவலக வேலைகள்; அந்தக் களைப்பில்தான் அவளிடம் சற்று கடுமையாகப் பேசி விட்டான் போலும். "பாவம்" என்று நினைத்தான்.

"போகலாம் முகுந்தன்" என்று தம்பி தங்கைகளை அழைத்துக் கொண்டு அவன் பின்னே நடந்தாள்.

ரோட்டைக் கடக்கும் தருணத்தில் விலை உயர்ந்த கார் ஒன்று அவர்கள் அருகே வந்து நின்றது.

"அலோ முகுந்தன்" என்றபடி அதில் இருந்து ஓர் இளைஞன் இறங்கினான்.

"அலோ, கண்ணன்" என்று முகுந்தன் அவனுடன் கை குலுக்கினான்.

யாரோ அன்னிய ஆண்மகன் என்றதும் மீரா பின்னடைந்து நின்றாள். ஆண் பெண் என்று இல்லாமல் எவருடனும் கலந்து பழகும் தன்மை அவளுக்கு இல்லை. அது அவளது வீட்டில் பழக்கமும் இல்லை. முகுந்தனை அன்னியனாக வீட்டில் யாருமே எண்ணாதபடியால், அவனிடம் பேசிப் பழக மீராவுக்கு முடிந்தது. வேலைக்குச் செல்லும் இடத்தில் எப்படிப் பேசிப் பழகப் போகிறோமோ என்ற பயம் கூட அவளுக்கு உண்டு.

"என்னப்பா முகுந்தன், உன்னை எத்தனை தடவை வீட்டுக்கு வா, வா என்று அழைத்தாயிற்று? நீ இன்னமும் வரவே இல்லை. இப்போதேனும் வருகிறாயா?" என்று முகுந்தனிடம் குறையோடு பேசினான் வந்தவன்.

"இன்று முடியாதப்பா நான்!"

"என்று தான் முடியும் என்கிறாயாம்? எந்நாளும் இன்று முடியாதப்பாதான். சில கடைகளில் 'இன்று ரொக்கம் நாளை கடன்' என்று போட்டு இருப்பார்கள். அதுபோல உன்னிடம் என்றும் ஒரே பதில் தான். சரிதான் வாப்பா என்றால்," என்று அவன் முகுந்தனுடைய கையை பிடித்து இழுத்தான்.

"இல்லை கண்ணன். நான் இவர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டியது இருக்கிறது. அதனால்தான்" என்றான் முகுந்தன்.

கண்ணனுடைய பார்வை மீராவை விழுங்கியது. அவளது மாசு மருவற்ற அழகு அவன் மனதில் பதிந்தது. இன்னும் கொஞ்சம் அலங்காரம் செய்தால் போதும்; ஊரையே அலக்காகத் தூக்கிச் சாப்பிட்டு விடுவாள் என்று நினைத்தான். தன்னை ஓரப் பார்வையாகக் கூட அவள் பார்க்க முயற்சிக்க வில்லையே என்று ஆச்சரியப்பட்டான்.

"முகுந்தன்! இந்த வண்டியைப் பார்த்தாயா? இந்த வாரம் வாங்கினேன். நெல்லையப்பனைத் தெரியும் அல்லவா? பெரிய

பணக்காரன் - என்னைப் போல! இதை வாங்கிவிட என்னோடு போட்டி போட்டான். நான் விடுவேனா? ஒரு லட்சம்வரை விலையை ஏற்றி, வாங்கி விட்டேன்'' என்று ஜம்பமாகச் சிரித்தான்.

முகுந்தனிடம் பேசும்போதே, அவன் கண்கள் மீராவை விழுங்கின.

## 8

அப்போதும் அவள் தன்னைப் பார்க்க முயலாததைக் கண்ணனால் நம்பக்கூட முடியவில்லை. எதிலேயோ தோற்றாற்போல உணர்ந்தான், சும்மா விடவும் மனம் இல்லை.

"நன்றாக இருக்கிறது'' என்றான் முகுந்தன் - மரியாதைக்காக.

"அதிருக்கட்டும் முகுந்தன், கூட இருப்பவர்களை எனக்கு அறிமுகப்படுத்த வில்லையே? ஒருவேளை யாரும் ரொம்ப 'ஸ்பெஷலோ' என்னை மிகவும் கண்டிப்பாயே'' என்றான் பகிரங்க இரகசியக் குரலில்.

"சேச்சே, என்ன உளறுகிறாய்? அப்பா காலத்தில் இருந்து எங்களுக்குப்பழக்கமான குடும்ப நண்பரின் மகள். பெயர் மீரா இவன் என் நண்பன், பெயர்தான் நான் அழைக்கக் கேட்டு இருப்பாயே'' என்றான் முகுந்தன்.

"வணக்கம்'' என்று கைகூப்பினாள் மீரா. வெண்டைக்காய் விரல்கள் தாமரை மொட்டாக அழகுறக் குவிந்தன.

“வணக்கம்! நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?” என்றான் கண்ணன் மீராவிடம்.

“உங்கள் எதிரேதான் இருக்கிறோம். தெரிய வில்லையா?” என்றான் மதுப்பயல் இடையில் புகுந்து.

கண்ணன் வாயடைத்துப்போய் வாண்டைப் பார்த்தான்.

மீரா ஒரு புன்சிரிப்போடு வேறுபுறம் திரும்பினாள்.

அவள் தன் பக்கம் திரும்புவாளோ என்று கண்ணன் பார்த்தான். அவள் திரும்பவில்லை. அது அவனுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

“முகுந்தன் நான் போகிறேன். நீ வருமுன் ‘கண்ணா எண்டர்பிரைசு’க்கு டெலிபோன் செய்” என்று காரை கிளப்பிக் கொண்டு போய்விட்டான்.

“இவரை உங்களுக்கு அதிகம் தெரியுமோ” என்று புது அக்கறையுடன் கேட்டாள் மீரா.

“அண்ணாமலையில் என்னோடு கூடப் படித்தான். படிப்பு வராது. நான் நன்றாகப் படிப்பேன் என்பதால் என்னிடம் ஒரு பிரமை அவ்வளவுதான்” என்றான் முகுந்தன் வறட்சியாக. அவனுக்குப் பேசவே பிடிக்கவில்லை.

“கண்ணா எண்டர்பிரைசில் இவருக்கு என்ன வேலை.” என்று விடாமல் கேட்டாள் மீரா.

“இவனுக்கு வேலையா? இவன் நூறு பேருக்கு வேலை கொடுப்பான்” என்றான் முகுந்தன்.

“அப்படி என்றால்” மீராவின் விழிகள் விரிந்தன.

“இவன் முதலாளி” என்றான் முகுந்தன் சுருக்கமாக.

“முதலாளியா? அடடா, முன்பே தெரியாமல் போயிற்றே. ஆள் பெருமை அடிக்கிற மாதிரிப் பேசவும் எனக்கு வந்த

எரிச்சலில் முகத்தைத் திருப்பிக் கொண்டு அல்லவா நின்று விட்டேன். அய்யோ, முன்பு தெரிந்திருந்தால்...."

"தெரிந்திருந்தால்....?" மீராவின் பேச்சில் இடைவெட்டினான் முகுந்தன்.

"தெரிந்திருந்தால் கொஞ்சம் மரியாதையாகப் பேசியிருக்கலாம். இப்படி அலட்சியமாய் நின்றிருக்க மாட்டேன்" என்றாள் மீரா.

"ஓகோ" என்றான் முகுந்தன் வேறு ஒன்றும் சொல்லவில்லை.

முகுந்தன் பேசிய முறை மீராவுக்கு ஏதோ வித்தியாசமாகத் தோன்றியது. என்ன ஏது என்று கேட்கு முன் பஸ் வந்து விட்டது. நாளை எங்கே போகிறது?" என்று நினைத்தாள். முகுந்தனிடம் விடைபெற்றுக் கொண்டு பஸ்சில் ஏறினாள்.

அன்று இரவு வீட்டிலும் மீரா வேலை பார்ப்பது பற்றிப் பேச்சு வந்தது. தில்லைநாதர்தான் மனைவியிடம் அந்தப் பேச்சை எடுத்தார். அவள் மறுப்புக் கூறவில்லை. "சம்பாதியேன், மாதாமாதம்கூடக் கொஞ்சம் பணம் வந்தால் நல்லதுதான்" என்றான்.

"அவள் கொண்டு வரும் பணம் அவளுடைய திருமண செலவுக்காகும். அதையும் நீயே செலவு செய்ய எண்ணாதே" என்றார் தில்லைநாதர்.

"அப்படித்தானே எங்கெங்கே பணம் கிடைக்கும், செலவு செய்யலாம் என்று பேயாய் அலைந்து கொண்டு இருக்கிறேன். அப்படிப் பறந்து பிடுங்கி நான் எத்தனை நகையும் நட்டும் செய்து கொண்டு இருக்கிறேனாம்?" என்று தொடங்கி விட்டாள் நாயகி.

"இ.....ல்....லை நாயகி. நான் அப்படிச் சொல்லவில்லை. அதையும் நாம்... அதாவது நான் செலவு செய்தால் ஊரில்

உலகத்தில் உன்னைத் தப்பாகப் பேச மாட்டார்களா? அதைத்தான் சொன்னேன். நீ என்னைத் தப்பாக நினைக்காதே" என்று சமாதானப்படுத்தினார்.

மூத்தாள் பெண்ணைக் கொடுமைப்படுத்துகிறாள் என்று மற்றவர்கள் சொல்லி விடுவார்களோ என்ற பயம் நாயகிக்கு எப்போதும் உண்டு. சமயம் பார்த்து தில்லைநாதர் அதை நினைவு படுத்தினார். பயனும் இருந்தது.

"நீங்கள் சொல்வதும் மெய்தான், ஊருக்குத் தெரியுமா. நான் உழைத்து ஓடாவது? இளையாள் என்றாலே காமாலைக் கண்ணோடுதானே பார்க்கிறது" என்றாள் நாயகி.

'ஓடான உடம்பா இது?' என்று கிண்டலாக சற்று பருமனான நாயகியைப் பார்த்தார் தில்லைநாதர். ஆனால் சொல்ல வில்லை. 'சமயத்தை விடக்கூடாது' என்று தொடர்ந்தார். "அதனால்தான் சொல்லுகிறேன் நாயகி இப்போது. மீரா வேலையில் சேர்ந்துவிடுகிறாள் என்று வைத்துக்கொள். கொஞ்சகாலத்துக்குப் பிறகும் அவளுக்குத் திருமணம் செய்து வைக்கவில்லை என்று வைத்துக் கொள். எல்லோரும் என்ன சொல்லுவார்கள்? அவளுடைய சம்பாத்தியத்தையும் நீ செலவு செய்கிறாய் என்றுதானே!" என்று ஆணித்தரமாகக் கேட்டார்.

"நீங்கள் சொல்வதுகூடச் சில சமயம் சரியாகவே இருக்கிறது" என்று ஆமோதித்தாள் மனைவி. பிறகு, "இவ்வளவு தொல்லை ஏன்? அவள் வேலைக்கே போக வேண்டாம்" என்று ஒரு போடு போட்டாள்.

மீரா பதறிப் போனாள். கெஞ்சுவதைப்போல் தில்லை நாதரைப் பார்த்தாள். தில்லைநாதர் மூளையைக் கசக்கிக் கொண்டு யோசனை செய்தார் - நாயகியை எப்படிச் சம்மதிக்க வைப்பது என்று.

"அப்படிச் சொல்லி விடாதே நாயகி. நம் வீட்டு நிலைமையில் அவள் திருமணத்துக்காக நம்மால் சேர்க்க முடியாது. திருமணமே செய்து வைக்காவிட்டாலும் நாலுபேர் உன்மீது தானே பாய்வார்கள். இந்த ஏற்பாட்டில் அவள் சம்பளத்திலேயே அவளுடைய திருமணத்துக்குச் சேர்த்து விடலாம்! நமக்குத் தொல்லை இல்லை பார்" என்றார்.

"அதுவும் சரிதான். மீரா வேலைக்குப் போகட்டும்" என்று அனுமதி வழங்கினாள் நாயகி.

பிறகு மீராவின் பக்கம் திரும்பினாள். "ஏன் மீரா, வேலை பார்ப்பதே பார்க்கப்போகிறாய். எவனாவது திருமணமாகாத முதலாளியோ, மானேஜரா இருக்கிற இடம் பார்த்து வேலை பாரேன். வகையாய் மாட்டினான் என்றால் உன் கல்யாணச் செலவு மிச்சம், வீட்டுக்கும் வசதி" என்றாள் பாதிப்பரிகாசமும் பாதி உண்மையுமாக.

இவ்வளவு நாளைய பழக்கம் மீராவைச் சித்தியோடு ஒத்துப் போகச் செய்தது. "பின்னே நான் எதற்காக வேலைக்குப் போகிறேன் என்று நினைத்தீர்கள் சித்தி? என் உத்தேசமே அதுதான்" என்றாள் விட்டுக் கொடுக்காமல்.

வாயிற்புறம் சிறு அசைவு தெரிந்தது. மீரா திரும்பிப் பார்த்தாள். அங்கே யாரும் இல்லை.

சற்று நேரம் கழித்து முகுந்தன் வந்தான். அவனுடைய சிரிப்பை எல்லாம் யாரோ துடைத்துவிட்ட மாதிரி களை இழந்த முகத்துடன் வந்தான்.

அவனுடைய கண்கள் யாரையோ பார்ப்பதுபோல் மீராவை நோக்கின. மீராவுக்குத் 'திக்' என்றது.

முகுந்தனைக் கண்டதும் தில்லைநாதர் உற்சாகத்துடன் வரவேற்றார். "வாவா.... வா முகுந்தன், என்ன இந்த நேரத்தில் திடீர் வரவு. அக்கா சுகமா? உள்ளே வந்து உட்கார்" என்று அழைத்தார்.

“இந்தப்பக்கம் ஒரு வேலையாக வந்தேன். அப்படியே உங்களையும் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்” என்றபடி முகுந்தன் உள்ளே நுழைந்தான். “அக்கா இப்போது சுகம்தான்” என்றபடி தில்லைநாதருக்கு எதிரே கிடந்த நாற்காலியில் அமர்ந்தான்.

“இன்று இங்கேயே சாப்பிடேன். அங்கே அம்மாகூட இல்லையே” என்றார் தில்லைநாதர்.

“சாப்பாடு எடுத்து வைக்கட்டுமா” என்று முன்னே வந்து கேட்டாள் மீரா.

“வேண்டாம், நான் சாப்பிட்டாயிற்று” என்றான் அவளைப் பாராமலேயே.

“அதற்குள்ளாகவா? சும்மா பொய்” என்றாள் மீரா விடாமல்.

“எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள். எனக்குச் சாப்பாடு வேண்டாம்” என்றான் முகுந்தன்.

இப்போதும் அவன் அவளை நேராகப் பார்க்கவில்லை. ஏன்? என்ன ஆயிற்று? முகுந்தனுக்கு என்ன கோபம்? மீராவுக்கு மனதில் வேதனை உண்டாயிற்று. கூடவே சிறு சினமும் எழுந்தது. அவனுக்கு மட்டும்தான் கோபம் கொள்ளத் தெரியுமா? பேசாமல் ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு படிப்பதுபோல் தள்ளி உட்கார்ந்தாள்.

தில்லைநாதர் இதை ஒன்றும் கவனிக்கவில்லை. அவர் பாட்டில் அளக்கத் தொடங்கிவிட்டார்.

“முகுந்தன், உனக்கு விஷயம் தெரியுமா? நம் மீரா வேலையில் சேரப் போகிறாள்” என்றார்.

“சேரட்டுமே” என்றான் முகுந்தன் சுருக்கமாக.

“ஏன் வேலை செய்யப் போகிறாள் தெரியுமா?” என்றார் தில்லைநாதர், பெரிய மர்மத்தை வெளியிடப்போகிறவர் போல்.

'தன் திருமணத்துக்குப் பணம் சேர்க்க' என்று தில்லைநாதர் சொல்லிவிடுவாரோ என்று மீரா வெட்கித் தவித்துப் போனாள். பிறகு முகுந்தனுடைய கேலிகளை யார் தாங்குவது?

"நமக்கு ஆயிரம் காரணம் இருக்கும் அப்பா. அதை எல்லாமா எல்லாரிடமும் சொல்லுவது?" என்றாள் சிவந்த முகத்துடன்.

முகுந்தன் மீராவைப் பார்த்தான். பார்த்தவன் சட்டெனப் பார்வையை அகற்றிக்கொண்டான். "ஆமாம் அதைப்பற்றி எனக்கென்ன? என்னிடம் ஏன் சொல்ல வேண்டும்?" என்றான் அசட்டையாக. "நான் பிள்ளைகளைப் பார்க்கலாம் என்று வந்தேன். அதற்குள்ளாகவா படுத்து விட்டார்கள்?" என்றான் உள்ளே பார்த்தான்.

"இல்லையே முகுந்தண்ணா!" என்றது மதுவின் சிறு குரல் அவனோடு ஒட்டிக் கொண்டு சசியும் வந்தாள்.

"அடே ராஸ்கல் அப்போதே தூக்கம் வருகிறது என்று படுத்தாயே. படிக்காமல் தப்பிக்கவா?" என்று தில்லைநாதர் அதட்டினார்.

"அப்போ தூக்கம் வந்ததுப்பா. முகுந்தண்ணா சத்தம் கேட்டு இப்போதுதான் விழித்தேன்" என்று முகுந்தனுடைய தோளில் உராய்ந்தான் மது.

முகுந்தன் சிரித்துக்கொண்டே அவன் தோளில் தட்டினான்.

"எனக்கும் அப்படித்தான் அப்பா" என்று சசி தன் பங்குக்கு மறுபுறம் வந்து முகுந்தனின் மேல் சாய்ந்து கொண்டாள்.

"படிப்புக்கு டிமிக்கி கூடாது" என்று லேசாகக் கண்டித்தான் முகுந்தன்.

"இனிமேல் இல்லை முகுந்தண்ணா" என்றான் பையன் பணிவாக. பிறகு முகுந்தனுடைய காதருகில் வாயைப் பொருத்திச் சொன்னான். "இன்றைக்கு அம்மா பாடம் சொல்லித்

தருவதாகச் சொன்னார்கள். அதனால்தான் தூக்கம் வந்து விட்டது'' என்று ரகசியம் பேசினான்.

முகுந்தன் சிரித்தான். சற்று நேரம் மது, சசியிடம் ஏதோ பேசிக்கொண்டு இருந்துவிட்டுக் கிளம்பினான்.

அவன் விடை பெறுகையில், ''அம்மாவிடம் இருந்து கடிதம் வந்ததோ!'' என்று அடக்க ஒடுக்கமாக நின்று கொண்டு நாயகி கேட்டாள்.

அவளுக்கு முகுந்தனிடம் கொஞ்சம் பயம் வந்து விட்டது. தப்புகளை ஜாடையாகவேனும் சொல்லிக் காட்டி விடுகிறானே!

''நானே இன்று காலைதானே வந்தேன். அதற்குள் எப்படிக் கடிதம் வரும்?'' என்றான் முகுந்தன்.

நாயகியின் முகத்தில் அசடு வழிந்தது. சமாளித்துக் கொண்டு, ''சீக்கிரம் வந்து விடுவார்கள். இல்லையா? நீங்கள் இங்கே சாப்பாட்டுக்குத்-திண்டாடுவீர்களே'' என்று கரிசனம் காட்டினாள்.

''திண்டாட்டம் ஒன்றும் இல்லை. அம்மா மாதிரிச் சமையல் இல்லை என்றாலும் ஓட்டல்காரனும் சாப்பிடும்படியாகத்தானே போடுகிறான்... அப்போ நான் வரட்டுமா?'' என்று முகுந்தன் எழுந்தான்.

வேண்டும் என்று தானே என்னவோ, மற்றவர்களிடம் விடைபெற்ற முகுந்தன் மீராவிடம் சொல்லிக்கொள்ளாமலேயே போய் விட்டான். வெகு சிரமத்துடன் புத்தகத்தினுள் முகத்தைப் புதைத்தபடி இருந்த மீரா அவன் அழைப்பான் அழைப்பான் என்று எதிர்பார்த்து ஏமாந்து போனாள். 'நாமாகத்தான் பேசலாமே' என்று அவள் நிமிர்ந்தபோது அவன் படியிறங்கிப் போய் விட்டான். தன் ஏமாற்றத்தை வெளிக்காட்டாமல் மீண்டும் புத்தகத்தைப் படிப்பது போலப் பாவனை செய்தாள் மீரா.

தில்லைநாதருடைய வீட்டில் இருந்து திரும்பிய முகுந்தனுடைய உடம்பெல்லாம் எரிவது போல இருந்தது. கடைசியில் மீரா கூட இவ்வளவுதானா?

இரவாகிவிட்ட போதும் அவன் தில்லைநாதரிடம் வந்த காரணமே இதுதான் - அவரிடம் எடுத்துச் சொல்லி மீராவை வேலைக்குச் செல்லாமல் தடுத்துவிட வேண்டும் என்ற எண்ணம்தான்.

வெளியே சென்று வேலை பார்ப்பது என்றால் எளிது அல்ல: நாலு நல்லவர்கள் இருக்கிற இடத்தில் பத்துக் கெட்டவர்களும் இருப்பார்கள். பசுப்போல சிலர் உண்டுதான் என்றாலும் பாயும் புலி போலப் பலர் இருக்கிறார்கள். அவரவர்களைச் சமாளிக்க வேண்டும். நாணலைப் போல வளைய வேண்டி இருக்கும். அதில் ஒடிந்து விடாமல் உறுதியாக இருக்க வேண்டும். நிறைய நெளிவு சுளிவுகள் தெரிய வேண்டும். அந்தச் சாகசங்களை எல்லாம் மீராவுக்கு, கள்ளம் கபடம் அற்ற மீராவுக்கு, வெகுளியான மீராவுக்கு கிடையாது என்று எடுத்துச் சொல்ல வந்தான்.

ஆனால் வரும்போதே, நாயகியின் போதனை அவன் காதில் நாராசமாக விழுந்தது. மீராவின் பதிலோ ஈயத்தைக் காய்ச்சி ஊற்றினால் கூட இவ்வளவு வேதனையைத் தந்திராது. அவ்வளவு துன்பத்தைக் கொடுத்தது அவள் பதில். அந்தக் கணத்தில் தன்னுடைய காதுகளையே அவனால் நம்ப முடியவில்லை. சற்று நேரம் வெளியே போய்த் தன் மனதை நிதானப்படுத்திக் கொண்டு மீண்டும் வந்தான் உலகத்திலேயே சிறந்த பெண் என்று அவன் எண்ணியிருந்த மீராவா இப்படிச் சொன்னாள்! ஒரு வேளை வேடிக்கையாகப் பேசி இருப்பாளோ? அப்படியானால், தில்லைநாதர் சொல்ல வந்த போது ஏன் முகம் சிவக்கத் தடுக்க வேண்டும்? குற்ற நெஞ்சின் எதிரொலி தானே.

இதுவரை அவன் அறிந்த மீராவுக்குள் வேறு ஒரு மீரா குடியிருக்கிறாளா!

அப்படியானால் அவனுடைய நெஞ்சில் குடியிருக்கத் தகுந்தவள் அந்த மீரா அல்ல என்று முகுந்தன் உறுதியாக நினைத்தான்.

## 9

நேர்முகத் தேர்வு என்பது மீராவுக்கு புதிய அனுபவம். சென்றதும் திறமையைப் பரிசோதிப்பார்கள். அதில் தேர்ந்து விட்டால் வேலை கிடைத்து விடும் என்று வெகு எளிதாக எண்ணி இருந்தாள்.

ஆனால் நடந்தது வேறு. நிர்வாகியிடம் சென்றதுமே அவர் சிபாரிசுக் கடிதங்களைத்தான் கேட்டார். மீராவிடம் தான் ஒன்றுமே இல்லையே. எதுவும் இல்லை என்றதும், "வருந்துகிறேன்" என்று அவர் கையை விரித்து விட்டார்.

"சார் என்னை ஒன்றுமே கேட்கவில்லையே?" என்றாள் மீரா.

"கேட்பதற்கு என்னம்மா இருக்கிறது? ஓர் எம். எல். ஏ. சிபாரிசு கூட இல்லாமல் நீ விண்ணப்பம் அனுப்பியதே தவறு" என்றார் நிர்வாகி.

"அப்போ, யாருக்குப் பெரிய இடத்துச் சிபாரிசு கிடைக்கிறதோ, அவர்களுக்குத்தான் வேலையா?" என்று கேட்டாள் மீரா.

“ஆமாம்” என்றார் இயந்திரம் போல.

“அப்படியானால் நேர்முகத் தேர்வு என்று ஏன் அழைக்கிறீர்கள்? ‘உனக்குச் சிபாரிசு செய்பவர்களின் கடிதங்களை அனுப்பி வை’ என்று எழுதுவதுதானே! இதெல்லாம் என்ன ஏமாற்று வேலை?” என்று சூடாகக் கேட்டு விட்டு அங்கிருந்து வெளியேறினாள் மீரா.

மீராவுக்கு ஏமாற்றத்தோடு ஆத்திரமும் சேர்ந்தது கோபத்துடன் அந்த அலுவலகத்தை விட்டு வெளியேறினாள். வாயிலைக் கடந்ததும் சற்றுத் தயங்கி நின்றாள். வேலை இல்லையென்று ஆகிவிட்டதே, இனி என்ன செய்வது?

தலையைக் குலுக்கி விட்டுக் கொண்டாள். ‘இந்த மடம் போனால் சந்தை மடம்’ உழைக்கத் துணிந்து விட்டால் வேலைக்கா பஞ்சம்! இதுபோனால் இன்னொரு வேலை. தைரியத்துடன் தலையை நிமிர்த்தினாள். எதிரே கண்ணன் நின்று கொண்டு இருந்தான்.

“அடடே, மிஸ் மீரா அல்லவா? உண்மையாகவே நீங்கள்தானா? அல்லது நான் கனவு காண்கிறேனா? யாரைக் கிள்ளிப் பார்க்கலாம்?” என்று அபிநயத்துடன் கேட்டான்.

மீராவுக்குச் சிரிப்பு வந்தது. “நானேதான் மெய்யாகவே தான் வந்து இருக்கிறேன்!” என்றாள்.

“இந்த ஏழையின் கம்பெனியை நாடி நீங்கள் வந்த காரணம் யாதோ?” என்று அந்தக் கால மகாராஜா பாணியில் அவன் கேட்டான்.

உடனே மீராவின் முகம் கறுத்தது. “வேலை தேடி வந்தேன் ஆமாம், நீங்கள் என்ன ஏமாற்று வேலை செய்கிறீர்கள்? நேர்முகத் தேர்வுக்கு வா என்று கூறிவிட்டு சிபாரிசுக்குத்தான் மதிப்பு என்கிறீர்களே, இது என்ன நியாயம்?” என்று படபடத்தாள்.

கண்ணனுடைய முகத்தில் மகிழ்ச்சியும் வியப்பும் பரவின. உடனேயே ஆத்திரப்படுகிறவன் போல முகத்தை மாற்றி வைத்துக் கொண்டான்.

"அப்படியா சொன்னார் அந்த மானேஜர்! இப்போதே போய் அவருடைய தலையைக் கிள்ளி எடுத்து விடுகிறேன். உள்ளே வந்து பார்க்கிறீர்களா? ஒரே கிள்ளல்தான். தலை தனியாக விழுந்துவிடும்" என்று கண்ணன் வேகமாகச் செல்வது போல் சொன்னான்.

மீரா சிரித்து விட்டாள். "நீங்கள் ரொம்ப தமாஷாகப் பேசுகிறீர்களே!" மீண்டும் பொங்கிச் சிரித்தாள். "நான் சொன்னது என்ன ஆயிற்று?" என்று கேட்டு வைத்தாள்.

"அதான் வந்து பார்க்கிறீர்களா என்று கேட்டேனே" என்றான் கண்ணன்.

மீரா, "சரி" என்று அவனோடு உள்ளே நடந்தாள்.

கண்ணனைக்கண்டதும் மானேஜர் எழுந்து நின்றார்.

"யாரைத் தேர்ந்து எடுத்தீர்கள், மிஸ்டர் மதி!" என்று கண்ணன் கேட்டான்.

"மிஸ் சுந்தரியை சார், அவளுக்குத்தான் மந்திரியின் சிபாரிசு இருக்கிறது" என்றார் மானேஜர். மீராவைக் கண்டதாகவே அவர் காட்டிக்கொள்ளவில்லை.

"ஓ! சரிதான்" என்றான் கண்ணன்.

மீரா திகைப்புடன் அவனைப் பார்த்தாள். மானேஜரின் தலையைக் கிள்ள வந்தவனா இவன்?

கண்ணன் மீண்டும் பேசினான், "மிஸ்டர் மதி, இன்னொரு வேலை உத்தரவும் அடிக்கச் சொல்லுங்கள். மிஸ் மீராவை இன்னொரு டைப்பிஸ்ட் ஆக நியமித்து இருக்கிறேன்."

மானேஜர் ஏதோ சொல்ல வாயெடுத்தார். கண்ணன் அதற்கு இடம் கொடாமல் மேலே பேசினார். "சம்பளம் ரூ. 250 என்று அடியுங்கள்" என்றான்.

"என்னோடு வாருங்கள் மீரா" என்று அவளை அழைத்துக் கொண்டு தன் அறைக்குப் போனான். மேசையின் பின்னே உள்ள சொகுசான நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தான்.

எதிரே உள்ள நாற்காலியில் மீரா அமர்ந்தாள். அவள் முகச் சிணுக்கம் மட்டும் மாறவில்லை.

கண்ணன் பாதி மூடிய கண்ணால் அவளைப் பார்த்தான். "என்ன மீரா! நீங்கள் தேடி வந்த வேலையைவிட ரூ. 50 கூடப் போட்டுத் தந்து இருக்கிறேன். பிடிக்கவில்லையா?"

"ஓ... கூட ரூ. 50" மீரா இதுவரை அதை மனதில் எடுக்கவே இல்லை. கூடுதல் பணம் என்றால் சீக்கிரம் தேவையான பணம் சேர்ந்து விடுமே. "நன்றி சார். நான் அதை நினைக்கவே இல்லை?" என்றாள் முகம் மலர.

"பின்னே ஏன் முகச் சிணுக்கம்?"

மலர்ந்த முகம் மீண்டும் கூம்பியது. "நீங்கள் அந்தச் சிபாரிசு ஆளையே தேர்ந்து எடுத்து விட்டீர்களே" என்றாள் குறையோடு.

"ஓ, அதுவா? தொழில் என்றால் இதை எல்லாம் பார்த்தாக வேண்டும் மீரா, நாளை ஒன்று தேவை என்றால் அந்த அமைச்சரிடம்தானே செல்ல வேண்டும். அவர் 'நேற்று என்னை மதியாதவன் இன்று ஏன் வந்தாய்' என்றால் என்ன செய்ய முடியும்?"

"ஆனால் அந்தப் பெண்ணைவிடத் திறமைசாலிகளும்..."

"பல பேர் இருப்பார்கள் மீரா. ஆனால் அத்தனை பேருக்கும் வேலை கொடுக்க முடியுமா? அதெல்லாம் நமக்குக் கட்டுப்படியாகாதம்மா" என்று கையை விரித்தான்.

அவன் சொன்ன விதத்தில் மீராவுக்கு மீண்டும் சிரிப்பு வந்தது.

"நீங்கள் நன்றாகச் சிரிக்கிறீர்கள்" என்று மெச்சினான் கண்ணன்.

அவனுடைய புகழுரையைக் கேட்டதும் மீராவின் முகம் சிவந்தது. அதுவரை அவளிடம் யாரும் - குறிப்பாக ஆண்கள் - அப்படி முகத்துக்கு நேராகப் புகழ்ந்தது இல்லை. முகுந்தன் கூடப் பேசியது இல்லை. சில சமயம், அவன் கண்களில் பாராட்டுதல் தெரியுமே தவிர வாய் அளவில் ஒன்றும் இராது. மற்றபடி வேற்று ஆண்களிடம் அவள் பழகியதும் இல்லை.

கண்ணனிடம் எப்படிப் பேசிப்பழக வேண்டும் என்று புரியவில்லை. அவனுடைய புகழுரையை ஏற்க மனமும் இன்றி மறுக்க வழியும் அறியாமல் மவுனம் சாதித்தாள்.

"உனக்கு எத்தனை வயது?" திடீர் என்று கேட்டான் கண்ணன்.

"பத்தொன்பது."

"ஏன் வேலை தேடி வந்தாய்?"

"குடும்பத் தேவை" என்றாள் மீரா சுருக்கமாக.

"அப்படித்தான் எல்லோரும் சொல்வது வழக்கம் ஆனால்..." முடிக்காமல் கண்ணன் ஒரு மாதிரிச் சிரித்தான்.

"ஆனால்?" என்று மீரா அவனை நேர்பார்வையாகப் பார்த்தாள்.

"நூற்றுக்கு நூறு உல்லாச வாழ்க்கை தேவைதான்" என்றான் கண்ணன் அசட்டையாக.

மீரா சிலிர்த்து எழுந்தாள். "உங்களுக்குப் பழக்கமான பெண்களை வைத்து எல்லோரையும் எடை போடக் கூடாது சார்" என்றாள் காட்டமாக.

"நீ மானேஜரிடம் போய் உன் வேலைகளைப் பற்றிக் கேட்டுக்கொள்" என்ற கண்ணன், காலைத் தூக்கி மேசை மேல் போட்டுக் கொண்டு, நாற்காலியில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டான்.

மீரா வியப்புடன் அவனைப் பார்த்தாள். அவனிடம் ஏதோ ஒன்று சரியாக இல்லை. அந்த அறை இருந்த நேர்த்திக்கு அவன் பொருந்தவில்லை. அவனுடைய உடைகளும், சுற்றுப்புறமும் இருந்த தோற்றத்துக்கு அவன் இருந்த நிலை கொஞ்சமும் ஒத்துப் போகவில்லை. எந்த வகையில்?

"என்ன மீரா?" என்றான் கண்ணன் பாதிக் கண்ணைத் திறந்து.

"ஒன்றுமில்லை..." என்று மீரா வெளியே விரைந்தாள்.

மாலை ஐந்துமணி அடித்ததுமே கல் விழுந்த பறவைகள் கூட்டமாக எல்லோரும் பறந்தனர். மீராவும் டைப் ரைட்டரை மூடி வைத்துவிட்டுக் கிளம்பினாள். பொதுவாக வேலையில் அவளுக்கு ஒரு கஷ்டமும் தெரியவில்லை. இதை ஏன் வேண்டாம் என்று முகுந்தன் சொல்ல வேண்டும்? அவனிடம் கேட்க வேண்டும் என்று எழுந்த போது தான் இனிப் பூங்காச் சந்திப்புகளுக்கு வழி இல்லை என்பது தோன்றியது. 'அடடா' என்று மனம் அங்கலாய்த்தது. அவன்தான் வீட்டுக்கு வருவானே என்று சமாதானம் செய்து கொண்டாள். அவனைத் தினமும் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காகத் தானே இந்த ஏற்பாடு. ஒரு பத்து மாதம் பல்லைக் கடித்துக் கொண்டு இருந்து விட்டால், பிறகு... பிறகு...

இன்பக் கற்பனைகளில் மூழ்கியபடி மீரா கிளம்பினாள்.

“அய்யா கூப்பிடுகிறார்” என்று பையன் வந்து அவளை அழைத்துச் சென்றான்.

மீரா கண்ணனுடைய அறைக்குப் போனாள்.

“வேலை திருப்தியாய் இருந்ததா?” கண்ணன் விசாரித்தான்.

“ஆமாம்” என்றாள் மீரா.

“நீ காலையில் ஏன் அப்படிப் பார்த்தாய்? ஒன்றும் இல்லை என்று மழுப்ப வேண்டாம்” என்றான் கண்ணன்.

மீரா ஒரு வினாடி தயங்கினாள். பிறகு, “எனக்கே தெரியவில்லை சார். ஏதோ ஒரு வகையில் நீங்கள் இங்கு பொருந்தவில்லை போல் தோன்றியது.”

“அதாவது...”

“ஆமாம் சார். இந்த அறையை, மேஜையை, அலமாரியைப் பாருங்கள். எல்லாம் பளபளவென்று பார்க்கும் போதே ஓர் உற்சாகத்தைக் கொடுப்பது போல் இருக்கிறது. உங்கள் உடைகளைக் கூடப் பாருங்கள் இன்னமும் மடிப்பு கலையவில்லை. எல்லாமே ‘சுருக்’காக இருக்கின்றன. இதில் நீங்கள்...மட்டும் சோம்பேறித் தனமாய்த் தொய்ந்து கிடப்பது போல் இருக்கிறீர்கள் சார் எதிலும் ஓர் அசட்டையோடு யாருக்கு வந்த விருந்தோ என்பது போல் இருக்கிறீர்கள், அது இங்கே சரியாக இல்லை” என்றாள் மீரா.

திடுக்கிட்டுப் போன கண்ணன் நிமிர்ந்தான்.

“அதற்கு என்ன செய்வது?”

“நீங்கள் இந்த அசட்டையையும், ‘சோம்பேறி’ மாதிரிக் கிடப்பதையும் விட்டு விட்டால் சரியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்” என்று மீரா கூறி முடித்தாள்.

கண்ணனுக்கு மேலும் தூக்கிவாரிப் போட்டது அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"இதுவரை யாரும் என்னிடம் இப்படிப் பேசியது. இல்லை தெரியுமா?" என்றான் அவளைப் பார்த்தபடி.

"உண்மையாகவா சார்? பளிச்சென்று கண்ணை உறுத்துகிற மாதிரி அந்தப் பொருந்தாத் தன்மை தெரிகிறதே. ஒருவரும் சொன்னது இல்லையா?"

"நான் பணக்காரன் ஆயிற்றே என்னிடமே என்னைப்பற்றி குறை சொல்லலாமா? நீ சொல்கிறாயே?"

"நீங்கள் தானே கேட்டீர்கள்?" என்று மடக்கினாள் மீரா. "நாமாகப் போய் ஒருவரிடம் இது தப்பு தவறு என்று சொல்ல வேண்டாம். அவர்களாகக் கேட்கும் போது ஏன் சொல்லக் கூடாது?" என்று கேட்டாள்.

"சொல்லலாம், சொல்லலாம். நன்றாகச் சொல்லலாம்" என்று சிரித்தான் கண்ணன். கண்களில் புது ஒளி தோன்ற அவளைப் பார்த்தான்.

பிறகு கண்ணன் மீராவை தன்னோடு ஒரு சினிமாவுக்கு அழைத்தான்.

திடீர் என்று கண்ணன் சினிமாவுக்கு வருகிறாயா? என்றதும் மீராவுக்கு ஒன்றுமே புரியவில்லை. முகுந்தனுடன் கூடப் போனது இல்லை. இவன் எவ்வளவு துணிச்சலாக அழைக்கிறான்.

"நான் வர முடியாது சார்" என்றாள் மொட்டையாக.

"ஏன்?"

"ஒரு பெண் அன்னியர்களோடு சினிமா போன்ற இடங்களுக்குச் செல்லமாட்டாள்."

"உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான், என்னோடு எத்தனை பெண்கள் வந்திருக்கிறார்கள் தெரியுமா?" என்றான் கண்ணன்.

"உங்களுக்குத் தெரிந்த பெண்களை வைத்து எல்லோரையும் எடை போடாதீர்கள் என்று முன்பே சொல்லி இருக்கிறேன். எனக்கு நேரமாகிறது. நான் வருகிறேன் சார்" என்று எழுந்து விட்டாள் மீரா.

"நில் மீரா, அன்னியன் என்றாயே... நான் உன் முதலாளி ஆயிற்றே. எப்படி அன்னியன் ஆவேன்?" என்று கேட்டான் கண்ணன்.

மீராவுக்குச் சினம் உண்டாயிற்று. "ஒரு பெண்ணுக்குப் பெற்றோர்களும் உடன் பிறந்தவர்களும் கணவனும் தவிர மற்ற எல்லோரும் அன்னியர்தான். என்னைப் பொருத்த வரையில் நீங்கள் இதில் எந்த வகையிலும் சேரவழியில்லை, எனவே எனக்கு நீங்கள் அன்னியர்தான். வேறு விஷயம் இல்லையே சார், நான் வருகிறேன்." என்று மீரா அவன் மேலே பேசுமுன் அங்கிருந்து வெளியேறி விட்டாள்.

அவள் சென்று மறையும் வரை கண்ணன் அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான். "அன்னியனா!" என்று மெல்ல முணு முணுத்தான்.

ஒரு வாரம் சென்றது.

முகுந்தன் இந்த ஒரு வாரமும் மீராவின் வீட்டுக்கு வரவே இல்லை. அவனுடைய வீட்டைத் தாண்டிப் பஸ் செல்லும் போது இறங்கி விடலாமா என்று மீராவுக்குத் தோன்றும். தேவகி அம்மா இருந்தால் இறங்கி விடலாம்தான். ஆனால் முகுந்தன் தனியே இருக்கும் வீட்டுக்கு அவள் மட்டும் செல்வது சரியல்லவே. அவனாவது வரக் கூடாதா என்று மீராவின் மனம் ஏங்கியது. இந்த ஏக்கம் அவனுக்கு இருந்ததாகத் தெரியவில்லையே.

அன்று வேலைக்கு வந்த மீராவுக்கு ஓர் அதிசயம் காத்து இருந்தது. அவளுடைய பதவி உயர்ந்து இருந்தது. கண்ணன் தன்னுடைய அந்தரங்கச் செயலாளராக அவளை நியமித்து இருந்தான். சம்பளமும் கூடுதலாக நூறு ரூபாய்.

மானேஜர் வேலை உத்தரவை மீராவிடம் கொடுத்த போது அவளுக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை.

"என்ன சார் இப்படி? எனக்குப் புரியவில்லையே!" என்று வியப்புடன் கேட்டாள்.

அவளுடைய உணர்ச்சிகளைக் கவனியாதவர் போல மானேஜர் முன்னே நடந்தார். "என் பின்னே வாருங்கள்" என்றபடி.

கண்ணனுடைய அறையை ஒட்டிய சிறு அறை ஒன்று. அதில் ஒரு மேசையும், நாற்காலியும், "இதுதான் உங்கள் அறை. டைரக்டர் வரும்வரை காத்து இருங்கள்" என்று கூறிவிட்டுப் போய் விட்டார்.

மீரா குழப்பத்துடன் நாற்காலியில் அமர்ந்தாள்.

கண்ணன் ஏன் இப்படிச் செய்ய வேண்டும்?

வேலை பார்க்கத் தொடங்கிய ஒரு வாரத்தில் பதவி உயர்வா? ஏன்? இந்த ஒரு வாரத்துக்குள் தன்னுடைய திறமையைக் கண்டுதான் இப்படிச் செய்திருக்கிறானோ என்று தன்னையே ஏமாற்றிக் கொள்ள மீரா தயாராக இல்லை. பின்னே?...

மீராவின் மனதில் நெருஞ்சி முள் போலத் தைத்தது.

# 10

கண்ணன் வரும் வரை மீரா மனம் குழம்பிக் கொண்டு தான் இருந்தாள். சினிமாக்களில் வருவது போல், பணத்தைக் காட்டித் தன்னை விலைக்கு வாங்கிவிடலாம் என்ற எண்ணத்தோடு இருக்குமோ என்று கூட நினைத்தாள். முதல் நாள் சினிமாவுக்குப் போக மறுத்ததில் இருந்தே, அவள் அப்படிப்பட்ட பெண் இல்லை என்பது அவனுக்குத் தெரிந்து இருக்குமே!

பின் ஏன்?

எண்ண, எண்ணக் குழப்பம் தான் மிகுந்தது. பிரச்சினைகள் எதிர்ப்படும் போது சமாளித்துக் கொள்ளலாம். இப்போதே ஏன் திணற வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

இப்போதைக்கு மாதம் நூறு ரூபாய் கூட வருகிறது. இந்த ரீதியில் ஏழே மாதம் வேலை பார்த்தால் கூடப் போதும். அதை எண்ணி மகிழலாம் என்று முடிவு செய்தாள்.

மீரா அறையைச் சுற்றிப் பார்த்தாள். சின்ன அறையானாலும் மிகவும் அழகாக இருந்தது. முக்கியகாரியதரிசி ரொம்பவும் 'சுருக்'கான ஆள் போலும். உடனே இன்னொன்று தோன்றியது. பழைய அந்தரங்கச் செயலாளர் என்ன ஆனார் என்று குழம்பத் தொடங்கினாள்.

நல்ல வேளையாகக் கண்ணன் விரைவில் வந்து விட்டான். வந்ததுமே மீராவை அழைத்தான்.

"திருப்திதானே? மீரா."

"சார்! பழைய அந்தரங்கச் செயலாளர் என்ன ஆனார்?" என்று தன் சந்தேகத்தை வெளிப்படுத்தினாள் மீரா.

"நான் உனக்கு மகிழ்ச்சியா என்று கேட்டேன்."

"அது எப்படி சார்! என்னால் இன்னொருவருக்குத் தொல்லை என்றால் எப்படி மகிழ்ச்சியடைய முடியும்?"

கண்ணன் சிரித்துவிட்டு சொன்னான். "அவரைத் தாம்பரத்தில் நிர்வாகி ஆக்கி இருக்கிறேன். அந்த நிர்வாகி என்ன ஆனார் என்று கிளப்பாதே. யாருக்கும் வேலை போகவில்லை. இப்போது என்ன சொல்கிறாய்?"

"மகிழ்ச்சிதான் சார். ஆனால் இதற்கு உரிய தகுதி எனக்கு இருக்கிறதா என்பது தான் என் பயம்" என்றாள் மீரா.

"உன் தகுதி எனக்குத் தெரியும்" கண்ணன் அவளுக்கு சர்டிபிகேட் கொடுத்தான்.

அன்று மாலையும் கண்ணன் மீராவைத் தன்னோடு சினிமாவுக்கு அழைத்தான். "இப்போகூட வர மாட்டாயா?"

மீரா அவனை நிமிர்ந்து நோக்கினாள். "இப்படி எல்லாம் நினைத்துதான் எனக்குப் பதவி உயர்வு கொடுத்தீர்களா? அப்படியானால் அந்த உயர்வே எனக்கு வேண்டாம். கண்டபடி எல்லாம் சுற்றுகிறவள் நான் அல்ல. தெரிந்து கொள்ளுங்கள்" என்றாள் உறுதியான குரலில்.

"சரி, சரி, உன் விருப்பம். உன்னை வீடுவரை காரில் கொண்டு விடலாமா? அல்லது அதற்கும் தடை உத்தரவு உண்டா?" என்றான் கண்ணன் வேடிக்கையாக.

"எனக்கு பஸ் வசதியாக இருக்கிறது. நான் வருகிறேன்" என்று அங்கிருந்து வெளியேறினாள் மீரா.

உலகத்தில் எட்டாவது அதிசயத்தைக் கண்டவன் போலக் கண்ணன் வாயைப் பிளந்து கொண்டு நின்றான்.

மீரா பஸ்சில் ஏறி வீடு வந்து சேர்ந்த போது அங்கு ஒரு அதிசயம் காத்து இருந்தது.

கண்ணனும் அவளோடு படியேறிக் கொண்டிருந்தான்.

"பார்த்தாயா, நீ விரட்டப் பார்த்தாலும் நான் உன் வீட்டுக்கே வந்து விட்டேன்." என்று பெருமையாகச் சிரித்தான்.

"உங்களை எங்கள் வீட்டுக்கு வரவேண்டாம் என்று சொல்லவில்லையே. உள்ளே வாருங்கள்" என்று வரவேற்றாள் மீரா. "அப்பா வீட்டில் இருக்கிறாரோ என்னவோ, சில சமயம் அவர் வர வெகு நேரம் ஆகி விடும்!" என்றபடி உள்ளே சென்றாள்.

"யார், மீராவா? சீக்கிரம் வா. இந்தச் சனியன்களுக்குக் காபியைக் கலக்கி ஊற்று. இந்த 'நள்ளிரவில் கோரக் கொலை'யைப் படிக்க விடாமல் தொண தொணக்கின்றன." நாயகி அவசரப்படுத்தினாள்.

"சித்தி எங்கள் ஆபீசு முதலாளி வந்து இருக்கிறார். அப்பா வந்து விட்டார்களா?" உரக்கக் குரல் கொடுத்தபடி வந்தாள் மீரா.

"முதலாளியா?" நாயகியின் குரல் கழுத்தைப் பிடித்தது போல் கப்பென்று அடங்கியது.

கதவின் இடுக்கு வழியாகப் பார்த்தாள். "ஏண்டி மீரா, ரொம்ப சின்ன வயசாக இருக்கிறாரே. அவருக்குக் கல்யாணம் ஆகிவிட்டதாமா?" என்றாள் ரகசியமாக.

சித்தியின் குறிப்பை உணர்ந்த மீராவின் முகம் சிவந்தது. "எனக்குத் தெரியாது சித்தி" என்றாள் கடுமையான குரலில்.

"நான் வரட்டுமா. மீரா?" என்று சத்தம் கொடுத்தான் கண்ணன், அவனுக்கு அதற்குள் போரடித்து விட்டது.

நாயகி கதவு இடுக்கில் இருந்து வெளியே வந்து நன்றாகவே தலையை நீட்டினாள்.

“நன்றாக இருக்கிறதே. முதன் முதலாக வந்திருக்கிறீர்கள். ஒரு காப்பித் தண்ணீராவது குடிக்காமலா போவது? இந்தாடி மீரா. ஒரு தம்ளர் காப்பி கலக்கிக் கொண்டு வா” என்றாள்.

மீரா காபி போடப் போனாள். காபியைக் கலந்து கொண்டு இருந்த போதே சித்தியின் குரல் தாராளமாகக் கேட்கவும் கலங்கினாள்.

அவள் அஞ்சியதற்கு ஏற்ப நாயகியும் தன் கணவனுடைய கையாலாகாத்தனத்தைப் பற்றி ஒரு புராணமும் பிள்ளையை நன்றாக வளர்க்க முடியாதது, பற்றி ஒரு காப்பியமும் பாடி முடித்தாள். கஷ்டம் என்று சொன்னால் சம்பளத்தைக் கூட்டித் தரமாட்டானா என்ற எண்ணம் அவளுக்கு. மூத்தாள் பெண் திருமணம் ஆகாமல் குதிர்போல் வளர்ந்து நிற்பது பற்றியும் குறைபட்டாள்.

‘குதிர் போல்’ அல்ல ‘கொடி போல்’ என்று மனதிற்குள் அவளைத் திருத்தினான் கண்ணன். இப்படி சித்தி வளமற்ற சூழ்நிலை - இதில் வளர்ந்தும் மீரா பணம் என்றதும் வாயைப் பிளக்கக் காணோமே.

மீரா காபியோடு வந்தாள், அதில் கொஞ்சம் குடித்து விட்டுப் “பிரமாதம்” என்றான். பிறகு நாயகியின் புறம் திரும்பினான். “அம்மா, நீங்கள் கஷ்டப்படுவதாகச் சொல்கிறீர்கள். உங்கள் மகளோ, காரில் கொண்டு விடுகிறேன் என்றால் பஸ்சுக்குத்தான் தண்டம் கொடுப்பேன் என்கிறாள்” என்றான்.

அவ்வளவுதான், நாயகி காளியாக மாறினாள். “ஏண்டி, இங்கென்ன கொட்டியா கிடக்குது. சந்தனம் மிஞ்சினால் என்பதுபோல் நடந்து கொள்கிறாயே” என்று கத்தினாள்.

மீராவுக்கு அவமானத்தால் முகம் கன்றியது.

“இல்லை சித்தி. அவருக்கு எவ்வளவோ வேலை இருக்கும். நம்மால் நேரம் கெடுவானேன்...” என்று முடிக்கும் முன், நாயகி குறுக்கிட்டாள்.

“அப்படி வேலை இருந்தால் உன்னைக் காரில் அழைத்துப் போகிறேன் என்பாரா? எவ்வளவு பெரிய மனிதர் அழைக்கிறார், நீ முகத்தில் அடித்தது போல் மாட்டேன் என்று சொல்லி இருக்கிறாயே. குதிருக்கு ஆவதுபோல் பத்தொன்பது வயதாகிறது. இன்னும் மனிதரின் தராதரம் அறிந்து பழகத் தெரியவில்லையே!” என்று பொரிந்தாள் நாயகி.

“இனி மேல் இல்லை சித்தி” என்றாள் மீரா அடங்கிய குரலில். மேலும் எதிர்த்தால் நாயகியின் வேகம் அதிகமாகுமே.

“நான் வரட்டுமா?” என்று கண்ணன் எழுந்தான்.

“சரிங்க இவளுக்கு நாலு பேரிடம் பேசிப் பழகத் தெரியாது. நீங்கள் தப்பாக எண்ணிவிடக் கூடாது. இந்தாடி மீரா, அய்யாவை வாசல்வரை கொண்டு போய் வழி அனுப்பிவிட்டு வா” என்று மகளை அனுப்பினாள்.

மீரா சங்கடத்துடன் கண்ணனைப் பார்த்தாள். அவன் முகத்திலோ புன்னகை மலர்ந்து இருந்தது. நிலைமையை ரசிப்பவன் போலத் தென்பட்டான். மீரா உதட்டைக் கடித்துக் கொண்டு கண்ணனோடு நடந்தாள்.

“வரட்டுமா, மீரா?” என்றான் கண்ணன்.

“சரி சார்” என்றாள் மீரா.

சித்தி அப்படித்தான் கொஞ்சம் ஒரு மாதிரிப் பேசுவார்கள் என்று அவனிடம் சொல்லலாமா என்று மீராவுக்குத் தோன்றியது. கூடவே அவன் அன்னியன். அவனிடம் வீட்டு மனிதரின் குணத்தை விமர்சிப்பது தவறு என்று தோன்றியது. பேசாமல் வாய் மூடி நின்றாள்.

கண்ணன் காரை நோக்கி நடந்தான். அப்போது மணலில் பம்பரம் விளையாடி விட்டு மது திருப்பி வந்தான். தன் வீட்டு வாசலில் நின்ற காரைக் கண்டதும் ஆவலோடு தொட்டுப் பார்த்தான். தொட்ட இடத்தில் புழுதி ஒட்டியது. அதனைப் பார்த்துக் கொண்டு இருந்த கண்ணனுடைய முகம் கறுத்தது. "ஆ... இந்தாப்பா. தொடாதே" என்று அதட்டினான்.

மதுவின் முகம் சுண்டிப் போயிற்று. மீராவின் வதனம் வாடிச் சுருங்கியது. சின்னப் பிள்ளை தொட்டால் தேய்ந்தா போய்விடும்? வெடித்துக் கொண்டு வந்த வார்த்தைகளைப் பல்லைக் கடித்து அடக்கினாள். இப்போது தானே சித்தியிடம் பாட்டுக் கேட்டு இருக்கிறாள்.

கண்ணன் போய் விட்டான்.

மதுவை அணைத்துக்கொண்டு மீரா உள்ளே திரும்பினாள்.

"முகுந்தண்ணா மாதிரி இந்த ஆள் நல்லவர் இல்லே அக்கா" என்றான் மது.

மீராவுக்கு ஒரு வாரமாக முகுந்தனைப் பாராத வேதனை அவள் வேலை பார்க்கிறாள். பூங்காவுக்குச் செல்ல முடிய வில்லை. அவனாவது இங்கே வரலாம் அல்லவா? வந்து அறியாதவன் இல்லையே அதுவும் ஞாயிறுதோறும் கட்டாயமாக வருகிறவன் இந்த ஞாயிற்றுக்கிழமை முழுவதும் எட்டி கூடப் பார்க்கவில்லை அன்று சொல்லாமல் கொள்ளாமல் போனவன்தான். இன்றுவரை தகவல் இல்லை. அப்படித்தான் மீரா என்ன குற்றம் புரிந்து விட்டாள்?

மீரா கோபத்துடன் தம்பியிடம் சொன்னாள். "போடா, பெரிய முகுந்தண்ணா, அவரிடம் இந்த மாதிரிப் பெரிய கார் இருக்கிறதாடா?"

"இல்லாவிட்டால் போகட்டுமே, எனக்கு முகுந்தண்ணா தான் பிடிக்கிறது" என்றான் மது பிடிவாதமாக.

“பாவம் சின்னப்பிள்ளை. காரையும் பணத்தையும் வைத்து மனிதரை எடைபோடத் தெரிவதில்லை” என்ற முகுந்தனுடைய குரல் கேட்டு மீரா ஆர்வத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

முகுந்தன் அவள் முகத்தைப் பாராமலே மதுவிடம் ஒரு சாக்லெட்டைக் கொடுத்தான். மது சசியை அழைக்க ஓடினான்.

அதன் பின் மீராவிடம் திரும்பி, “அந்தத் திறமை எல்லாம் வளர்த்த பிறகுதான் வருகிறது” என்று மேலும் குத்திப் பேசினான்.

மீராவுக்கு மதுவிடம் தான் சொன்னது மறந்து விட்டது. கண்ணனின் பணத்தில் மீரா மயங்கி விட்டது போல் அல்லவா பேசுகிறான். அவள் என்ன அவ்வளவு மட்டமா? எவ்வளவு துணிவு இருந்தால் அப்படி நினைப்பான்.

“ஆமாம், காரை வைத்து எடை போடத் தெரியவில்லை. கையில் கிடைக்கும் சாக்லெட்டை வைத்துத்தான் எடை போடத் தெரிகிறது. சின்னபிள்ளைதானே” என்று அவளும் குத்திக் காட்டினாள்.

முகுந்தனுடைய முகம் கறுத்தது. மறுகணமே இயல்பாயிற்று. “பரவாயில்லையே மீரா! நீ திறமைசாலிதான் அதற்குள் கார் சவாரி கிடைக்கத் தொடங்கி விட்டது போல் இருக்கிறதே. இனி குறைவே இருக்காது” என்றான் ஏளனமாக.

“குறைவு இருக்கிறதா இல்லையா என்று கண்டு விட்டுப் போகத்தான் வந்தீர்கள்போல் இருக்கிறது” என்றாள் மீராவும் அதே குரலில்.

முகுந்தன் வெகு தோரணையாகத் தோளைக் குலுக்கிக் கைகளை விரித்தான். “அதுதான் இல்லை. நீ கூடச் சம்மதிக்கத் தொடங்கிய பிறகு குறை இருக்க முடியுமா? அது கூடத் தெரியாதா எனக்கு? வழியில் உன் அப்பாவைப் பார்த்தேன்.

பிடித்துக்கொணடு வந்து விட்டார். தெரு முனைவரை வந்து விட்டு சீவல் வாங்கப் போய் விட்டார்."

அவன் பேச்சின் பிற்பகுதியை மீரா கவனிக்கவில்லை.

மீரா சட்டெனக் கேட்டாள். "முகுந்தன்! நான் வேலையில் சேர்ந்தது பற்றி உங்களுக்குக் கோபமா?"

"கோபமா?" அவன் கண்களை முடிந்த அளவு அகலமாக விரித்தான். "உன் மீது கோபப்பட நான் யாரம்மா!" என்று வெகு சாதாரணமாகச் சொன்னான்.

"உம்... நிச்சயம் கோபமேதான் . இல்லாவிட்டால் இப்படியா பேசுவீர்கள்?" என்றாள் மீரா.

"உஸ்... மெள்ளப் பேசு, யாரேனும் கேட்டால் தப்பாக அல்லவா நினைப்பார்கள். மெய்யாகவே உன் மேல் எனக்கு என்ன கோபம்? ஆண்களோடு பழகி அறியாதவள் ஆயிற்றே, திண்டாடுவாயோ என்றுதான் எச்சரித்தேன். நீ இவ்வளவு கெட்டிக்காரி என்று எனக்கு அப்போது தெரியாது. மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கவா வேண்டும்?" என்று போகிற போக்கில் ஓர் அம்பை வீசிவிட்டுப் போனான்.

மீரா விக்கித்து நின்றாள். கோபம் இல்லை. கோபம் கொள்ள உரிமை இல்லை என்கிறானே. அவனுடைய உணர்ச்சிகளைப் பற்றி அவள்தான் அதிகப்படியாகக் கற்பனை செய்து கொண்டு விட்டாளோ? மீராவுக்கு நெஞ்சு டபடபத்தது. இல்லை, இல்லை அவன் ஏனோ வேடம் போடுகிறான், வேண்டும் தானே சொல்லிக் கொண்டாள். திருப்பித் திருப்பிச் சொன்னாள். சற்று மனதை திடப்படுத்திக்கொண்டு உள்ளே சென்றாள்.

அப்போது அவளுடைய சிற்றன்னை முகுந்தனிடம் ஒரு கேள்வி கேட்டுக் கொண்டு இருந்தாள். "அந்தக் கண்ணனை உங்களுக்குத் தெரியுமாமே தம்பி. அவருக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?" என்று வெகு ஆவலுடன் கேட்டாள்.

அதன் உட்குறிப்பை உணர்ந்த மீராவின் முகம் ஒரே ரத்தமாகி விட்டது. "சீ, என்ன கேள்வி எல்லாம் கேட்கிறீர்கள் சித்தி?" என்று அதட்டினாள்.

நாயகியா பயப்படுகிறவள்!

"ஏன், நான் கேட்டதில் என்ன தப்பு? வீட்டில் வயதுக்கு வந்த பெண் இருந்தால் நல்ல வரன் எங்கே இருக்கிறான் என்று தான் எல்லாப் பெற்றோரும் தேடுவார்கள். நீ மூத்தாள் பெண் என்பதனால் உனக்குக் கல்யாணம் செய்யாமலே நான் இருக்க முடியுமா? பிறகு ஊர் என்னை நார்நாராகக் கிழித்து விடாதா?" என்று அடுக்கினாள். "என்ன தம்பி நான் சொல்வது" என்று முகுந்தனிடமே கேட்க வேறு செய்தாள்.

"சரிதான் சின்னத்தை. ஆனால் அதை மூன்றாம் மனிதனான என்னிடம் கேட்கக்கூடாது. தன்னிடம் தனியே கேட்கவேண்டும் என்கிறாள் மீரா. அவ்வளவு தான் விஷயம்" என்று விளக்கினான் முகுந்தன்.

மீரா முகுந்தனை வெறித்துப் பார்த்தாள். முகுந்தனா இப்படிப் பேசுகிறான்!

முகுந்தன் மீண்டும் பேசினான். "மீரா, உனக்குப் பதவி உயர்வு கிடைத்து இருக்கிறதாமே! கண்ணனைக் காலையில் பார்த்தபோது சொன்னான். சிலருக்கு வாழ் நாள் முழுவதும் முயன்றாலும் முடிவது இல்லை. உன் திறமை - ஒரே வாரத்தில் உயர்ந்து விட்டாயே! என் மனமார்ந்த வாழ்த்துக்கள்" என்றான்.

வாழ்த்தே வசையாக முடியுமா? அப்படித்தான் ஆயிற்று முகுந்தன் பேசிய பேச்சு.

# 11

அன்றும் முகுந்தன் மீராவின் வீட்டுக்கு வந்தான். அதாவது, தில்லைநாதர் வழியில் அவனைக் கண்டு விடாப் பிடியாய் வீட்டுக்கு அழைத்து வந்திருந்தார். மற்றபடி அவனாகத்தான் வருவதே இல்லையே!

அவனிடம் நாயகி பிரமாதமாகப் பெருமை அடித்தாள். "உங்களுக்குத் தெரியுமா, தம்பி? இப்போது மாதம் ரூ. 350 சம்பாதிக்கிறாளாக்கும். இப்படியே போனால், இன்னும் கொஞ்ச நாளில் உங்களைக்கூட மிஞ்சி விடுவாள். நூறு ரூபாய் ஊதிய உயர்வாக்கும்" என்று ஜம்பம் போசினாள்.

அவளுக்கு முகுந்தனைப் பிடிக்கவில்லை. அவனை மட்டம் தட்டியவன் அல்லவா? இப்போது மீராவின் முன்னேற்றத்தைச் சாக்கிட்டு அவனைப் பதிலுக்கு மட்டம் தட்ட முனைந்தாள்.

"கேள்விப்பட்டேன்" என்று முகுந்தன் சுருக்கமாக முடித்து விட்டான்.

நாயகியா விடுகிறவள்? "முகுந்தன் தம்பிக்கு காபி கொண்டு வா" என்று மீராவை உள்ளே அனுப்பினாள். "தம்பி! அந்த முதலாளிக்கு மீரா என்றால் உயிர். கூடிய சீக்கிரம் கல்யாணம் கூட இருக்கும். நாளைக்குக் கூட ஏதோ விருந்தாம். அதற்கு மீராவையும் அழைத்துப் போகிறாராம். அங்கே போக 'பளபள'வென்று ஒரு சேலை வாங்கிக் கொடுத்து இருக்கிறார் பார்."

முகுந்தனுடைய உடம்பு எரிந்தது. கண்டவனிடமிருந்து - அவன் முதலாளியாகத்தான் இருக்கட்டுமே கட்டுகிற சேலையைப் பரிசு வாங்கக்கூட மீரா தயாராகி விட்டாளா? சே.

மேலும் அந்த வீட்டில் இருக்க முடியாமல் வெளியேற எழுந்தான். ஏதோ நினைத்தவனாக, "எங்கே விருந்தாம்?" என்று வினவினான்.

"அது... அது என்ன பேருங்க?" என்று தில்லைநாதரிடம் கேட்டாள் நாயகி.

"துவாரகாநாத் கம்பெனிக்காரர்கள் விருந்து கொடுக்கிறார்கள். பெரிய கம்பெனி இல்லையா?" என்றார் தில்லைநாதர்.

துவாரகாநாத்தின் விருந்து எப்படி இருக்கும் என்பது முகுந்தனுக்குத் தெரியாதா?

"எப்படித் திரும்பி வருகிறாளாம்? முதலிலேயே கிளம்பி விடுகிறாளா?" என்று கேட்டான் முகுந்தன்.

"விருந்து முடிந்ததும் அந்த முதலாளித் தம்பியே கொண்டு வந்து விட்டு விடுவாராம்! அவர் மீராவைத் தனியாக அனுப்புவாரா? அவர் மனசு தாங்காதே" என்று பெருமையடித்தாள் நாயகி.

முகுந்தன் தில்லைநாதரை நேராகப் பார்த்தான். "விருந்து முடிய வெகு நேரம் ஆகிவிடும். அவ்வளவு நேரம் கழித்து மீரா அடுத்தவனுடன் வீடு திரும்புவதா?" என்று அழுத்தமான குரலில் கேட்டான்.

தில்லைநாதர் பதில் சொல்ல முடியாமல் திணறினார்.

நாயகி உதவிக்கு வந்தாள். "அடுத்தவனுடன் என்று நீங்கள் எப்படிச் சொல்லலாம்? ஆபீஸ் உறவுக்கு அவர் முதலாளி, மற்ற வகைக்குக் கட்டிக்கொள்ளப் போகிறவர். அவளுடைய கஷ்டம்

எல்லாம் இனி அவருடையதுதானே! அவரோடு வந்தால் என்னவாம்?'' என்று அடித்துப் பேசினாள் நாயகி.

"ஒன்றும் இல்லை, ஒன்றுமே இல்லை!'' என்றான் முகுந்தன், கசந்த குரலில். அவனுக்கு அதற்கு மேல் அங்கு இருக்கப் பிடிக்கவில்லை. உடனே விடை பெற்றுப் போய்விட்டான்.

காபியுடன் வந்த மீரா முகுந்தனைக் காணாமல் சோர்ந்தாள். அவளுடைய முகவாட்டத்தை நாயகி கவனித்தாள். அவள் மனதில் பல எண்ணங்கள் தோன்றின.

அன்றிரவு தனிமையில் கணவனைக் கண்டித்தாள். "உங்களுக்கு கொஞ்சமாவது மூளை இருக்கிறதா? இவனைப் போய் வீட்டுக்கு அழைத்து வருகிறீர்களே. மீராவைக் கண்டாலே சண்டைக்கு வருகிறான்.''

தலையணை மந்திரம் மெல்ல மெல்ல ஏறியது.

அந்த விருந்துக்கு செல்ல மீரா மிகவும் தயங்கினாள்.

"விருந்துக்கு நான் கட்டாயம் வந்து தான் ஆக வேண்டுமா சார்?'' என்று பத்தாவது தடவையாகக் கண்ணனிடம் கேட்டாள்.

"கட்டாயம், கட்டாயம் மீரா. இதுவும் உன் வேலையில் ஒரு பகுதிதான். எல்லாப் பங்குதாரர்களும் அவரவரின் செயலாளர்களோடுதான் வருவார்கள். அங்கேயே சில தொழில் முறைப் பேச்சுக்கள் நடக்கும். அதில் முக்கியமானதை எல்லாம் நீ மனதில் குறித்துக் கொள்ள வேண்டும்'' என்றான் கண்ணன்.

"எது முக்கியம் என்றே எனக்குத் தெரியாதே இந்த வேலையே இன்னமும் எனக்குப் பிடிபடவில்லை. இதற்குள் முக்கியம் கண்டு பிடிக்க எப்படி முடியும்? ஒன்று செய்யுங்கள். நீங்கள் அந்தப் பழைய செயலாளரையே இங்கு வர வழைத்து விடுங்கள். அதுதான் உங்களுக்கு வசதி. நான் பழைய வேலைக்கே போய் விடுகிறேன்'' என்றாள் மீரா.

"சம்பளம் நூறு ரூபாய் குறைந்து போகுமே" என்று சுட்டிக் காட்டினான் கண்ணன்.

மீரா ஒரு வினாடி யோசித்தாள். பிறகு, "பரவாயில்லை சார். உழைப்புக்குத் தக்க ஊதியம். அதிக ஆசைப்படக்கூடாது. எனக்கு வெறும் தட்டெழுத்துதான் லாயக்கு. இந்த வேலைக்கு நான் தகுதி இல்லை" என்றாள்.

கண்ணன் வாய்விட்டுச் சிரித்தான். "உன் தகுதி எனக்குத் தெரியும் மீரா. உன்னைவிட இதற்குத் தகுதியானவர் யாருமே இல்லை" என்றான்.

"ஆனால் இந்த விருந்தில்..."

"அதைப் பற்றி பயப்படாதே. உன் கூட நான் எதற்கு இருக்கிறேனாம். எல்லாம் நான் பார்த்துக் கொள்வேன். நீ மட்டும் அவ்வப்போது புன்னகை செய்தபடி இருந்தாலே போதும். போகப் போக உனக்கே எல்லாம் தெரிந்துவிடும்" என்று ஆறுதலாகச் சொன்னான் கண்ணன்.

கண்ணனுடைய மனதில் வேறு எண்ணம் இருந்தது. அதற்கு முதல் படியாக இப்போது மீராவைப் பெருமையுடன் தன் சகாக்களுக்குக் காட்ட எண்ணினான்.

சரிகைச் சேலையில் மீரா ஜொலித்தாள். இயற்கையிலேயே அழகி. பொன்னுக்கு மெருகு ஏற்றியது போல் விளங்கினாள்.

மீராவை அழைத்துச் செல்லக் கண்ணனே வந்தான். அவளை விழுங்குவது போல் பார்த்தான். காரில் செல்லும் போது ஓர் ஒதுக்குப்புறமாகக் காரை நிறுத்தினான் "என்ன சார்?" என்றாள் மீரா.

"நீதான். உன்னைப் பார்த்தால் அப்படியே விழுங்கி விடலாம் போல் இருக்கிறது. பாதாம் அல்வா மாதிரி இருக்கிறாய்" என்றான் கண்ணன்.

“இப்படி எல்லாம் என்னிடம் பேசாதீர்கள் சார்” என்றாள் மீரா கண்டிப்பான குரலில்.

“ஆமாம் அதற்கு அவசரம் இல்லைதான். கிணற்று வெள்ளம் என்று சொல்லுவார்களே...” என்றான் கண்ணன்.

“புரியவில்லை” என்று புருவத்தைச் சுளித்தாள் மீரா.

“பிறகு சொல்கிறேன்” என்று ஒரு மர்மப் புன்னகையுடன் கண்ணன் காரை எடுத்தான்.

விருந்து நடக்கும் இடத்தை அடைந்தனர்.

கோட்டும் சூட்டுமாக ஆண்களும், பட்டாம் பூச்சி போல பலவகை உடைகளுடன் பெண்களும், எல்லோருமே உல்லாசமாக விருந்துக்கு வந்திருப்பது போல் இருந்ததே தவிர, தொழில் பேச்சு நடத்த வந்தது போல் தெரியவில்லை.

உள்ளே சென்றபோது ஒரு லுங்கி, பனியன் (பளபளக்கும் வலையால் ஆனது) அவர்களைத் தாண்டிச் சென்றது. மீராவின் கண்கள் அகன்றன. “இது பெண் தான். ஒரேயடியாக ஆச்சரியப்படுகிறாயே. சென்னையில் தெருக்களில் பாராததா?” என்றான் கண்ணன்.

“தெருவில் சின்னப் பெண்கள் போட்டுக் கொண்டு அலைகிறார்கள். ஆனால் பொறுப்பான பதவியில் இருப்பவர்கள் கூடவா?”

கண்ணன் அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான். “எல்லோரும் தான் அணிகிறார்கள். பார்க்கப் போனால் அவளைவிட இது உனக்கு நன்றாக இருக்கும்.”

“நானா? சேச்சே. நான் இதுபோல் ஒரு நாளும் உடுத்த மாட்டேன்!” என்றாள் மீரா அருவருப்பாக.

“நான் விரும்பினால் கூடவா?”

“உங்களுக்கு என்ன கொம்பா முளைத்திருக்கிறது” என்று வெடுக்கெனப் பதில் வந்தது.

கண்ணன் சிரித்தான். “அதனால் பரவாயில்லை நீதான் இந்தச் சேலையிலேயே ஆளை மயக்குகிறாயே.”

“யாரும் என்னைக் கண்டு மயங்க வேண்டியது இல்லை” என்றாள் மீரா எரிச்சலுடன்.

“சரி, சரி மீராவைக் கண்டு மயங்கக்கூடாது என்று சொல்லி விடலாம் வா” என்று கண்ணன் மீராவை அழைத்துப் போனான்.

அங்கங்கே கும்பல் கும்பலாக நின்றவர்களுக்கு மீராவை அறிமுகம் செய்து வைத்தான். சிலர் வெளிப்படையாக அழகி என்ற போது மீரா முகம் சிவந்தாள்.

அறிமுகப் படலம் நடந்த போது சில ஆண்கள் மீராவின் கையைப் பிடித்துக் குலுக்கத் தொடங்கிவிட்டார்கள். மீரா திணறித் தடுமாறிப் போனாள். ஆனால் கண்ணனுக்கு அதில் ஒன்றும் தெரியவில்லை போலும். சிரித்துக் கொண்டே மீராவை வேறுபுறம் அழைத்துச் சென்றான்.

திடீர் என்று மீரா ‘பிரேக்’ போட்டது போல் நின்றாள். அங்கே முகுந்தன் நின்று கொண்டிருந்தான்!

## 12

மீரா முகுந்தனை இதுவரை கோட்டும் சூட்டுமாகப் பார்த்ததே இல்லை. இப்போது பார்த்ததும் ஆச்சரியத்தால் வாயைப் பிளந்தாள். அந்த உடையில் அறையில் இருந்த அத்தனை பேரையும் விட முகுந்தன் நெட்டையாக

தோன்றினான். மீரா தன்னை மறந்து அவனைப் பார்த்துக் கொண்டே நின்றாள். அதற்குள் முகுந்தனும் அவள் பக்கமாகத் திரும்பினான். மீரா சமாளித்துக் கொண்டு, "முகுந்தன், நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்?" என்ற வியப்புடன் கேட்டாள்.

முகுந்தன் சாதாரணமாக மீராவை நோக்கினான். உதடுகள் இகழ்ச்சியாக மடிந்தன. "ஏன் இங்கு வர உனக்கு மட்டும் தான் தகுதி இருக்கிறது என்று நினைத்தாயா?" என்றான் அமைதியாக.

மீராவுக்குச் சுருக்கென்றது. சாதாரணமாகக் கேட்ட கேள்விக்கு இப்படி ஒரு பதிலா? சூடாகப் பதில் சொல்லத் துடித்த நாக்கை அடக்கினாள். ஏற்கனவே அவனுடன் தகராறு இன்னமும் வளர்ப்பானேன்?

மீரா நின்று விட்டதைக் கண்ட கண்ணன் திரும்பி வந்தான். "என்ன சார்?" என்றவன் முகுந்தனைப் பார்த்தான் "ஓகோ முகுந்தனோடு பேசிக்கொண்டு இருந்தாயோ? என்ன முகுந்தன், மீரா இன்று எப்படிப் பளபளக்கிறாள் பார்த்தாயா? இந்தச் சேலை அவளுக்கு மிகவும் அழகாக இருக்கிறது அல்லவா" என்று பெருமையோடு கேட்டான்.

"ஆமாம். நல்ல பாம்புத் தோல் மாதிரி அழகாக இருக்கிறது" என்றான் முகுந்தன். மீரா திடுக்கிட்டாள்.

கண்ணன் ஓகோ என்று சிரித்தான். "உனக்கு உதாரணம் சொல்லக்கூடத் தெரியவில்லையே, பாம்பையா பெண்ணோடு ஒப்பிடுவார்கள். மயில் தோகை போல் அழகாக இருக்கிறது என்று கூற வேண்டும். பெண்களோடு பழகி இருந்தால் அல்லவா உனக்கு இதெல்லாம் தெரியும்?" என்றான்.

"முகுந்த், உனக்கு இந்த மாதிரி விருந்து என்றால் பிடிக்காதே. எப்படி வந்தாய்?" என்று வியப்புடன் மேலும் கேட்டான்.

“கம்பெனி சார்பில்!” முகுந்தன் சுருக்கமாகப் பதில் சொன்னான்.

“நீ மட்டும் அல்லது...” கண்ணன் சுற்றிலும் பார்த்தான். அங்கே அருகில் ஒரு பெண் நின்றாள். கண்களில் ஏக்கத்துடன் கண்ணனுடைய முகத்தையே பார்த்தாள். அவளைக் கண்டதும் கண்ணன் முகம் கறுத்தது.

“வருகிறாயா மீரா! இன்னமும் நிறையப் பேரைப் பார்க்க வேண்டும். முகுந்தன், பிறகு சந்திப்போம்” என்று கிளம்பி விட்டான்.

மீரா செல்லுமுன் அந்தப் பெண்ணைத் திரும்பிப் பார்த்தாள். ஒரு வினாடி அவள் பார்வை மீராவின் பார்வையோடு இணைந்தது. இந்தப் பார்வையில் என்ன இருந்தது? வெறுப்பு என்று மீராவுக்குத் தோன்றியது. அறிமுகம் இல்லாத அந்தப் பெண் மீராவை ஏன் வெறுப்புடன் பார்க்க வேண்டும்.

எல்லோரும் சிறுசிறு கூட்டங்களாகப் பிரிந்து உரையாடிய வண்ணம் தட்டில் உணவுப் பண்டங்களை எடுத்துத் தின்று கொண்டு அலைந்ததைக் கண்டாள். பார்க்க அவளுக்கு வேடிக்கையாகக் கூட இருந்தது. வேடிக்கை பார்க்கும் ஆர்வத்தில் முகுந்தனுடைய குத்தல் பேச்சு கூட மழுங்கிப் போயிற்று. முகுந்தனும் அதன் பின் அவள் அருகில் வரவே இல்லை.

எதிரே ஒரு பணியாள் ஒரு அழகுத் தட்டில் அழகிய கிண்ணங்களோடு வருவதை கண்டாள். கிண்ணங்களில் செந்நிறத் திரவம் இருந்தது. மீரா திகைப்புடன் கண்ணனைப் பார்த்தாள். “என்ன அது” என்று சந்தேகத்துடன் கேட்டாள்.

“மது” என்றான் கண்ணன் சாதாரணமாக.

இதை கேட்டதும், மீராவின் முகம்போன போக்கைக் கண்டு சிரித்தான் கண்ணன்.

“உனக்கு ஆப்பிள் சாறு கொண்டு வரச் சொல்லுகிறேன், பயப்படாதே!” என்றபடி தனக்கு ஒரு கிண்ணத்தை எடுத்துக் கொண்டான். ஒரே விழுங்கில் அந்தக் கிண்ணத்தை காலி செய்து விட்டு அடுத்த கிண்ணத்தை எடுத்தான். கிண்ணம் கிண்ணமாக அவன் குடிப்பதை மீரா பார்த்தாள். அச்சம் பிறந்தது.

“வேண்டாம் சார்....” என்று மெல்லச் சொல்லிப் பார்த்தாள்.

“இது ஒன்றும் இல்லை மீரா!” என்று சிரித்தான் கண்ணன். “குடித்து எவ்வளவு நாள் ஆயிற்று தெரியுமா?” என்று அடுத்த கிண்ணத்தை எடுத்தான்.

யாரோ ஆங்கில இசைத் தட்டைச் சுழல விட்டார்கள். சில ஜோடிகள் இசைக்கு ஏற்ப ஆடத் தொடங்கினர். திடீர் என்று தன் தோளை யாரோ தொடவும் மீரா திடுக்கிட்டுத் திரும்பினாள்.

ஒரு கம்பளிப்பூச்சி மீசைக்காரன். “ஆடலாம் வா” என்று மீரா கையைப்பற்றி அழைத்தான்.

திராவகம் பட்டாற்போல் மீரா அவன் கையை உதறி எறிந்தாள். கண்ணனை அழைத்தாள்.

கண்ணன் சிரமத்துடன் கண்களை விழித்துப் பார்த்தான். “கூப்பிட்டால் சும்மா ஆடுபோ” என்று மேஜையில் தலையைச் சாய்த்துக் கொண்டான்.

மீரா திகைப்புடன் நிமிர்ந்தாள். கம்பளி மீசைக்காரன் மீண்டும் கையை நீட்டினான். அவன் கைபடா வண்ணம் மீரா சட்டென நகர்ந்தாள். “எனக்குத் தெரியாது” என்றபடி வேகமாக நடந்தாள். அவனும் தன்னைப் பின் தொடர்வதைக் கண்டு அஞ்சினாள்.

ஆபத்தில் தாயை தேடும் குழந்தை போல முகுந்தனை தேடினாள். அவன் கண்களிலேயே காணவில்லை.

கம்பளி மீசைக்காரன் தன்னை மிகவும் நெருங்கி விட்டதைக் கண்டாள்.

சட்டென ஒரு கும்பலின் பின்னே சென்று அங்கிருந்த திரைச் சீலையின் பின்னே ஒளிந்தாள். பிறகு தான் அது ஒரு கதவை மறைத்துப் போடப்பட்டு இருந்த திரை என்பது தெரிந்தது. கதவைத் திறந்தாள். பெரிய தோட்டம் கண்ணில் பட்டது. தோட்டத்தில் இறங்கிப் போனாள். மரங்கள் அடர்ந்த பகுதியில் மறைந்தபடி நின்றாள்.

இப்போது என்ன செய்வது என்று சிந்தித்தாள். கண்ணன் இருக்கும் நிலை அச்சத்தைத் தந்தது. 'எவனுடனும் ஆடு' என்று சொல்லும் அளவுக்குச் சுய நினைவை இழந்து இருந்தான். குத்தினாலும் கிழித்தாலும் சமயத்தில் முகுந்தன் உதவி செய்வான். அவனையும் காணவில்லையே இங்கிருந்து எப்படி போவது?

அந்தக் கம்பளி மீசைக்காரனைப் பார்த்தாலே உடல் சிலிர்க்கிறது. அவன்...

திடீரெனப் பின்புறம் அசைவு தோன்றவும் மீரா திரும்பினாள். அந்தக் கம்பளி மீசைக்காரனேதான்!

மீரா தன்னை மீறிய பயத்தில் ஓட முனைந்தாள் அதற்குள் அவன் கைகள் அவளை வளைத்தன.

"நல்ல மறைவான இடம் கண்ணு. யாருக்கும் தெரியாது!" என்றான் அவன் திருப்தியோடு.

மீரா தன் பலம் கொண்ட மட்டும் அவனைப் பிடித்துத் தள்ளினாள். அவன் அவளைத் தன்புறமாக இழுத்துக் கொண்டு இருந்தான்.

இனி பலத்தால் முடியாது. கத்த வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்தாள் மீரா.

அதே நேரத்தில் அவன் பிடி தளர்ந்தது. அவள் அவனுக்கு எதிர்த் திசையில் போய் விழுந்தாள்.

அதே வேகத்தில் எழுந்து திகைப்புடன் நிமிர்ந்து பார்த்தாள். அங்கே எரிமலையாய் நின்று கொண்டு இருந்தான் முகுந்தன்.

"முகுந்தன்!"

வியப்பும், மகிழ்ச்சியும், ஏக்கமும் கலந்த குரலில் மீரா அவனை அழைத்தாள்.

முகுந்தன் அவளைப் பார்க்கவே இல்லை. "சீக்கிரம் எழுந்திரு உடைகளைக் சீர்படுத்திக்கொள்" என்றான் கடுமையான குரலில்.

மீரா எழுந்து கம்பளி மீசைக்காரனைத் திரும்பிப் பார்த்தாள். அவன் பிணம் போலக் கிடந்தான். அச்சத்துடன் "இவன்..." என்று இழுத்தாள்.

"அவனுக்கு ஒன்றும் இல்லை. சற்று நேரம் உணர்வு இழக்கும்படி பிடரியில் ஒரு தட்டு தட்டினேன், சிறிது நேரத்தில் விழித்துக்கொள்வான். நீ வா" என்று அவளை அழைத்து கொண்டு போனான்.

வாயிலுக்குச் சென்றதும், மீரா சற்று தயக்கத்துடன் நின்றாள்.

"என்ன?" என்றான் முகுந்தன்.

"கண்ணன் சாரிடம் சொல்ல வேண்டாமா?"

"நீ சொன்னால் கூடப் புரியக் கூடிய நிலையில் அவன் இல்லை. புறப்படு" என்றான் முகுந்தன்.

மீரா பதட்டம் முழுவதும் தீராமல் திரும்பிப் பார்த்தாள்.

"சீக்கிரம் மீரா" என்றான் முகுந்தன் அழுத்தமாக "நேரம் ஆகிவிட்டால் டாக்சி கிடைக்காது."

காது கேளாதவள் போல் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

பௌர்ணமி நிலவு. முகுந்தனின் அழகுக்கும் கம்பீரமான தோற்றமும் மெரு கூட்டிக் கொண்டிருந்தது.

மீராவின் மனம் அவனிடம் ஓடிச் சென்று ஒட்டிக் கொண்டது.

"முகுந்தன்..." என்று அழைத்தபடி அவன் கையைப் பற்றினாள்.

முகுந்தன் குனிந்து அவளைப் பார்த்தான். மீராவின் சேலையில் பதிக்கப்பட்டு இருந்த செயற்கைக் கற்களில், நிலவொளி பட்டுத் தெறித்தது. முகுந்தனின் முகம் கறுத்தது. மீராவின் கைகளை விலக்கி விட்டான்.

"தப்பு மீரா. விலகி நட. யாரேனும் பார்த்தால் தவறாக எண்ணுவார்கள். அதோடு மெய்யான தமிழ்ப் பெண்கள் எந்த நிலையிலும் நிலை தடுமாறுவதும் இல்லை" என்றபடி முன்னே நடந்தான்.

கடலில் நதி கலப்பது இயற்கை. இதை நிலை தடுமாறல் என்று முகந்தன் சொல்லுகிறானே என்று மீரா வேதனையுடன் நினைத்தாள்.

பேசாமல் அவன் பின்னே நடந்தாள். அவள் மனதில் ஒன்று தோன்றியது.

"முகுந்தன், நான் வேலையை விட்டு விடப் போகிறேன்" என்றாள்.

"ஏன்?"

"அதனால் பெரிய தொல்லை."

"ஏது திடீர் ஞானோதயம் ஏற்பட்டுவிட்டது? இங்கே போதி மரம் கூட இல்லையே!" என்றான் கிண்டலாக.

"கேலி செய்யத் தேவையில்லை. நான் மெய்யாகவேதான் சொல்லுகிறேன்" என்றாள் மீரா.

"விடியும் வரையாவது இந்த உறுதி நிலைக்குமா மயான உறுதி, பிரசவ வைராக்கியம், குடிகாரன் பேச்சு என்று

எத்தனையோ உதாரணம் சொல்லுவார்களே - அது போல்..." என்று முகுந்தன் குரல் மாறாமலே சொன்னான்.

"நீங்கள் வேண்டுமானால் பாருங்களேன். நாளை இல்லை நாளை நேரமாகிவிடும், நாளை மறுநாள் பூங்காவுக்கு வருவேன். அப்போது தெரிந்து விட்டுப் போகிறது."

"ம்... பார்க்கலாம்" என்றான் முகுந்தன் நம்பிக்கை இல்லாத குரலில்.

இதற்குள் ஒரு டாக்சி கண்ணில் பட்டது. அதில் ஏறி வீடு வந்து சேர்ந்தனர்.

## 13

மறு நாள் அலுவலகத்தில் கண்ணனைப் பார்த்ததுமே மீரா அவனிடம் சொன்னாள். "சார்! நான் வேலையை விடப் போகிறேன்."

"நான் உன்னை விட்டால்தானே" என்றான் கண்ணன் விளையாட்டாக.

"நான் மெய்யாகவே சொல்லுகிறேன்" என்றாள் மீரா உறுதியாக.

"நானும் உண்மையாகத்தான் சொல்லுகிறேன். இதோ பார் மீரா, அதிக நாட்களுக்குப் பிறகு, நேற்று எப்படியோ சற்று அதிகம் குடித்து விட்டேன். அதனால் நீ வீட்டுக்குத் தனியாகச் செல்லத் திண்டாடி இருப்பாய். எப்படியோ நீதான் வீட்டுக்குப் போய் விட்டாயே! இதற்கு ஆத்திரப்பட்டுக்கொண்டு

வேலையை விட வேண்டுமா? இனிமேல் விருந்துக்குப் போவது என்றால், உனக்கு வீடு திரும்ப இன்னொரு கார் ஏற்பாடு செய்து விடுகிறேன். சரிதானா?'' என்றான்.

கண்ணனுக்கு முந்திய நாள் நல்ல குடி மயக்கம். தான் வீடு வந்து சேர்ந்த விதமே அவனுக்குத் தெரியாது. காலை ஒன்பது மணிக்கு மேல்தான் விழித்தான். அதன் பிறகுதான் மீராவின் நினைவே வந்தது. உடனே மீராவின் வீட்டுக்குப் போனான். அவள் அலுவலகம் சென்று விட்டதாக வீட்டில் தெரிவித்தார்கள். சற்று நேரம் பேசிக்கொண்டு இருந்து விட்டு அலுவலகத்துக்கு வந்தான்.

கண்ணன் எப்படியோ மீராவை மறந்து அங்கே விட்டு விட்டு வந்து விட்டான். மீராவும் கெட்டிக்காரத்தனமாய் வீடு வந்து சேர்ந்து விட்டாள். எல்லாம் நல்லபடியாக முடிந்து விட்டது. இனி வருந்தவோ சினம் கொள்ளவோ அதில் என்ன இருக்கிறது?

ஆனால் முதல் நாள் பட்ட வேதனையை எண்ணி மீரா கொதித்தாள்.

"விருந்தா? இன்னொரு முறை வருவதா? நான் வேலையில் இருந்தே விலகுகிறேன், என்கிறேன் - புரியவில்லை?'' என்றாள் சினத்துடன்.

"இல்லையே'' என்று கண்ணன் விளையாட்டாகக் கைகளை விரித்தான்.

மீரா சலிப்புடன் எழுந்து சென்று விட்டாள்.

மாலை வீடு திரும்பும் நேரம் ஆயிற்று. மீரா கடைசியாகத் தன் வேலையை ராஜினாமா செய்து ஒரு கடிதம் "டைப்'' செய்தாள். தன் மேசை மீது அதை வைத்து விட்டு எழுந்து வீட்டுக்கு போனாள். வீட்டில் தந்தையின் வரவுக்காகக் காத்து இருந்தாள்.

நாயகி ஏதோ சொல்ல வாயெடுத்து விட்டு மூடிக் கொண்டாள்.

தில்லைநாதர் வரும்போதே ஒருவித அட்டகாசத்துடன் வந்தார். கை நிறைய ஆப்பிள்களும் திராட்சையும், "ஏ நாயகி! இந்தா, இதை எல்லாம் உள்ளே கொண்டு வை" என்றார் அதட்டலாக.

மீரா வியப்புடன் தகப்பனாரைப் பார்த்தாள். சித்தியை அதட்டக்கூட அப்பாவுக்குத் தெரியுமா?

"அப்பாடி, இன்று தான் எனக்கு நிம்மதியாக இருக்கிறது. எத்தனை வருடமா அந்தச் சிடுமூஞ்சியிடம் வேதனை பட்டேன். இந்தாடா என்று கால் கடுதாசியை அவன் முகத்திலே எறிந்து விட்டு வந்துட்டேன். இத்..."

"அப்பா!"

அதிர்ந்து போய்க் கூவினாள் மீரா. "நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

"ஆமாம்மா கண்ணன் இன்று காலையில் வந்தார் அல்லவா? அப்போது சொன்னார். 'ஏன் மாமா இன்னமும் இந்த ஓட்டை ராட்டு உத்யோகத்தைக் கட்டிக் கொண்டு ஆடுகிறீர்கள்?' இதை விட்டுத் தொலையுங்களேன், நான் உங்களுக்கு வேறு ஏற்பாடு செய்ய நினைத்து இருக்கிறேன்!" என்றார்.

"மெய்தானே, இவ்வளவு நாள் பிள்ளைகள்... பிள்ளைகள் என்று உயிரைக் கொடுக்காதீர்கள், வெந்ததும் வேகாததுமாக அள்ளிப் போட்டுக் கொண்டு அந்தச் சிடுமூஞ்சியிடம் ஓடினீர்கள். ஒரு நல்ல துணி உண்டா? ஒரு சரிகை வேட்டியேனும் வாங்கியிருப்பீர்களா? ஏதோ இவ்வளவு காலம் தான் உழைத்து உழைத்து ஓடாய் உருக்குலைந்தீர்கள். இப்போது

மகள் தலை தூக்கி விட்டாள். உங்களை கஷ்டப்பட விடுவாளா? அப்படி என்ன நன்றி கெட்ட பெண்ணையா பெற்றீர்கள்? பெற்றவருக்குச் சோறுபோட மாட்டேன் என்று சொல்ல மீரா ஒன்றும் படுபாவி அல்ல" என்று பெரிய பிரசங்கத்தையே செய்து முடித்தாள் நாயகி.

மீரா வாயடைத்துப் போனாள். அவள் மனதில் பட்ட தெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அப்பா வேலையை விட்டு விட்டார். வீட்டில் அடுப்பு எரிய வேண்டுமானால் அவள் வேலையை விட முடியாது. முகுந்தன் என்ன நினைப்பான்?

"என்ன மீரா?" என்று தில்லைநாதர் ஏதோ கேட்டார்.

கனவில் இருந்து விழித்தவளைப் போல, "என்னப்பா?" என்றாள் மீரா.

"உன் சம்பளத்தில் பாதியை நம் வீட்டுக்குத் தருவாய் அல்லவா அம்மா?" என்று வினவினார்.

மீரா பதில் சொல்லுமுன் நாயகி குறுக்கிட்டாள். "பாதி என்ன? முழுவதையும் தருவாள், இனியாவது அப்பாவும் சித்தியும் நன்றாக இருக்கட்டும் என்று அவளுக்குத் தோன்றாதா? நானும்தான் அவளுக்கு கொஞ்சமா செய்தேன். மூத்தாள் பிள்ளை என்று ஒரு வித்தியாசம் காட்டி இருப்பேனா? அந்த நன்றி அவளுக்கு இல்லாமல் போகுமா? கைச் செலவுக்கு ஒரு முப்பது நாற்பது எடுத்துக் கொண்டு மிச்சத்தை எல்லாமே தந்து விடுவாள். ஏன் மீராக்கண்ணு, அப்படித்தானே அம்மா?" என்று குழைந்தாள்.

"அப்படித்தான் சித்தி" என்றாள் மீரா மெல்லிய குரலில்.

மறு நாள் அலுவலகம் சென்றதும் மேசைமேல் இருந்த ராஜினாமா கடிதத்தை எடுத்தாள். சுக்கு நூறாகக் கிழித்துக் குப்பைக் கூடையினுள் எறிந்தாள். தலையைப் பிடித்துக் கொண்டு நாற்காலியில் சாய்ந்தாள்.

கண்ணன் வந்ததும், "அப்பாவிடம் ஏன் அப்படிச் சொன்னீர்கள்?" என்று பாய்ந்தாள்.

"காரணமாய்த்தான்" என்று கண்ணன் மர்மப் புன்னகை செய்தான்.

"என்ன காரணம்?" என்று மீரா சீறினாள்.

கண்ணன் சொல்லவில்லை. "இன்று உனக்கு மூடு சரியில்லை. பிறகு சொல்லுகிறேன்" என்று போய் விட்டான்.

மாலை நெருங்கியது. முகுந்தனிடம் மாலை வருவதாகச் சொன்னதை நினைத்தாள். அவனிடம் என்ன சொல்லுவது? எப்படிச் சொல்லுவது? சொல்லாமல் ஒளிந்து ஓட அவள் கோழை அல்ல. மேலும் நடந்ததை விளக்கமாகச் சொன்னால் முகுந்தன் புரிந்து கொள்ள மாட்டானா?

மீரா கண்ணனிடம் அரை மணி நேரம் முன்னதாக வீடு செல்ல அனுமதி கேட்டாள்.

"ஏன்?" என்றான் கண்ணன்.

"தோழியைப் பார்க்க வருவதாகச் சொல்லி இருக்கிறேன்" என்றாள் மீரா.

கண்ணன் அதற்கு மேல் ஒன்றும் கேட்கவில்லை, "சரி" என்று அனுப்பி விட்டான்.

மீரா பூங்காவில் வழக்கமான இடத்தில் சென்று அமரவும் முகுந்தன் வேலை முடிந்து வெளியே வரவும் சரியாக இருந்தது. முகுந்தன் வேகமாக நடந்து பூங்காவை அடைந்தான். மீராவின் குனிந்த தலையைக் கண்டதும் நடை நிதானமாயிற்று.

அருகில் வந்ததும், "மீராவா? ஏது இவ்வளவு தூரம்!" என்று வியப்புக் காட்டிப் பேசினான்.

மீரா மெல்ல எழுந்தாள். அவளுக்கு முகுந்தனைப் பார்க்கவே தைரியம் வரவில்லை, சொல்லிவிட வேண்டும் என்று

வந்த படியால் பேச்சை தொடங்கினாள். "முகுந்தன்! நான் வேலையைவிடப் போவதாக நினைத்தேன்..."

"அப்போது விடவில்லை போல் தெரிகிறது."

"இல்லை" என்றாள் மீரா.

"பாவம்! இதயம் இடம் கொடுக்கவில்லை போல் தோன்றுகிறது" என்றான் ஏளனமாக.

ஏற்கனவே மீரா எப்படிச் சொல்வது என்று திண்டாடிக் கொண்டிருந்தாள். முகுந்தனுடைய பேச்சுத் தோரணை அதை மேலும் கடினமாக்கியது. சமாளித்துக் கொண்டு சொன்னாள்.

"அப்படி இல்லை. எல்லாம் அப்பா செய்த வேலை? நேற்று அவர் தன் வேலையில் இருந்து விலகி வந்து விட்டார்."

"ஏனாம்?"

"இந்தக் கண்..."

கண்ணன் பேச்சைக் கேட்டுத் தன் வீட்டில் ஒன்று நடந்து விட்டது என்று முகுந்தனிடம் சொல்ல அவளால் முடிய வில்லை. அது தவறு போல் தோன்றியது தயங்கிப் பேச்சை நிறுத்தினாள்.

முகுந்தனுடைய கீழ் உதடு இகழ்ச்சியாக மடிந்தது. "கண்ணனுடைய உத்தரவாக்கும்?" என்றான் அலட்சியமாக.

இவ்வளவு நேரம் பணிந்து போன மீராவுக்கும் ஆத்திரம் வந்து விட்டது.

இவ்வளவு சொல்லியும் ஒரேயடியாக மட்டம் தட்டுவது போலவே பேசுகிறானே!

"உத்தரவு கித்தரவு என்று ஒன்றும் இல்லை. இவ்வளவு கஷ்டப்படுவானேன் என்று சொல்லி இருப்பார் போல் இருக்கிறது. உடனே அப்பா வேலையை விட்டு விட்டார்" என்றாள்.

“ஆமாம் ஆமாம், இனி ஏன் அவர் கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டும்? பெரிய இடத்துப் பழக்கம் வந்த பிறகு இந்த குமாஸ்தா வேலை எல்லாம் செய்யலாமா? மகா கேவலம் ஆயிற்றே!” என்றான் எகத்தாளமாக.

மீராவுக்கும் சினம் மிஞ்சி விட்டது. இவ்வளவு நையாண்டி செய்வதற்கு அவனுக்குத்தான் என்ன உரிமை இருக்கிறது?

“அப்படியேதான் இருக்கட்டுமே. அதை நீங்கள் என்ன கேட்பது?”

“நானாக எதையும் கேட்கவில்லையே. நீயாகத்தானே வந்து சொன்னாய். அதில் உள்ள உண்மையை எடுத்துக் காட்டினேன். இதற்கு உனக்கு உடம்பு எரிவானேன்?” என்று குரலிலும் முகத்திலும் ஏகப்பட்ட வியப்பை காட்டினான்.

பதில் கூற வாயில்லாமல் அவனை எரித்து விடுவது போல் பார்த்து விட்டு மீரா அங்கிருந்து வெளியேறினாள்.

மறுநாள் மாலை கண்ணனே காரில் காத்திருந்தான். மீரா பேசாமல் பின்புறம் ஏறிக் கொண்டாள். ஏதோ யோசனையில் மூழ்கி இருந்தாள். திடீர் என்று முகத்தில் சில்லென்று காற்றுப்படவும் நிமிர்ந்தாள். கடற்கரை.

அவள் அழைக்கு முன் கண்ணன் காரை நிறுத்தினான். “இறங்கி வா மீரா. உன்னிடம் முக்கியமான விஷயம் ஒன்று சொல்ல வேண்டும்” என்றான்.

# 14

மீரா இறங்குவதற்காகக் கண்ணன் காரின் பின்புறக் கதவைத் திறந்தான்.

மீரா மறுத்து விட்டாள், "யாராவது பார்த்தால் தப்பாக நினைப்பார்கள் காரை எடுங்கள்" என்றாள் காருக்குள் இருந்தபடி.

"ஊஹூம்" என்று உதட்டைப் பிதுக்கித் தலையை ஆட்டினான் கண்ணன்.

"சார் விளையாடாதீர்கள். இப்போது காரைக் கிளப்புகிறீர்களா அல்லது நான் இறங்கி பஸ்சில் போகட்டுமா?" என்றாள் கோபமாக.

கண்ணன் காரினுள் கையை விட்டு, அவளுடைய கைப்பையைச் 'சட்'டெனப் பிடுங்கினான். அதைக் கையில் சுற்றியபடி, "இனி பஸ்சில் எப்படிப் போவாயாம்?" என்று சிரித்தான்.

மீராவுக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

திடீர் என்று கண்ணன், "அடடே... நம்ம முகுந்தன், இங்கே வா" என்று உரக்க அழைத்தான்!

முகுந்தனா? மீராவுக்குப் 'பகீர்' என்றது. கண்ணனோடு உல்லாசமாகப் பேச்சுக்கு வந்ததாக எண்ணுவானோ?

கண்ணனுடைய அழைப்பைக் கேட்டு முகுந்தன் திரும்பி நடந்து வந்தான். காருக்குள் மீராவைப் பார்த்ததும் அவன் முகம் கறுத்தது.

"என்ன விஷயம் கண்ணன்?" என்றான் மீராவைப் பார்க்காதவன் போல.

"ரொம்ப முக்கியமான விஷயம் இருக்கிறது. நீயும் நல்ல நேரத்துக்குத்தான் வந்தாய். நீ என்னை வாழ்த்த வேண்டும், மீராவுக்கும் எனக்கும் திருமணம் நடக்கப் போகிறது" என்றான் மகிழ்வோடு.

மீரா அதிர்ச்சி அடைந்தாள். "கண்ணன்!" என்று ஆத்திரத்துடன் கத்தினாள். "யாரிடம் என்ன சொல்லுகிறீர்கள்?"

தன் உரத்த குரல் அருகில் சென்ற ஓரிருவர் கவனத்தைக் கவர்வதைக் கண்டாள். பேச்சை நிறுத்தினாள்.

கண்ணன் சொன்னான்: "உன் பெற்றோரிடம் சொல்லி இருக்க வேண்டும் என்கிறாயா? மெய்தான். ஆனால் முகுந்தன் என் நண்பன். அதிலும் என் மதிப்புக்கு உரியவன். அவனிடம் முதலில் சொல்ல முடிந்தது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா?"

"என் மனமார்ந்த வாழ்த்துக்கள்!" என்றான் முகுந்தன் இவ்வளவு நேரம் கழித்து.

"அதற்கு அவசியமே இல்லை" என்றாள் மீரா காட்டமாக. வாழ்த்துகிறானாமே... இவனுடைய வாழ்த்துக்கள் யாருக்கு வேண்டும்.

அவள் பேச்சைக் கண்ணன் கவனிக்கவே இல்லை. அவன் பாட்டில் முகுந்தனிடம் வளவளத்தான். "முகுந்த் எங்கள் பெயர் பொருத்தத்தைப் பார்த்தாயா? நான் கண்ணன், அவள் மீரா."

மீரா நிமிர்ந்து முகுந்தனைப் பார்த்தாள். மீரா - முகுந்தன் இதுவும் பொருத்தம் உள்ள பெயர்கள் தான். இது அவனுக்குத் தோன்றுகிறதா? அவன் முகத்தில் ஏதாவது வேதனையின் சாயல், சிறு சலனமேனும் தோன்றாதா! மீரா வேதனையுடன்

பார்த்தாள். எதுவும் இல்லையே தன் பளபளப்பான நகங்களை அல்லவோ வெகு ரசனையுடன் அவன் பார்த்துக் கொண்டு இருக்கிறான். பாழாய்ப் போகிற ரசனை மீராவுக்கு மனசில் அச்சமும் வேதனையும் மண்டின.

"மீரா, என்ன யோசிக்கிறாய்? நாம் தேனிலவுக்கு எங்கே போவது என்று கேட்டேன்!" கண்ணன் குரல் அவளைத் தொடர்ந்து சித்திரவதை செய்தது.

மீராவின் முகம் கோபத்தால் சிவந்தது. "நான் திருமணமே வேண்டாம் என்கிறேன். நீங்கள்... சே...சே."

கண்ணன் ரசனையுடன் சிரித்தான். "முகுந்தன், இவள் முகம் சிவப்பதைப் பார்த்தாயா? இந்தக் காலத்தில் எவளுக்கு இப்படிச் சிவக்கிறது? மகிழ்ச்சி பொங்கினால் கூட இந்த ஜொலிப்பு ஏது?"

கண்ணனுடைய ரசனையை முகுந்தன் இடையில் வெட்டினான். "சரிதான், நான் வருகிறேன் கண்ணன் இங்கே ஒரு நண்பரைப் பார்ப்பதாய்ச் சொல்லி இருந்தேன். வரட்டுமா?" என்று விடை பெற்று நடந்து விட்டான்.

"நண்பனா? நண்பியா?" என்று உரக்கக் கேட்டுச் சிரித்தான் கண்ணன்.

"இரண்டாவது பழக்கம் எனக்கு இல்லை" என்று திரும்பிப் பாராமலே சொல்லிவிட்டுப் போய் விட்டான் முகுந்தன்.

"கேட்டாயா, மீரா?" என்று திரும்பினான் கண்ணன்.

மீராவால் பேச முடியவில்லை. "சார்! நான் சற்று அமைதியாக யோசிக்க வேண்டும். என்னை வீட்டில் கொண்டு போய் விடுகிறீர்களா?" என்று சிரமப்பட்டு கம்மிய குரலில் கேட்டாள்.

"எதைப் பற்றி" என்றான் கண்ணன். உடனே முகம் மலர்ந்தான். "ஓ தேனிலவு விஷயமா? நன்றாய் யோசி!" என்று கூறிவிட்டு அவளை வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்தான்.

மறுநாள் அலுவலகத்தில் சந்தித்ததுமே கண்ணன் மீராவிடம் கேட்டான். "மீரா! தேனிலவு எங்கே என்று தீர்மானித்தாயா?"

மீரா அவனை நேராக நிமிர்ந்து பார்த்தாள். பிறகு உறுதியான குரலில் சொன்னாள். "சார்! எனக்குத் திருமணம் செய்து கொள்ள விருப்பம் இல்லை. ஏன் நான் திருமணம் செய்து கொள்ளப்போவதே இல்லை. எனவே மீண்டும் இந்தப் பேச்சை எடுக்காதீர்கள்."

கண்ணன் வாயைப் பிளந்தான். தில்லைநாதர் பேச்சை வைத்து அவன் வேறு மாதிரி நினைத்தானே. "நீ... நீ... உண்மையாகவா சொல்லுகிறாய்!"

"ஆமாம்."

"ஏன்?"

"எனக்குத் தெரியாது."

"மீரா இங்கே பார், என்னை உனக்குப் பிடித்து இருக்கிறது அல்லவா?"

மீரா அமைதியாக அவனைப் பார்த்தாள். "ஒரு முதலாளி என்ற அளவில் பிடித்திருக்கிறது. ஆனால் உங்களை மணக்க எனக்கு விருப்பம். இல்லை" என்றாள் நிதானமாக, ஆனால் அழுத்தம் திருத்தமாக.

"ஏன், காதலித்து மணம் புரிய வேண்டுமென்று இருக்கிறாயா? இப்போது அவசரம் இல்லை! நாம் காதல் செய்து அதன் பின்னேயே திருமணம் செய்வோம். வருகிறாயா ஏதாவது பூங்காவுக்குப் போய்!"

"பூங்கா, பூங்கா. பூங்காவில் மயங்கியது எல்லாம் போதாதா?" மீராவின் கண்கள் சிவந்தன. அவ்வளவு நேரம் பிடித்து வைத்து இருந்த அமைதி பறந்தது. "சார் காதல், கல்யாணம் என்ற பேச்சை என்னிடம் எடுத்தீர்களோ - அவ்வளவுதான்!" என்றாள் குரல் நடுங்க.

கண்ணன் வியப்புடன் கண்களை விரித்தான். "ஓ... உனக்கு காதல் என்றால் பயமா மீரா? இப்படிப்பட்ட பெண் இன்று கூட உலகத்தில் இருக்கிறாளா?"

அன்று மாலை மீராவை அனுப்பி விட்டு அவள் தந்தையை அழைத்துவரச் செய்தான் கண்ணன்.

அவர் திரும்பி வீட்டுக்கு வரும் போது முகம் எல்லாம் ஒளிமயமாக வந்தார்.

"நாயகி, நாயகி, விஷயம் தெரியுமா? நம் கண்ணன் சார் இருக்கிறாரே, அவருக்குக் கட்டித் தங்கம் என்று பெயர் வைத்திருக்க வேண்டும். தெரியாமல் வெறும் கண்ணன் என்று பெயர் வைத்து விட்டார்கள். இப்போது என்ன செய்யப் போகிறார் தெரியுமா?"

"சொன்னால்தானே தெரியும்" என்றாள் நாயகி வெடுக்கென்று.

"சொல்லத்தானே வருகிறேன். அடுத்த தெரு மூலையில் ஒரு ரெடிமேடு கடை இருக்கிறதே, அது விற்பனைக்கு வருகிறதாம். அதை வாங்கி என்னை நடத்தச் சொல்லப் போகிறாராம்" என்றார் மகிழ்ச்சியோடு.

"அப்படியா?" என்றாள் நாயகி வாயெல்லாம் பல் தெரிய.

"ஏன் அப்பா?" என்று கேட்டாள் மீரா.

தில்லைநாதர் சற்றுத் தடுமாறினார். பிறகு "சும்மாதான் அம்மா" என்றார்.

"யாரும் சும்மா அவ்வளவு பணத்தைப் போட்டுத்தர மாட்டார்களே அப்பா" என்றாள் மீரா.

"நான்தான் லாபத்தில் இருந்து பணத்தைத் திருப்பி விடுவேனே. வட்டி இல்லாக் கடன் போலத்தான்."

"வட்டியே கூட நிறைய ஆகுமே, அவ்வளவு பணத்தை வட்டி கூட இல்லாமல் யாராவது தூருப்பிடிக்க விடுவார்களா?"

"என்னம்மா கிண்டிக்கிண்டிக் கேட்கிறாய் ஏதோ நம்மைப் பிடித்து இழுத்து ஒரு பரிசு மாதிரி தருகிறார் என்று வைத்துக் கொள்ளேன்." என்றார் தில்லைநாதர்.

"அப்படியே வைத்துக் கொள்கிறேன் அப்பா. ஆனால் நிபந்தனையோடு கூடிய பரிசு பரிசே அல்ல. பொன்னால் செய்த விலங்கு என்பதால் மட்டும் கைதியாக இருப்பது இனித்துவிடாது. அவ்வளவுதான் சொல்வேன்" என்றாள்.

"என்னடி, பெற்ற அப்பனுக்கே உபதேசம் செய்ய வந்து விட்டாய்? சொல்லித்தான் தெரிய வேண்டுமா! அந்தத் தம்பி உன்னைக் கட்டிக்கொள்ள ஆசைப்பட்டு இருக்கும். வருங்கால மாமனார் அந்தஸ்தோடு இருந்தால் தானே நன்றாக இருக்கும் என்று நினைத்து இருப்பார். இதில் என்னமோ இருக்கிறது என்று பாரதம் படிக்கிறாயே!" என்றாள் நாயகி.

"அதைத்தான் சித்தி, நானும் சொல்லுகிறேன். நான் ஒரு நாளும் அந்தக் கண்ணனை மணக்கப் போவது இல்லை. அதில் எனக்கு சம்மதமும் இல்லை. சொல்லி விட்டேன்." என்றாள் மீரா அழுத்தம் திருத்தமாக.

# 15

மீரா, "எனக்குத் திருமணமே வேண்டாம்" என்று கூறியதும், நாயகிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அவள் ஆவேசமாகக் கத்தினாள்.

"ஆமாண்டி, உன் சம்மதத்துக்காகத்தான் இங்கே எல்லோரும் 'க்யூ' வரிசையில் நிற்கிறார்களாக்கும்? என்னையெல்லாம் கேட்டுக் கொண்டா உன் அப்பாவுக்குக் கட்டிக் கொடுத்தார்கள்! நீட்டச் சொல்லுகின்ற இடத்தில் கழுத்தை நீட்டாமல் இந்தக் காலத்துப் பெண்கள் எல்லாம் தாம் தூம் என்று தலை கொழுத்து ஆடுகின்றன..."

"சித்தி! நான் அப்படியெல்லாம்..." என்று தொடங்கிய மீராவின் குரல், நாயகியின் சொல் மழையில் அடங்கிப் போயிற்று.

"எங்கள் அப்பாவாக இருந்தால் இப்படிப் பேசுவதற்கு பல்லைத் தட்டிக் கையில் கொடுத்திருப்பார். உன் அப்பாவுக்கு கையால் ஆகவில்லை. நீ இந்த ஆட்டம் ஆடுகிறாய். ஆனால் என்னிடம் இதெல்லாம் நடக்காது" என்று அலட்சியமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு போனாள் நாயகி.

மீரா அவளைப் பார்த்து ஒரு கணம் அயர்ந்து போனாள். பிறகு தந்தையின் பக்கம் திரும்பினாள்.

"அப்பா! நான் மெய்யாகத்தான் சொல்கிறேன். நான் அந்தக் கண்ணனை மணப்பது என்பது நடக்காது!" என்றாள் உறுதியான குரலில்.

தில்லைநாதர் திண்டாடிப் போனார். நல்ல காலம் வருகிறது என்றால் இவள் கெடுத்து விடுவாளோ என அஞ்சினார். ஆனால் மனதில் நியாயம் தோன்றியது. பெற்ற மகள் ஆயிற்றே, அவள் வேறு யாரையாவது விரும்பி இருந்தால், கண்ணனை மணக்கக் கட்டாயப் படுத்த முடியாது. "ஏம்மா நீ வேறு யாரையேனும் விரும்புகிறாயா? யார் அந்த பையன்" என்று மெல்லிய குரலில் கேட்டார்.

யார்? யார் என்பது?

"இவரை வேண்டாம் என்றால், வேறு யாரையும் கட்டாயம் விரும்பித்தான் ஆக வேண்டுமா?" என்று ஆத்திரத்துடன் மொழிந்தாள். அதற்கு மேல் பேச்சுக்கு இடம் கொடுக்காமல் படிப்பு அறைக்குள் புகுந்து விட்டாள்.

மறு நாள் மீரா காரில் போக மறுத்து விட்டு, பஸ்சில் ஏறிக் கொண்டாள். பூங்காவில் இறங்கினாள். முகுந்தன் அதற்குள் போய் இருப்பான் என்று தெரிந்ததும் சற்று நேரம் காத்து நின்றாள். முகுந்தனுடைய வீட்டு ஓரமாக நடந்தாள். வீடு பூட்டிக் கிடந்தது. அத்தை இருந்தாலும் நன்றாக இருக்கும் அவர்கள் தான் மகள் வீட்டிலேயே இருந்து விட்டார்களே என்று வருந்தினாள். மீண்டும் பஸ் ஏறி வீட்டுக்கு வந்தாள்.

வீட்டுப்படி ஏறும் போதே உள்ளே முகுந்தன் குரல் கேட்டது. அவ்வளவுதான். எல்லாம் மறந்து விட்டது. துள்ளிக்கொண்டு உள்ளே சென்றாள்.

நாயகி அவளை வரவேற்றாள். "வா மீரா. ஊர் எல்லாம் கல்யாணம் கூடுகிறது. தம்பி முகுந்தனுக்கும் பெண் பார்த்து விட்டார்களாம். கூடிய சீக்கிரம் நமக்கு எல்லாம் விருந்து இருக்கிறதாம். சொல்ல வந்து இருக்கிறார்."

மீரா சிலையாக நின்றாள்.

அவள் நெஞ்சில் பூகம்பங்கள் நிகழ்ந்தன. அதை அறியாதவள் போல் நாயகி மேலே சொல்லிக் கொண்டு போனாள். "தம்பி போடும் விருந்தைச் சாப்பிட்டு விட்டு நாம் சும்மாவா இருக்கப் போகிறோம்? நாமும் பதில் விருந்து போடத்தான் போகிறோம். அதைத்தான் சொல்லிக் கொண்டு இருந்தேன்" என்றாள்.

மீராவுக்கு தொண்டையை அடைத்தது. ஆனால் இன்னொரு பெண்ணை மணக்கப் போகிறவனிடமா தன் வேதனையை காட்டுவது?

"பெண் யாராம்?" என்றாள் குரலில் அலட்சியத்தை வரவழைத்துக் கொண்டு.

"அவள் எங்கள் ஊர்ப்பக்கம். கிராமப் பெண். கபடு சூது கிடையாது. உள்ளும் புறமும் ஒரே மாதிரி இருப்பாளாம். ஆனால் இங்கே வந்து பட்டண வாடை அடித்துக் கெட்டு விட்டால், என்ன செய்வது என்று தான் தயங்குகிறேன்" என்றான் முகுந்தன்.

"ஏன்? பட்டணம் என்ன மட்டமாம்? எதில் கெட்டு விட்டதாம்?" என்று சீறினாள் மீரா. அவன் தன்னையே மட்டம் என்று கூறுவதைப் புரிந்து கொண்டாள்.

"ஒன்றா, இரண்டா சொல்வதற்கு? புட்டுப்பார்த்த அத்திப் பழம் போல அத்தனையும் ஒரே சொத்தை!" என்றான் முகுந்தன் வெறுப்புடன்.

"அடடே! அவ்வளவு அனுதாபம் இருக்கிறதா? பரவாயில்லையே! இத்தனை வகைப் பெண்களைப் பார்த்த பிறகு, நீங்கள் கிராமத்து வெகுளிப் பெண்ணை மணக்க நினைப்பது சரிதான். பட்டணத்து புத்திசாலி கண்டு பிடித்து விடுவாள் பாருங்கள் ஆனால், அவளுக்கு நீங்கள் தகுதிதானா என்பதை மட்டும் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று ஒரு குத்து குத்தினாள் மீரா.

அவனுடைய புன்னகை தேய்ந்தால் அல்லவா? 'இளிப்பதைப் பார்' என்று அவள் பொருமுவதை அறியாமல் சொன்னான். "தகுதி பொருத்தம் எல்லாம் நன்றாக இருக்கிறது மீரா. அவள் பெயர் மீனாவாம். என் பெயர் முகுந்தன். எதுகை மோனைப் பொருத்தத்தைப் பார்த்தாயா?"

"அதைவிட எதுகை மோனை இரண்டுமே பொருத்தமான இன்னொரு பெயர் கூட இருக்கிறது. அந்தப் பெயரில் யாரையாவது பாருங்களேன். ஒன்றுக்கு இரண்டு பொருத்தம் இருந்தால் நல்லது தானே" என்று இனிமையாகச் சொன்னாள் மீரா.

"என்ன பெயர்? சொல்லு. முடிந்தால் பார்க்கிறேன்" என்று முகுந்தன் சிரத்தையோடு கேட்டான்.

பல்லைக் கடித்து கொண்டு மீரா சொன்னாள். "முகாரி, முகாரி - முகுந்தன் என்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது! அவள் எப்போதும் முகாரி பாடுவாள். நீங்கள் கேட்டுக் கொண்டே இருக்கலாம்" என்றாள் ஏளனமாக.

"பாடுகிறவர் பாடினால் முகாரியும் இனிமையாகத்தான் இருக்கும்!" என்று சற்றும் அசையாமல் சொன்னான் முகுந்தன். "நல்ல கலை வல்லவர்கள் அந்த ராகத்தைப் பாடிக் கேட்க வேண்டும் - நீ கேட்டு இருக்க மாட்டாய். அரை குறையாகப் புரிந்து கொண்டு முகாரியை அழுகை இராகம் என்கிறாய்."

"நான் அரை குறையாக இருந்தால் இருந்து விட்டுப் போகிறேன். உங்களுக்கு என்ன? என்னை மணப்பவர் விதி அது..."

முகுந்தன் குறுக்கிட்டான்... "பார்த்தாயா? நல்ல வேளை நினைவுபடுத்தினாய். அன்று உன்னை வாழ்த்த மறந்து விட்டேன். இப்போது வாழ்த்தி விடுகிறேன்... ஆனாலும் நீ

பரவாயில்லை மீரா, நல்ல புளியங் கொம்பாகத்தான் பிடித்து இருக்கிறாய். குறைந்தது மூன்று தலைமுறைக்குச் சோற்றுப் பஞ்சம் இராது'' என்றான் குத்தலாக.

''அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன். அதில் உங்களுக்கு என்ன? ஒரு வேளை நாளை சாப்பாட்டுக்கு ஏதேனும் கஷ்டமா? வேண்டுமானால் கண்ணனிடம் சொல்லி ஏதேனும் தரச் சொல்கிறேன்!'' என்றாள் - முகத்தில் அறைந்தாற்போல.

முகுந்தனுடைய முகம் சிவந்தது. ''என்னைப் பிச்சைக்காரன் என்று எண்ணிக் கொண்டாயா? பரவாயில்லைதான். இப்போதே இவ்வளவு ஏறிவிட்டது. தாலி கழுத்தில் ஏறி விட்டால் தரையைக் குனிந்து பார்க்கவே மாட்டாய் போல் இருக்கிறதே!'' என்றான் ஏளனமாக.

''ஏன் பார்க்க வேண்டும்? கோபுரம் விண் மேகத்துடன் தான் விளையாடும்'' என்றாள் துடுக்காக.

முகுந்தன் கடுமையாக பேசினான்.

''ஆனாலும் கோபுரத்தின் அடிவாரம் பூமியில்தான் இருக்கும். நான் கோபுரம். மேகத்துடன் தான் விளையாடுவேன். தரையைத் தொட மாட்டேன். என்று திமிர் பிடித்தால் அவ்வளவும் தலைக் குப்புறக் கவிழ்ந்து விடும் ஜாக்கிரதை. தலைக் கனம் மிதமிஞ்சி விடாமல் பார்த்துக் கொள். இல்லாவிட்டால் கட்டிக் கொள்ளுகிறவனும் சேர்ந்து திண்டாடிப் போவான்!''

''கட்டுகிறவர் வரட்டும். அப்போது சொல்லுங்கள்'' என்றாள் மீரா விடாப்பிடியாக.

பதிலுக்குப் பதில் என்று இந்தப் பேச்சு எவ்வளவு தூரம் போய் விட்டது! மறுத்துப் பேச மீரா வாயெடுத்தாள்.

அதற்குள் வாயிலில் கார் ஒலி கேட்டது. அது கண்ணனின் கார்.

# 16

கார் ஒலி கேட்ட சில வினாடிகளில் கண்ணனும் உள்ளே வந்தான்.

மீராவைப் பார்த்ததும் அவன் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

"கார் வேண்டாம் என்றாயாமே! அந்த மடையன் டிரைவர் இப்போது தான் சொன்னான். பத்திரமாக வந்து சேர்ந்தாயா என்று பார்க்க வந்தேன்" என்றான் அக்கறையோடு.

"நான் சின்னப் பாப்பாவா, தொலைந்து போக!" என்றாள் மீரா வெடுக்கென்று.

"மீரா! முதலாளித் தம்பிக்குக் காபி கொண்டுவா" என்று நாயகி உபசரித்தாள். "அல்லது நானே காபி கலக்குகிறேன். நீ அவர் கூட உட்கார்ந்து பேசிக் கொண்டு இரு" என்று முகுந்தனை ஒரு பார்வை பார்த்தாள்.

முகுந்தன் முகம் சினத்தால் சிவந்தது. "நான் வருகிறேன் சார்" என்று தில்லைநாதரிடம் விடைபெற்றான்.

சாரா? மீராவின் மனம் ஒடிந்தது. அவன் அவளை வெறுத்து ஒதுக்கி விட்டதற்கு வேறு என்ன சான்று வேண்டும்? 'மாமா' 'சார்' ஆகிவிட்டாரே!

முகுந்தன் விடை பெறுவதைக் கண்ணன் தடுத்தான். "அதற்குள் என்ன அவசரம்? உட்கார் நீ. நான், மீரா மூவரும் பேசிக் கொண்டு இருக்கலாம்" என்றான்.

இந்த நேரத்தில் மீராவுக்குக் கண்ணனிடம் பேச அடியோடு விருப்பம் இல்லை. அவள் எழுந்தாள். "நான் சாமி கும்பிடப் போக வேண்டும்" என்றாள்.

முகுந்தனோடு சாதாரணமாகப் பேசவும் இயலாது. மனதில் புயல் அடிக்கும் போது யாரிடம் என்ன பேசுவது? சாமி கும்பிடும் சாக்கில் எழுந்து விட்டாள்.

"ஏன் மீரா, நீ என்ன சாமி கும்பிடுவாய்? கண்ணன் பக்தைதானே நீ?" என்று கண் சிமிட்டினான் கண்ணன்.

"எனக்கு முருக பக்திதான் உண்டு" என்று மீரா உள்ளே போனாள்.

'முகுந்தன் பக்தி' என்றது உள்மனம். ஆனால் துயரம் நெஞ்சை அடைத்தது. அவளுடைய பக்தியால் பயன் என்ன? பழைய முகுந்தன் எங்கே! கண்டதும் கண்ணாலேயே சிரிப்பானே! அவன் எங்கே போனான்? ஏன் இப்படி மாறி விட்டான்?

யாரோ மீனாவாமே! மீராவுக்கு நெஞ்சில் திகில் மூண்டது. இது எங்கே போய் முடியுமோ!

வீட்டிலோ கண்ணனை அவள் மணக்கப் போவது உறுதியாகிவிட்டது போலவே எல்லோரும் பேசுகிறார்கள். முகுந்தனோ யாரோ ஒரு மீனாவைக் கொண்டு வருகிறான். அதன் முடிவு என்ன ஆகும்?

ஒவ்வொரு கண்ணியாக இறுகி, வலைக்குள் மீள முடியாமல் சிக்குவது போல் இருந்தது அவளுக்கு. ஒவ்வொரு அலையாக எழுந்து அவளை ஆழ்கடலுக்குள் அமுக்குவது போல் தோன்றியது. பிடிப்புக்கு ஆதாரமாக ஒருவன் - முகுந்தனுடைய கை - கிடைத்தால் போதும். மீண்டு விடலாம். ஆனால் கை கொடுக்கும் எண்ணம் அவனுக்கு இல்லையே! அவனும்

சேர்ந்து அல்லவா அவளை மூழ்க வைக்கிறாள். முகுந்தன் எப்போது இவ்வளவு கல் நெஞ்சுக்காரன் ஆனான்?

கண்ணில் நீர்மல்க சாமி படத்தின் முன் கைகூப்பி நின்றாள்.

இப்போதெல்லாம், மீராவின் எதிர்ப்புகளைக் கண்ணன் பொருட்படுத்துவதில்லை. உரிமையயைக்காட்டும் பேச்சும், பார்வையும் கண்ணனிடம் இருந்து வந்தது

கடிதங்கள் குறித்துக் கொள்ள பென்சிலும் பேப்பருமாக அவன் எதிரே நிற்பாள். அவன் ஒன்றும் சொல்லாமல் அவளையே பார்ப்பான். "வேலையைப் பார்க்கலாமா சார்!" என்று அவள் கேட்டால், "நான் பார்க்கத்தானே உனக்கு வேலை" என்று சிரிப்பான்.

அன்றும் அப்படித்தான். அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

உள்ளக் குமுறலை அடக்க மாட்டாமல், "இதெல்லாம் எனக்குப் பிடிக்கவில்லை" என்றாள் மீரா வெளிப்படையாக.

"எது?"

"நீங்கள் பார்ப்பதும் பேசுவதும்."

"காதலுக்குக் கண்கள்தான் வாயில் என்பார்கள். நீ பார்வைக்குத் தடை போடுகிறாயே!" என்று உதட்டைப் பிதுக்கினான் கண்ணன்.

"சார், இது அலுவலகம். இங்கு அலுவல்தான் நடக்க வேண்டும்" என்றாள் மீரா.

"சரி, இங்கு வேண்டாம் பீச், சினிமா, பூங்கா எங்காவது போகலாமா? அங்கே போய்க் காதலிக்கலாம்" என்றான் கேலியாக.

"ஏன், கண்டவரும் என்னைப் பார்த்து இகழவா?" என்று வெடித்தாள் மீரா. "இந்த மாதிரி எல்லாம் பேசுவதானால் நான்

வேலையில் இருந்து விலகிக் கொள்ளுகிறேன்" என்று முடிவாகச் சொல்லி விட்டாள்.

"அடேயப்பா, உனக்கு என்ன கோபம் வருகிறது. சரி. இப்போதைக்கு வேலையைப் பார்க்கலாம்" என்று விட்டுக் கொடுத்தான் கண்ணன்.

ஆனால் அது அப்போதைக்காகத்தான். மீண்டும் பழைய குருடி கதவைத் திறடிதான்.

இன்னொரு நாள் மீரா கேட்டாள். "ஏன் சார் நீங்கள் உங்கள் தரத்தில் யாரையாவது காதலித்தால் என்ன?"

"என் தரமா? அப்படி என்றால்?"

"உங்கள் மாதிரிப் பணம், அந்தஸ்து உள்ளவர்கள்."

"ம்... அப்படி யாராவது இருந்தால் சொல்லேன்" என்றான் புன்னகையுடன்.

"அன்று விருந்தில் பார்த்தோமே! நீங்கள் கூட அறிமுகம் செய்யாமல் போனீர்களே" என்றாள் மீரா வேண்டுமென்றே.

"ஓ, அவளா? முன்பு அவளுடன் பழகிப் பார்த்தேன். பிடிக்கவில்லை" என்றான் கண்ணன் அசட்டையாக.

"நல்ல அழகி ஆயிற்றே சார்! ஏன் பிடிக்காமல் போக வேண்டும்?"

வேறு யாரிடமாவது அவன் கவனத்தைத் திருப்பி விட்டால் தன் தொல்லை தீராதா என்று அவள் நினைத்தாள்.

தன்னுடைய மறுப்புகள் அவனுடைய ஆவலைத் தூண்டி விடுகின்றன என்று மீரா ஊகித்தாள். ஆனால் அந்த நிலைமையைச் சமாளிக்கும் வகை தெரியாமல் திணறினாள்.

இப்படி எல்லாம் நடக்கக்கூடும் என்றுதான் முகுந்தன் அவளை வேலை பார்க்கவே வேண்டாம் என்றானோ? 'நான்

இதையெல்லாம் கனவில் கூட எதிர்பார்க்க வில்லையே!' என்று மீரா தவித்தாள்.

அலுவலகத்து அல்லல் இப்படி என்றால், வீடு அதை விட நரகம் ஆகி விட்டது.

முகுந்தனுடைய தரிசனம் ஒரேயடியாக இல்லை என்று போயிற்று. தில்லைநாதரும் நாயகியும் ஆளுக்கு ஒரு வழியில் கண்ணனை மணக்கும்படி மீராவை வற்புறுத்தினர்.

தில்லைநாதரிடம் கண்ணனை மணக்கத் தனக்கு விருப்பம் இல்லை என்பதை மீரா எடுத்துச் சொன்னாள்.

"ஏன் என்று சொல்லம்மா. நான் ஒத்துக் கொள்ளுகிறேன். நான் கூட முதலில் நீ முகுந்தனை விரும்புகிறதினால்தான் கண்ணனை வெறுக்கிறாயோ என்று எண்ணிவிட்டேன். உன் சித்தி சொன்ன பிறகு தான் உண்மை தெரிந்தது. நீயும் முகுந்தனும் கீரியும் பாம்பும் போல் அல்லவா சண்டை போடுகிறீர்கள்! அதுவும் நல்லதற்குத்தான். முகுந்தனைவிடக் கண்ணன் உயர்ந்த மாப்பிள்ளைதான். உட்கார்ந்து இருந்து உண்டால் கூட நாலு தலைமுறைக்குப் போதும்" என்று அவர் திருப்திப் பட்டார்.

"பணம்தான் பெரிதா அப்பா?" என்றாள் மீரா.

"குணமும் வேண்டும்தான். கண்ணனும் கெட்டவர் இல்லையே. அவரைவிட நல்லவராக ஒரு பிள்ளையை உனக்குப் பிடித்து இருந்தால் சொல். வரதட்சிணை இல்லாமல், செலவு வைக்காமல், கட்டிக் கொள்ளுவான் என்றால் அவனுக்கே உன்னைக் கட்டி வைக்கிறேன்" என்று கூறி முடித்தார் தந்தை.

'முகுந்தன் இருக்கிறார் அப்பா!' என்று சொல்லத் துடித்தாள் மீரா. முன்பானால் சொல்லியும் இருப்பாள். ஆனால் இப்போதைய முகுந்தன் அவளை மணக்கச் சம்மதிக்க

வேண்டுமே! அவளைக் கண்டாலே தீயாகக் காய்கிறவன் கட்டிக்கொள்ள எப்படிச் சம்மதிப்பான்? மீரா பதில் சொல்ல வாயிழந்து நின்றாள்.

"தான் நினைப்பதே செயல் என்று இருக்கக்கூடாது மீரா. நாலையும் பார்க்க வேண்டும். வீட்டைப் பார்க்க வேண்டும். உன் எதிர்கால வாழ்வைப் பார்க்க வேண்டும். காரணம் காரியம் பார்க்க வேண்டும். சிறுபிள்ளை மாதிரி சும்மா 'மாட்டேன் மாட்டேன்' என்றால் அது நன்றாயில்லை. யோசித்து ஒழுங்காக நடந்து கொள்" என்று சற்றுக் கண்டிப்பான குரலில் கூறி முடித்தார் தில்லைநாதர்.

'அப்பா கூடவா இப்படிப் பேசுகிறார்!' மீரா நம்ப முடியாமல் திகைத்துப் போய் நின்றாள்.

## 17

தில்லைநாதருடைய வார்த்தைகளாவது அமைதியாக இருந்தன. நாயகியோ எரிமலையாக வெடித்தாள். கடும் சொற்களால் சாடினாள்.

"பாலாறு பெருகி என்ன செய்வது? நாய் நக்கித்தானே குடிக்கும்!" என்று ஏசினாள்.

"நான் நாயாக இருந்தால் இருந்து விட்டுப் போகிறேன். எனக்கு அந்தப் பாலாறே தேவை இல்லை!" என்றாள் மீரா அமைதியாக.

"நாய்க்கு முழுத் தேங்காய் ஒட்டுமா? என்று சும்மாவா சொன்னார்கள்?" என்று ஜாடையிலேயே திட்டினாள்.

மீராவுக்குப் பொறுக்க முடியவில்லை. "எனக்குப் பிடிக்கவில்லை என்றால் விடுங்களேன். இது என்ன தொல்லையாய்ப் போச்சு" என்ற எரிந்து விழுந்தாள்.

"அதுதானடி நானும் கேட்கிறேன். அவரை ஏன் பிடிக்கவில்லை?" என்று பிடித்துக் கொண்டாள் நாயகி.

"பார்த்தவுடனே எல்லாம் பிடித்துத்தானே வேலையில் சேர்ந்தாய். நாங்கள் உன்னிடம் வேலை பார் என்று கெஞ்சினோமா? நீயாக அந்த இடம் பிடித்துத்தானே வேலைக்குப் போனாய்? கொள்ளு என்றதும் வாயைப் பிளப்பது; கடிவாளம் என்றால் மூடிக் கொள்வதா? குதிக்கிற வரையில் குதித்துவிட்டுக் கல்யாணம் என்றால் ஓடுகிறாயா? பிள்ளைகள் எல்லாம் மனித சாதியில் இருந்து இறங்கிக் கழுதை, குதிரை என்று மிருகசாதிக்குத் தாவப் பார்க்கின்றன!" என்று நாயகி வசைமாரி பொழிந்தாள்.

கடைசியாகக் கண்ணனிடமாவது உண்மையைச் சொல்லிவிடுவது என்று மீரா முடிவு செய்தாள்.

இன்னொருவனை விரும்பிய பெண்ணை மணக்கக் கண்ணன் நினைப்பானா என்ன?

ஆனால் அவனிடம் சொன்ன போது, அவன் அவளை நம்ப மறுத்தான். "இதென்ன முட்டாள் தனம்! நீ ஒருவனை விரும்பி அவன் உன்னை மறுக்கிறானா? லட்டு மாதிரி இருக்கிறாய். உன்னை மறுக்க அவனுக்குப் பைத்தியமா பிடித்து இருக்கிறது?" என்றான். பிறகு, "நீ இந்த வழியில் தப்பி ஓடப் பார்க்கிறாயாக்கும்? பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டாமா, மீரா!" என்று சிரித்தான்.

"இல்லை சார், நான் உண்மைதான் பேசுகிறேன்" என்றாள் மீரா.

"உன்னையே மறுக்கிற அந்தக் கொம்பன் யார் மீரா சொல், அவனையே கேட்கிறேன்."

மீரா ஊமையாக நின்றாள்.

"மாட்டிக் கொண்டாயா? இல்லாத காதலன் பேரை எப்படிச் சொல்வது? பொய் சொன்னால் நன்றாக யோசித்துச் சொல்ல வேண்டும். மீரா! திருமணம் என்றால் இப்படியா பயப்படுவது. அஞ்சுவதற்கு அதில் ஒன்றுமே இல்லை" என்று கண்ணன் அவளுக்குத் தைரியம் சொன்னான்.

"சார்! நீங்கள் ஒரு பக்கம் போகிறீர்கள். என்னை புரிந்து கொள்ளவே மாட்டேன் என்கிறீர்களே" என்று சலித்தாள் மீரா.

"அதற்குத்தான் நீ விடமாட்டேன் என்கிறாயே வந்து உட்கார். உன்னைப் பற்றி எல்லாம் சொல். பிறகு நம்மைப் பற்றிப்பேசி நம்மை நாமே புரிந்து கொள்வோம்! அதன் பிறகு காதல் புரிவோம்!" என்றான் சர்வசாதாரணமாக.

மீராவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. எங்கு போனாலும் கருங்கல்லில் முட்டிக் கொள்வது போல் இருக்கிறதே என்று சோர்ந்து போனாள். "நம் இருவர் மொழியே வேறு. என்னை நீங்கள் புரிந்து கொள்ள முடியாது." என்று பெருமூச்சு விட்டாள்.

"தமிழ்தானே பேசுகிறாய். பழந்தமிழ் பேசினால் கூட எனக்குப் புரியும். அதிலும் அகநானூறு பற்றிப் பேசினால்...." குறும்பாகப் பேசினான் கண்ணன்.

மீரா நம்பிக்கை இழந்து எழுந்தாள். கண்ணன் கடுமையாகச் சொன்னான். "மீரா, நீ மனதைச் சற்றுத் தளரவிடவேண்டும். காதல் திருமணம் எல்லாம் இயற்கையின் ஒரு பகுதி என்று உணரவேண்டும். வண்டு வருமே என்ற பயத்தில் மலர் மலராமல்

இருந்துவிடுமா! வண்டு வருவதும் தேனை உண்டு மகிழ்வதும் வசந்தத்தின் இயற்கை. ஆனால் இந்த வரண்ட சென்னை, வசந்தம் என்றால் என்னவென்றே உனக்கு தெரியாமல் செய்து விட்டது. அதற்கு... மீரா, எனக்கு ஒன்று தோன்றுகிறது. பிறகு சொல்கிறேன்."

கண்ணன் மீராவைப்பற்றிக் கணக்கிட்டிருந்ததே வேறு. சிற்றன்னை, அவளுக்குப் பயந்த தந்தை, தம்பி- தங்கையின் பொறுப்புகள் என்று அந்தச் சிறுவட்டத்துக்குள் வளர்ந்தவள் அவள். இளமையின் இயற்கையைக்கூடப் புரியாமல் மனம் இறுகிவிட்டிருக்கிறது என்று நினைத்தான். அவள் நெஞ்சு நெகிழவேண்டும்; உள்ளம் மலர வேண்டும். அங்கே தன் உருவம் கொலு இருக்கவேண்டும் என்று நினைத்தான்.

இதெல்லாம் நடக்கவேண்டும் என்றால் இந்தச் சூழ்நிலையில் இருந்து அவளை அப்புறப்படுத்தவேண்டும். கற்பனையை மிஞ்சிய அழகு குலுங்கும் சுற்றுப்புறத்தில் அவள் மனம் நெகிழலாம். அது எந்த இடம்? அங்கே மீராவை மட்டும் எப்படி அழைத்துப்போவது?

சும்மா மீராவிடம் போய், "மீரா வா, நாம் வெளியூர் போய் வரலாம்?" என்றால் அவள் வரமாட்டாள் ஒரு சினிமாவுக்குக் கூட அவனோடு வரவில்லையே! அவள் தந்தைகூட அனுப்புவாரோ இல்லையோ? அனுமதிக்க மாட்டார் என்றே சொல்லலாம்.

இந்த நிலையில் கடவுளாகப் பார்த்துக் கொடுத்ததுபோல் கண்ணனுக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

அவன் பங்குகள் வைத்திருந்த 'சென்னி மில்' லின் டைரக்டர்களின் ஆண்டு இறுதிக் கூட்டம் ஊட்டியில் நடைபெறுவதாக அழைப்பு வந்தது. வழக்கமாகக் கண்ணன் இந்தக் கூட்டங்களுக்குச் செல்லுவதே கிடையாது. இதெல்லாம்

அவனுக்கு போரடிக்கும். ஆனால் இந்த வருடம் தானும் தன் செயலாளர் மீராவும் வருவதாக மானேஜர் மூலம் தகவல் கொடுத்தான். ஊட்டிதான் மீரா என்ற மொட்டு மலரச் சரியான இடம் என்று எண்ணி மகிழ்ந்தான்.

இப்போதும்கூட மீரா சுலபத்தில் தன்னோடு வரச்சம்மதிப்பாள் என்று கண்ணன் எண்ணவில்லை. எனவே அவள் அலுவலகத்தில் இருந்த நேரத்தில் அவன் அவளுடைய வீட்டுக்குப்போனான். தில்லைநாதரிடம் விஷயத்தைச் சொன்னான். அவன் நினைத்தது போலவே தில்லைநாதர் தயங்கினார்.

"எங்கள் குடும்பத்தில் பெண்கள் வேலைக்குப் போனதே மீரா தான் நீங்கள் அதற்குள் வெளியூருக்கு அழைக்கிறீர்களே!" என்று தயங்கினார்.

"என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? இப்போது முதலாளிகளுடன் செயலாளர்கள் வெளிநாடுகளுக்குக் கூடப் போய் வருகிறார்கள்" என்றான் கண்ணன்.

"அப்படிப் போய் வருகிறவர்களை ஊரில் என்ன சொல்லுவார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான்" என்றார் தில்லைநாதர்.

இக்கட்டான நிலையில் நாயகி கண்ணனை ஆதரித்தாள். "அதில் என்ன தப்பு? என் காலத்தில் நான் அஞ்சு கிளாஸ் படித்ததே பெரிய படிப்பு. நீங்கள் மீனாவைக் கல்லூரிக்கு அனுப்பினீர்களே! இப்பவும் வேலைக்கு அனுப்பினீர்களே! இப்பவும் வேலை விஷயமாகத்தானே கூப்பிடுகிறார். வேலையில் சேர்ந்து சம்பளமும் வாங்கிவிட்டு, நான் இதைச் செய்யமாட்டேன். அதைச் செய்யமாட்டேன் என்றால் எப்படி? உரலுக்குள் விழுந்த உலக்கையால் அடிபட மாட்டேன் என்று சொல்ல முடியுமா! இப்போது காலையில் போய் மாலையில்

வருகிறாள். ஊருக்குப் போனால், இரண்டு நாள் கழித்துவருவாள். அவ்வளவு தானே!" என்று கண்ணனுக்கு ஆதரவாக அடித்து பேசினாள்.

அவளுக்கு மீரா கண்ணனை மணந்துவிட வேண்டும் என்று ஆசை. கண்ணனைத் திருமணம் செய்துகொண்டால் எத்தனையோ வசதிகள். அந்த ரெடிமேடு கடை கிடைக்கும், கால் மேல்கால்போட்டு எசமானியாக இருந்து உண்ணலாம் என்று எண்ணினாள்.

மீராவின் மனமும் அவளுக்குத் தெரியும். முகுந்தனை மீரா விரும்புவதை அறிவாள். ஆனால் அவனை நாயகிக்குப் பிடிக்கவில்லை. முகுந்தன் இந்த வீட்டு மாப்பிள்ளையாக வராமல் இருக்க என்ன செய்யவும் தயாராக இருந்தாள்.

"இவ்வளவு பார்க்கிறவர் முதலிலேயே எங்கள் பெண்ணை அங்கே இங்கே அனுப்ப மாட்டேன் என்று சொல்லி இருக்கவேண்டும். சம்பளத்தை வாங்கிச் சாப்பிட்டுவிட்டுச் சமயத்தில் முடியாது என்றால் அவர்தான் ஆளுக்கு எங்கே போவார்! பாவம்!" என்று கண்ணனுக்காக உருகினாள்.

குரலைச் சற்றுத் தணித்து, உங்கள் பெண்ணை வேறு யாரோடு அனுப்புகிறீர்கள்? வரப்போகிற மாப்பிள்ளையோடு தானே? அவரே அழைக்கும் போது தப்பு என்ன இருக்கப் போகிறது? சமயத்தில் பின் வாங்கினால் அவர் கோபித்துக் கொண்டு உங்கள் பெண் வேண்டாம் என்றால் என்ன செய்வீர்கள்? பணக்கார மாப்பிள்ளையும் போய், அவள் வேலையும் போய்விடும். நீங்கள் பழையபடி அந்தத் தொந்திக் கடன்காரனிடம் போய்ப் பிச்சைக்காரன் போல நிற்க வேண்டும்!" என்று கடைசியாக ஓர் அம்பை விட்டாள்.

கடைசி அம்பு காரியத்தைக் கச்சிதமாய் முடித்தது. அதோடு கண்ணனும், "நான் உல்லாசப் பயணம் போல் அவளை

அழைத்துச் செல்லவில்லை, மாமா (அந்த மாமாவில் தில்லைநாதர் சற்று மயங்கினார்) முழுக்க முழுக்க கம்பெனி வேலைதான். அதோடு தங்கும் ஓட்டல் கூட வேறு. நீங்கள் பயப்படுவது போல் ஒன்றும் நடக்காது!'' என்று உறுதி கூறினான். அதோடு, "அந்த ரெடிமேடு கடை அடுத்த வார இறுதியில் விலையாகப் போகிறதாம். ஊட்டி போய் வந்ததும் அதைக் கவனிக்கலாம் என்று இருக்கிறேன்!'' என்றான்.

தில்லைநாதர் சம்மதித்து விட்டார்.

மீராவின் மறுப்புகள் பயனற்றுப் போயின. அதோடு வேலை முறையில் அவளால் மறுக்கவும் முடியவில்லை. கடைசியாகத் தந்தை சம்மதிக்க மாட்டார் என்று சொல்லிபார்த்தாள். அவரே, 'போய்வா!' என்றபோது அவளால் மேற்கொண்டு மறுக்க முடியவில்லை.

## 18

**ஊ**ட்டி செல்லும் நாள் நெருங்க நெருங்க மீராவுக்குப் பயம் உண்டாயிற்று. முகுந்தன் என்ன நினைப்பான்? இப்போதே ஏதேதோ நினைத்து அவளை வெறுக்கிறான். கண்ணனோடு ஊர் சுற்றுவதாக எண்ணிவிட்டால்....? எண்ணி விட்டால் என்ன? அப்படியேதான் நினைப்பான் அந்தச் சந்தேகப் பிராணி.

இவ்வளவு தூரம் நம்பிக்கையற்று சந்தேகம் கொள்ளுகிற வனை மணந்துதான் என்ன சுகம் கிட்டப்போகிறது என்று மீரா ஒரு கணம் நினைத்தாள். ஆனால் காதல் கணக்குப் பார்த்தா வருகிறது? குறை நிறை கண்டா இதயம் ஒருவன் காலடியில விழுகிறது? அவன் அதைக் குத்திக் கிழித்தால்கூட வேறு

புறம் திரும்பமாட்டேன் என்கிறதே. மீராவுக்குக் கண்ணில் நீர் சுரந்தது.

மீரா என்ற பேருக்கே சாபம் இருக்கிறதோ என்று நினைத்தாள். பிறகு ஒரு முடிவுக்கு வந்தவளாக எழுந்தாள். கண்களைத் துடைத்தாள். கண்ணன் உணவு அருந்தச் சென்று இருந்த சமயம் மேசை மேல் இருந்த போனை எடுத்தாள். முகுந்தனுடைய எண்ணைச் சுழற்றினாள்.

முகுந்தனுக்கு உயர்ந்த வேலை. அவனுக்குத் தனி டெலி போன் வசதி உண்டு என்பது மீராவுக்கு முன்பே தெரியும்.

ஆனாலும் அவன் போனை எடுக்க வேண்டுமே! எடுத்தாலும் தன்னோடு பேச வேண்டுமே என்றெல்லாம் தனக்குள் பலவாறு எண்ணிக் கலங்கினாள். கைகள் நடுநடுங்க ஆறு எண்களையும் சுழற்றி முடிப்பதே பெரும்பாடாகி விட்டது.

அதன் பின் முகுந்தன் அவளை அதிக நேரம் காத்திருக்க வைக்கவில்லை. ஒரு மணி சத்தத்துக்குள் மறு முறையில் ரிசீவரை எடுக்கும் சத்தம் கேட்டது.

"அலோ. முகுந்தன் பேசுகிறேன்" என்று அவனுடைய கம்பீரமான குரல் தெளிவாகக் கேட்டது.

வெகு நாட்களுக்குப் பின் முகுந்தனுடைய குரலைக் கேட்டதும் மீரா ஒரு கணம் தடுமாறினாள்.

"நான்..... மீரா பேசுகிறேன்" என்றாள் ஒருவாறு சமாளித்துக்கொண்டு.

உடனேயே முகுந்தனுடைய குரல் மாறிவிட்டது. "என்ன விஷயம்?" என்று உணர்ச்சியற்ற குரலில் கேட்டான்.

மீராவுக்கு பேசமுடியாமல் தொண்டையை அடைத்தது. அவள் சமாளித்துக் கொண்டு பேசும்முன் முகுந்தன் பேசினான்.

“எனக்கு வேலை இருக்கிறது.”

“உங்களிடம் சற்று மனம் விட்டுப் பேச வேண்டும் முகுந்தன்.”

“மனம் விட்டுப் பேசும் அளவுக்கு எந்த விஷயமும் நம்மிடையே இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை!” என்றது முகுந்தனுடைய ஈரப்பசையற்ற குரல்.

துடுக்காகப் பேசிவிடக்கூடாது என்று மீரா முன்பே முடிவு செய்து இருந்தாள். “உங்களுக்குப் புலப்படாமல் இருக்கலாம். ஆனால் அது எனக்கு இருப்பது புரிகிறது. தயவு செய்து வருகிறீர்களா?” என்றாள் மிகப் பணிவாக.

சற்று நேரம் முகுந்தன் ஒன்றும் சொல்லவில்லை. வைத்து விட்டானோ என்று மீரா பயந்து விட்டாள்.

“முகுந்தன், அங்கேதானே இருக்கிறீர்கள்?” என்றாள் பதட்டத்துடன்.

“ஆமாம்.”

“தயவு செய்து வருகிறீர்களா? விஷயம் ரொம்பவும் முக்கியம்.”

“எங்கே?”

எங்கே வரச்சொல்லுவது? பூங்காவில் பேச விருப்ப மில்லை. இங்கேயே தொண்டையை அடைக்கிறது. பொது இடத்தில் தன்னை மீறி விட்டால்! வீட்டிற்கே வரச்சொல்லலாம். அங்கே சித்தி இருப்பாளே! கைப்பையைத் தொட்டுப் பார்த்தாள். சம்பளம் வாங்கிய பணம் இருந்தது. சித்தியிடம் கொடுத்துச் சேலைவாங்கிக் கொள் என்றால் கடைக்குக் கிளம்பி விடுவாள். மற்றவர்களைப் பற்றிக் கவலை இல்லை.

முகுந்தனுடைய குரல் அவளுடைய சிந்தனையில் குறுக்கிட்டது.

"மீரா, எனக்கு வேலை நேரம் இது. நீ இப்படி ஒரு வார்த்தைக்கு ஒரு மணி நேரம் எடுத்துக்கொண்டால்...."

"இல்லை இல்லை. இதோ சொல்லி விடுகிறேன். நீங்கள் ஓர் ஆறரை மணி அளவில் எங்கள் வீட்டுக்கு வாருங்கள். தயவு செய்து கட்டாயம் வாருங்கள்" என்றாள் மீரா.

"சரி" என்று சுருக்கமான பதிலுடன் முகுந்தன் போனை வைத்தான்.

முகுந்தனிடம் எப்படி என்ன பேசுவது என்று சிந்தித்த படியே வீட்டுக்குப்போனாள் மீரா.

வீட்டுக்குப் போனால் எல்லோரும் சினிமாவுக்குக் கிளம்பிக் கொண்டு இருந்தார்கள். கண்ணன் ஒரு குடும்ப பாஸ் அனுப்பினானாம். மீராவுக்குப் பகீர் என்றது.

"கிளம்பு கிளம்பு" என்று நாயகி அவளை அவசரப் படுத்தினாள்.

மீரா அதற்குள் சமாளித்துக்கொண்டாள். கைப்பையைத் திறந்து பணத்தை எடுத்தாள். "சித்தி, இந்தாருங்கள். இந்த மாதச் சம்பளம். உங்களுக்கு இரண்டு சேலை வாங்கிக் கொள்ளச் சொல்லலாம் என்று வந்தேன். கடைக்குப்போகிறீர்களா?" என்று கவலையோடு நாயகியின் முகத்தைப் பார்த்தாள்.

சேலை என்றதும் நாயகிக்கு சினிமா மறந்தது. "ஓ! இப்போதே கடைக்குப் போகலாமே" என்றாள்.

அப்போது மீராவின் முகம் சட்டென ஒளி பெறுவதைக் கண்டாள் நாயகி. உடனே அவள் மூளை வேலை செய்தது.

“சேலை எங்கே போகிறது? இன்று எல்லோரும் சினிமாவுக்குப் போய்விட்டு நாளைக்குச் சேலையைப் பார்க்கலாம்” என்று மீராவின் முகத்தைப் பார்த்தாள்.

மீராவின் முகம் கறுப்பதைக் கண்டாள். தன்னை வெளியே அனுப்பிவிட்டு வேறு யாரையோ சந்திக்கும் நோக்கத்துடன் மகள் இருப்பதை ஊகித்தாள்.

அதற்குச் சரியாக மீராவும், “எனக்குத் தலைவலி சித்தி நீங்கள் மட்டும் போய் வாருங்கள் நான் வீட்டில் இருக்கிறேன்” என்றாள்.

“அப்போ எல்லோரும் வீட்டில் இருப்போமா?” என்று நாயகி ஆழம் பார்த்தாள்.

“இல்லை. இல்லை சித்தி, நீங்கள் போய் வாருங்கள்” என்று மீரா பதறினாள்.

நாயகிக்கு ஊகம் நிச்சயமாகிவிட்டது. தன்னை அனுப்பி விட்டு யாரைச் சந்திக்கப் போகிறாள்? அப்படி முக்கியமாக யார் இருக்கிறார்கள்? முகுந்தனாக இருக்குமோ என்று நினைத்தாள்.

“நீ இல்லாமல் இந்த பிள்ளைகள் வருமா? ஏன்டி சசி, அக்கா இல்லாமல் வருவீர்களா?” என்று மக்களைக் கிளப்பினாள்.

“ஊகூம்” என்றன இரண்டும் ஒரே குரலாய்.

“பாரடி. ஒரு தலைவலி மாத்திரையைப் போட்டுக் கொண்டு கிளம்பு” என்றாள்.

“இல்லை சித்தி. நான் வரவில்லை” என்று முகம் கழுவ உள்ளே போனாள் மீரா.

நாயகி நேரே கணவனிடம் சென்று ஏதோ ரகசியம் பேசினாள். பிறகு, “உங்கள் பெண்ணால், இன்று எல்லோரும்

வீட்டில் கிடந்து போர் அடிக்க வேண்டியதுதான்!" என்றாள் உரக்க.

"நான்தானே வரவில்லை என்றேன். நீங்கள் போய் வாருங்களேன்" என்றாள் மீரா பதிலுக்கு.

"நீ இல்லாமல் இந்த கழுதைகள் இரண்டும் வருமா? அல்லது உன் அப்பாதான் வருவாரா? வேறு யாராவது நம் வீட்டுக்கு வந்து பொழுது போகுமா என்றால் அதற்கும் வழி இல்லை. நாம் சினிமாவுக்குப் போய் இருப்போம் என்று கண்ணன் தம்பியும் வராது. அட, இந்த முகுந்தன் தம்பியாவது வருமா என்றால் அதற்கும் வழியில்லை. இன்று வரமாட்டேன் என்று அது சொன்னதாகத்தானே கூறினீர்கள்?" என்று கணவனிடம் உரக்கக் கேட்டாள்.

மீரா திடுக்கிட்டாள். "என்னப்பா? முகுந்தன் என்ன சொன்னார்?" என்று கழுவிய முகத்தைத் துடைக்காமலே வந்து கேட்டாள்.

சீவல் வாங்கப் போனபோது முகுந்தன் தம்பியைப் பார்த்தாராம். அப்போது இன்றைக்கு இங்கே வர வசதிப்படாது என்றதாம். என்னவோ தினமும் வந்து கிழிப்பதுபோல. அந்தப் பெண் பார்த்த பிறகுதான் இங்கே வருவதில்லையே. உங்கள் வாயில் கொழுக்கட்டையா இருக்கிறது. துப்பி விட்டுத்தான் சொல்லுங்களேன் உங்கள் மகளுக்கு" என்று கணவனை அதட்டினாள்.

"ஆமாம்மா!" என்று தலையாட்டினார் தில்லைநாதர்.

# 19

தில்லைநாதர் கூறிய செய்தியைக் கேட்டதும், மீரா செயலிழந்து போனாள். தன்னிடம் வருகிறேன் என்றவர் தந்தையிடம் வரவில்லை என்று சொல்லி இருக்கிறாரே. அவ்வளவு கெஞ்சிக் கேட்டும் கூடவா அவளைப் பார்க்க வரக்கூடாது.

மது அருகில் வந்தான். "அக்கா, நீயும் வா. நீ வந்தால் புரியாததைச் சொல்லித் தருவாய். அம்மாகிட்ட கேட்டால் திட்டுவாங்க" என்று கெஞ்சினான்.

"வருகிறேன்டா வருகிறேன். இங்கே வீட்டில் இருந்துதான் என்னத்தைச் சாதிக்கப் போகிறேன்!" என்றாள் மீரா விரக்தியுடன்.

கிளம்பும்போது நாயகி பக்கத்து வீட்டுப் பெண்ணை அழைத்து ஏதோ சொல்லிவிட்டு வந்தாள்.

மறுநாள் உள்ளூர்த் தபாலில் மீராவுக்கு ஒரு கடிதம் வந்தது. அலுவலக முகவரிக்கே கடிதம் வந்தது. விஷயம் அதிகம் இல்லை.

> "கண்ணனோடு சினிமாவை மிகவும் ரசித்து இருப்பாய் என்று நினைக்கிறேன். ஏனெனில் ஆண்பிள்ளை ஒருவனை அழைத்து அவமானப் படுத்தி விட்ட ஆனந்தமும் அதில் சேர்ந்து இருக்கும் அல்லவா?
>
> – முகுந்தன்"

படித்ததும் மீராவுக்கு தூக்கிவாரிப்போட்டது. முகுந்தன் வந்திருக்கிறானே. அப்படியானால், அவன் வரவில்லை என்றதாக நாயகி சொன்னது பொய்யா? தந்தையும் சேர்ந்து ஆமோதித்தாரே!

பதட்டத்துடன் முகுந்தனுக்கு டெலிபோன் செய்தாள். சற்று நேரம் யாரும் எடுக்கவில்லை. ஏமாற்றத்துடன் வைக்கப்போன போது யாரோ எடுததார்கள்.

"அலோ வாசவன் பேசுகிறேன்" என்று குரல் கேட்டது.

"நான்... நான் முகுந்தனோடு பேசவேண்டும்" என்றாள் மீரா.

"நான் அவனுடைய நண்பன். அவன்கூடதான் வேலை செய்கிறேன். நீங்கள் யார் என்று தெரிந்துகொள்ளலாமா?"

"மீரா என்று சொல்லுங்கள்."

இதைக்கேட்டதும் மறுபுறத்தில் இருந்து பேசியவனுடைய முகத்தில் குறும்பு கூத்தாடியது. "ஓ... நீங்களா? முகுந்தன் ஊரில் இல்லையே! ஒரு வார லீவில் போய் இருக்கிறான். ஏதோ அவனுடைய திருமண ஏற்பாடு என்றான். உங்களிடம் சொல்லாமலா போனான்?"

மீரா நிராசையுடன் போனை வைத்தாள்.

அப்போது அங்கு வந்த கண்ணன், மீராவின் முகத்தை பார்த்ததும் திடுக்கிட்டான்.

"என்ன மீரா?"

"தலைவலி வீட்டுக்குப் போகவேண்டும்" என்றாள் மீரா சுருக்கமாக.

"ஏதாவது டாக்டர்..."

"இல்லை நான் போகிறேன்" என்று மீரா எழுந்து விட்டாள்.

கண்ணன் வேறு ஒன்றும் சொல்லாமல் அனுப்பி வைத்தான்.

வீட்டினில் நுழைந்து, நாயகியைப்பார்த்ததும் மீராவுக்கு அடக்கி வைத்ததெல்லாம் மடை திறந்த வெள்ளம் போல் பீறிட்டது. "சித்தி, ஏன் பொய் சொன்னீர்கள்? ஏன் சொன்னீர்கள்?" என்று அழுகையும் ஆத்திரமுமாகக் கதறினாள்.

"ஏன்டி அலறுகிறாய்? அப்படி என்ன உலக மகாப் பொய் சொல்லிவிட்டேன்? மண்டை வெடிக்கிறமாதிரி அலறுகிறாயே" என்று அலட்சியமாகக் கேட்டாள் நாயகி.

"நேற்று அவர் வரவில்லை என்றதாகச் சொன்னீர்களே" மீரா அடங்காமல் கத்தினாள்.

"அதில் என்ன தப்பு? பிள்ளைகள் எவ்வளவு ஆசையாக காத்திருந்தார்கள்! அவன் வருவான் என்று எல்லாவற்றையும் கெடுக்கப் பார்த்தாயே. அதனால்தான் அப்படிச் சொன்னேன். அப்படித்தான் அவன் என்ன பெரிய மகாராஜாவா? இன்றுபோனால் நாளை வருகிறான்" என்றாள் எகத்தாளமாக.

"அவர் வந்து காத்திருந்து போய் இருக்கிறாரே சித்தி" என்றாள் கண்ணீர் பொங்க.

"காத்தெல்லாம் இருந்திருக்கமாட்டான். சினிமாவுக்குப் போவதாகச் சொல்லச் சொல்லி விட்டுத்தான் வந்தேன். பக்கத்துவீட்டுப்பெண் சொல்லி இருப்பாள். அவன் உடனே போயிருப்பான்."

மீராவுக்கு சட்டென்று ஒன்று தோன்றியது. ' கண்ணனோடு' என்று முகுந்தன் எழுதியிருந்தானே. நாயகியை இடைமறித்தாள். "சித்தி, நாம் கண்ணனோடு போனதாகவா சொல்லச் சொன்னீர்கள்?" என்று கேட்டாள்.

நாயகி ஒரு கணம் தடுமாறினாள். பிறகு, "நான் கண்ணன் அனுப்பிய டிக்கெட் என்றேன். அவள் என்ன புரிந்து அவனிடம்

என்ன சொன்னாளோ? அவன் மண்டையிலே எப்படி ஏறிற்றோ? எனக்கு என்னடி தெரியும்? ஒரேடியாகத் தொணதொணக் கிறாயே நான் இந்த ‘நம்பிக்கைத்துரோகி’ புத்தகத்தை இப்போது முடிக்க வேண்டும். அப்பால் போய்த் தொலை” என்று படிக்கத் தொடங்கி விட்டாள்.

மீரா செயலற்றுப் போனாள். முகுந்தன் கவுரவம் பார்க்கிறவன். அவனைக் காத்திருக்க வைத்துவிட்டு மீரா சினிமாவுக்குப் போனாள் என்பதே அவனுக்குப் போதும். கண்ணனோடு போனாள் என்று வேறு சித்தி கூடச் சொல்லி இருக்கிறாள். அதை நம்பிக்கொண்டு அவனும் போய் விட்டான். இனி முகுந்தனைப் பொறுத்த வரையில் மீரா செத்தாலும் சரிதான்.

மீராவுக்கு நெஞ்சை வெடித்துக் கொண்டு அழுகை வந்தது. பேசாமல் எழுந்து தன் அறைக்குப் போனாள். கட்டிலில் குப்புற விழுந்து உடல் குலுங்கக் குலுங்க அழுது தீர்த்தாள்.

இனி அழுவதற்கு கண்ணீர் மிச்சம் இல்லை என்பது போல் மீரா ஒரேயடியாக அழுது தீர்த்தாள். நெஞ்சின் பாரம் ஓரளவு கண்ணீரில் கரைந்ததும் சிந்தித்துப் பார்த்தாள்.

சித்தியிடம் ஆத்திரப்பட்டது கூட வீண் என்று தோன்றியது.

முகுந்தனின் நண்பன் - அந்த வாசவன் சொன்னானே முகுந்தன் திருமணம் வேலையாகப் போய் இருக்கிறான் என்று அந்த மீனாவை மணப்பதற்காகத்தான் இருக்குமோ அன்று அவன் ‘மீனா’ என்ற போது பொய் என்று நினைத்தோமே!

சிந்தித்துப் பார்க்கையில் அவன் என்றுமே மீராவை விரும்பியது இல்லை என்றே தோன்றியது! அவள்தான் காமாலைக் கண்ணனைப் போல் தன் காதலால் அவனும் தன்னைக் காதலிப்பதாக எண்ணி விட்டாள். இந்தச் சித்தியால்

கெட்டது; அந்தக் கண்ணனால் கெட்டது என்றெல்லாம் சொல்லுவதில் என்ன நியாயம்? ஆற்றோட்டம் போகிற போக்கில் சருகு போவது போல் வாழ்க்கையில் என்ன நடந்தாலும் ஏற்று கொள்வது தான் சரி. வருவது வரட்டும் என்று வலையைப் பார்த்துக் கொண்டு இருப்பது தான் நல்லது என்று நினைத்தாள்.

வேலை என்று நினைத்ததும் மீராவுக்கு சிரிப்பு கூட வந்தது. சீக்கிரமே இந்த முகுந்தனின் மணமகள் ஆக வேண்டும் என்று அல்லவா அவள் வேலை பார்க்கவே தொடங்கினாள்! ஆனால் அதுவும் நல்லதுதான் இல்லை என்றால் தில்லைநாதர் வேலையை விட்டதற்கு வீட்டில் ரொம்பவும் திண்டாட்டம் ஆகி இருக்கும்.

ஊட்டி செல்லும் விஷயத்திலும் மீரா எந்தவித எதிர்ப்பும் காட்டவில்லை.

அன்று கம்பளி ஸ்வெட்டரும் மப்ளரும் வாங்கப் போனார்கள்.

அங்கே அந்தப் பெண் - அன்றொரு நாள் விருந்தில் கண்ணனை ஏக்கத்துடனும் மீராவை வெறுப்புடனும் பார்த்த பெண் - வந்திருந்தாள். இன்னும் மீராவை வெறுப்புடன் வெறித்துப் பார்த்தாள். பிறகு அருகில் வந்தாள்.

“ஊட்டி பயணத்துக்கு ஏற்பாடோ? நீளக்கை ஸ்வெட்டரை வாங்கினால் வெதுவெதுப்புக்கு அடுத்தவர் கையைத் தேட வேண்டியது இராது” என்றவள் மீராவோடு வந்தவர்களை ஒரு நோட்டம் விட்டாள். அவர்கள் புது தினுசுகளை எடுத்துப் போடச் சொல்லிக் கொண்டு இருந்தனர்.

அவள் மீராவின். அருகில் வந்து, “ஊட்டி பயணம் பிடிக்கவில்லையோ?” என்றாள் ரகசியமாக.

“பிடித்தால் என்ன, பிடிக்காவிட்டால் என்ன?” என்றாள் மீரா வெறுப்புடன்.

“ஸ்... இதோ பார், ஏதாவது இரண்டு துணியை அணிந்து பார்ப்பதாகச் சொல்லி அந்த அறைக்கு வா. நான் உன்னிடம் மிகவும் முக்கியமான விஷயம் பற்றி பேச வேண்டும். வராமல் இருந்து விடாதே. உனக்கும் அதனால் நன்மை விளையலாம்” என்று கூறிவிட்டு, அவசரமாக அந்த அறைக்குள் போய் விட்டாள்.

‘எனக்கு யாரால் நன்மை செய்ய இயலும்?’ என்று ஒரு கணம் மீரா நினைத்தாள். எதற்கும் போய்ப் பார்க்கலாமே என்று உடனே தோன்றியது. உயிர் இருக்கும் வரை நம்பிக்கை விடாது அல்லவா?

அவள் சொன்னது போலவே இரண்டை எடுத்துக் கொண்டு அறைக்குள் சென்றாள். அவள் மீராவை கண்டதும் ஆவலோடு அருகில் வந்தாள்.

# 20

மீரா என்ன செய்வதென்று தெரியாமல் விழித்துச் கொண்டு நின்றாள்.

“வராமல் போய் விடுவாயோ என்ற பயந்து போனேன். என் பெயர் அனிலா. உன் பெயர் மீரா என்று கேள்விப்பட்டேன்” என்று அவள் மீராவிடம் மீண்டும் நெருங்கி வந்தாள்.

அனிலா தொடர்ந்தாள் “ இதோ பார் மீரா, நான் சுற்றி வளைத்துப் பேசப் போவது இல்லை. உனக்கும் கண்ணனுக்கும்

திருமணம் நடக்கப் போவதாகக் கேள்விப்பட்டேன். உன் விருப்பப்படிதான் நடக்கிறதா?"

"இல்லை" என்றாள் மீரா.

"பின்னே, உன்னைக் கவர்ந்தவர் யார்? முகுந்தனா?"

"அவர் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள் மீரா.

"அவர் எங்கள் கம்பெனியில்தான் வேலை பார்க்கிறார் ஆமாம்... நீ ஏன் முகுந்தனை மணக்காமல் கண்ணனை? பணத்துக்காகவா?"

"பணமா?" மீரா வெறுப்புடன் சிரித்தாள். "இல்லை முகுந்தன்தான் வேறு பெண்ணை மணக்கப் போகிறார். நான்... நான் கல்யாணமோ கருமாதியோ எல்லாம் ஒன்றுதான் என்று இருக்கிறேன்" என்றாள் மீரா. சொல்லும் போதே குரல் நடுங்கியது.

மீராவுக்குச் சட்டென ஒன்று தோன்றியது. அவள் தயக்கத்துடன் கேட்டாள். "நீங்கள் கண்ணனை..."

"ஆமாம். அளவுக்கு மீறி நேசித்து விட்டேன். அந்த வேகத்தில் என்னையே அவரிடம் ஒப்படைத்து விட்டேன். அவருக்கு திகட்டி விட்டது போலும். ஆண் மனம் சுலபமாகத் தள்ளி விட்டார். பெண் மனம் பேதை மனமாகத் துடிக்கிறதே!" அனிலா உதட்டைக் கடித்துக் கொண்டு அமைதியானாள். விழிகள் மாரிக்கால மழை போல் கண்ணீர் சொரிந்தன.

மீராவுக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. எங்குமே பெண் மனம் பேதை மனம் தானே? ஒருவனை எண்ணி உருகும் இந்த வேதனைக்கு முடிவு ஏது? அனிலாவை இரக்கத்துடன் பார்த்தாள்.

கதவு திறக்கும் ஓசை கேட்டது. அனிலா மறுபுறம் திரும்பிக் கண்களைத் துடைத்தாள்.

"இன்னுமாடி போட்டுப் பார்த்து" என்று அதட்டியபடி உள்ளே வந்த நாயகி, இன்னொரு பெண்ணைக் கண்டதும், "முடிக்கவில்லையாடி கண்ணு" என்று குழைவாக முடித்தாள்.

"பார்த்தாயிற்று சித்தி, இரண்டுமே சரியாக இருக்கின்றன." என்று வெளியே வந்தாள் மீரா.

"அந்தப் பெண் யார்?" என்று நாயகி ஆவலோடு கேட்டாள்.

"ஆபீசு விஷயமாகத் தெரிந்த பெண்" என்று பதில் சொன்னாள் மீரா, வேறு என்ன சொல்வது?

மீரா சென்றதும் அனிலா யோசனையோடு வெளியே வந்தாள்.

அனிலா சிறு வயதிலேயே பெற்றோரை இழந்த பெண் ஓர் அண்ணன் மட்டும் உண்டு. தம் சொத்துக்களை எல்லாம் இரு பிரிவாக்கி இரு பிள்ளைகளுக்கும் உரிமையாக்கிச் சென்றிருந்தனர் பெற்றோர். இருபத்தோரு வயது ஆனதும் சொத்துக்கள் அவரவர் கைக்கு வந்தன.

பணம் இருந்தும் அனிலா பாசம் அறியாமல் வளர்ந்தவள். பணக்காரி என்பதால் மட்டும் பாசம் காட்டிய ஆயாக்கள், வேலைக்காரர்கள், உறவினர்கள் இருந்தும் அனிலா எதிலும் பற்றற்றவளாகத்தான் பழகுவாள். உடன் படித்த தோழிகள் வீடு, பெற்றோர் என்று அன்போடு பேசும் போது, அனிலா ஏங்கித் தவிப்பாள்.

அனிலா கண்ணனை ஒரு விருந்தில் கண்டாள். அழகிய பெண்களைக் கண்டால, கண்ணனுக்குக் காதல் பிறப்பது உண்டு. அனிலாவிடமும் எப்படியோ பழகினான். அது வாழ்நாள் முழுதும் நிலைக்கும் என்று அனிலா நினைத்து விட்டாள். அன்புக்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த மனம், அவனோடு

அட்டையாக ஒட்டிக் கொள்ள முயன்றது. ஆனால் கண்ணன் வேறு விதமாக எண்ணி விட்டான். ஆனால் அவள்...!

அனிலா தன் மனதை அவனிடம் இருந்து விலக்கிக் கொள்ள இயலாமல் தவித்தாள். கண்ணன் மனம் மாறாதா என்று தவம் கிடந்தாள்.

கண்ணனுடைய புதிய காதலைப் பற்றியும், அவள் கேள்வியுற்றாள். இந்தக் காதல் திருமணத்தில் முடிந்து விடுமோ என அஞ்சினாள்.

அனிலாவின் அண்ணன் சம்பத்துக்கும் 'சென்னிமில்'லில் பங்கு இருந்தது. கண்ணன் மீராவோடு ஊட்டிக்குச் செல்வதை அவன் தான் சொன்னான். பொறாமையால் அனிலாவின் நெஞ்சு கொதித்தது. அண்ணனுக்குப் பதிலாகத் தானே ஊட்டி செல்லலாமா என்று நினைத்தாள். ஆனால் அவள் போய் என்ன செய்ய முடியும்? கண்ணன் - மீரா உல்லாசத்தைப் பார்த்து வயிறு எரியலாம்; நெஞ்சு குமுறலாம். வேறு என்ன செய்ய முடியும்?

மனதோடு பொருமிக் கொண்டு இருந்தாள். தற்செயலாக மீராவைப் பார்த்ததும் ஆத்திரத்துடன் பேசத் தொடங்கினாள். மீராவின் மனம் புரிந்ததும் திகைத்தாள்; மனதில் ஒரு யோசனை தோன்றியது.

உடனே தன் அலுவலகத்துக்குப் போனாள். முகுந்தன் எப்போது வருகிறான் என்று விசாரித்தாள். மறு நாள் வருவதாகத் தெரிந்தது அவன் வந்த உடனேயே தன்னிடம் அனுப்புமாறு பணித்தாள்.

அன்று இரவே மீரா ஊட்டிக்குப் பயணமானாள். ஏர்கண்டிஷன் வசதி செய்திருந்த பெட்டி! பணத்தை என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக்கொண்டு இருந்தவர்களின் கூட்டம் அல்லவா?

மேட்டுப்பாளையத்தில் இருந்து, பலர் காரில் சென்றனர். சிலர் ரெயிலிலும் வந்தனர். மீராவும் கண்ணனும் காரில் சென்றனர்.

மீராவின் மனம் அடிக்கடி அனிலாவை நினைத்தது. அனிலா கண்ணனை விரும்புகிறாள். கண்ணன் மீராவை – மீரா முகுந்தனை – முகுந்தனோ பட்டணத்துக்காற்றே படாத பட்டிக் காட்டுப் பெண்ணை மணக்கப் போய் இருக்கிறான். கண்ணா மூச்சி ஆட்டமா? ஒளிந்து பிடிக்கும் விளையாட்டா? அது போகட்டும். பட்டணத்து நாகரீகம் மீராவின் மனதில் படிய வில்லை என்பதை, முகுந்தன் ஏன் அறியாமல் போனான்? அங்கேதான் விதி விளையாடி விட்டதா?

கார் வளைந்து மலைப்பாதையில் ஏறியது. மலைச் சாரலின் அழகு நெஞ்சைப் பறித்தது. ஆங்காங்கே, பசுமை சூழ்ந்த வீடுகள், ஓங்கி வளர்ந்த மரங்கள், பாறை இடுக்குகளில் பளபளத்த நீர்க்கசிவு! மீராவின் மனம் சுற்றுப்புற அழகில் மெல்ல மெல்ல ஈடுபடலாயிற்று. துன்பத்தைச் சற்று மறந்தது. இதழ்களில் வழக்கமான புன்னகை லேசாக அரும்பியது. அடிக்கடி அவளைப் பார்த்துக் கொண்டு இருந்த கண்ணனுடைய முகத்தில் திருப்தி தோன்றியது.

அன்று ஒன்றும் நடக்கவில்லை. எல்லோரும் வந்து சேர்வதற்கே நேரம் ஆகிவிட்டது. பிரயாண அலுப்பு, அதோடு குளிரும் பரவத் தொடங்கி விட்டது. அனைவரும் அவரவர் அறையில் முடங்கினர்.

மறு நாள் காலையிலேயே மீரா வழக்கம் போல் விழித்துக் கொண்டாள். எழுந்து கதவைத் திறந்து வெளியே பார்த்தாள். ஊட்டி இன்னும் விழிக்கவில்லை வெளியே யாரையும் காணவில்லை.

பின் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள். பனி பஞ்சுப்பொதி போல் மூடி இருந்தது. சற்று நேரத்தில் கை கால்

விரல்கள் எல்லாம் விறைத்துப் போகவே உள்ளே வந்தாள். வென்னீர்க் குழாயைத் திருகிவிட்டுப் பல் தேய்த்தாள். மீண்டும் வெளியே வந்து ஓட்டலை ஒட்டிய படியே குறுக்கும் நெடுக்குமாக வேகமாக நடந்தாள். உடம்பில் சூடு பறந்தது. சென்னையில் இப்படி நடக்க முடியும் என்று நினைத்துக் கொண்டே சுற்றிலும் பார்த்தாள் எங்கு பார்த்தாலும் பசுமை - அதன் மேல் வண்ண வண்ணப் பூக்கள், இவ்வளவு அழகாகக்கூட ஓர் இடம் இருக்க முடியுமா என்று அவளுக்குத் தோன்றியது.

சற்று கழித்து அறைக்குத் திரும்பினாள்; வென்னீரில் குளித்தாள். குளித்த பிறகு தான் உடம்புக்கே குளித்து இருக்கலாமோ என்று தோன்றியது. தலை எப்படி காயப் போகிறது? அழுந்தத் துவட்டினாள். விரலால் கூந்தலை ஆற்றியபடியே நின்றாள், தலை காய மறுத்தது. "சரி தான்" என்று தலையை விரித்துப் போட்டபடியே ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினாள்.

கதவைத் தட்டும் ஒலி கேட்டுக் கதவைத் திறந்தாள். காலை உணவும் காபியும் வந்தது. வைத்துப் போகச் சொல்லிவிட்டு மீண்டும் புத்தகத்தைத் திறந்தாள். படிக்கப் பிடிக்கவில்லை. எனவே நாற்காலியைச் சன்னல் ஓரமாக இழுத்துப் போட்டுக் கொண்டு வெளியே பார்க்கலானாள்.

இளவெயில் தோன்றுவதும் பனி மெல்லக் கரைவதும் தெரிந்தது. துன்பம் கூடப் பனிபோல் கரைந்து விடும் என்பார்களே! அப்படியும் நடக்குமா! அனுபவத்தில் பார்த்தால் இன்பம் தான் பனிபோல் மறைந்து விடுகிறது என்று நினைத்துக் கொண்டாள்.

மீண்டும் கதவைத் தட்டும் ஒலி கேட்டது. கதவைத் திறந்த போது அங்கே கண்ணன் நின்று கொண்டு இருந்தான் இரவு நேர உடைகளோடு.

கண்ணன் மீராவைக் கண்டதும் பிரமித்துப்போய் நின்றான்.

அவன் முகத்தைப் பார்த்த மீரா, "என்ன?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள்.

"இல்லை... மீரா, உன் கூந்தல் எவ்வளவு நீளமாய் அடர்த்தியாய் அலை அலையாய் அழகாய் இருக்கிறது தெரியுமா? மயில் தோகை ஒன்று தான் உவமைக்கு இருக்கிறது" என்றான் வியப்புடன்.

"ஓ அதுவா?" என்றாள் மீரா அலட்சியமாக. "காய மாட்டேன் என்கிறது. அது தான் விரித்துப் போட்டேன்" என்றாள்.

கண்ணன் அவள் முகத்தில் இருந்து கண்ணை எடுக்கவே இல்லை, "மீரா! நீ அழகி என்பது எனக்குத் தெரியும். ஆனால் இவ்வளவு பேரழகி என்று நான் கூட எண்ணவில்லை" என்றான்.

மீரா தன்னைப் பற்றிய பேச்சை விரும்பவில்லை "சார், மீட்டிங் எப்போது தொடங்கும்? நீங்கள் இன்னமும் தயாராகவில்லை போல் இருக்கிறதே."

"அப்பப்பா அதற்குள் வேலையா? நீ ஒரு செயலாளர் என்பதைச் சற்று மறந்துவிட்டு இரேன். ஊட்டியில் கூடவா இப்படி?" என்று கண்ணன் அலுத்துக் கொண்டான்.

"நான் உங்கள் செயலாளர் என்பதால்தான் இந்த ஊட்டிக்கே வந்து இருக்கிறேன் அடிப்படையையே எப்படி மறப்பது?" என்றாள். ஏதோ தோன்றியது நீங்கள் வேறு ஓட்டலில் தங்கப் போவதாய் அப்பாவிடம் சொன்னீர்களாமே!" என்று வினவினாள்.

வேறு ஓட்டல் என்றால் இரவு உடையிலேயே வந்திருக்க மாட்டான் அல்லவா?

"ம்... ஆமாம், பிறகு இதிலேயே தங்கி விடுகிறீர்களா என்றார்கள். சரி என்று விட்டேன். மீரா, நாம் ஒன்று செய்யலாமா?"

"என்ன சார்?"

கண்ணன் பெருமூச்சு விட்டான். "நீ சார் சார் என்றால் எனக்குப் பிடிக்கவில்லை மீரா" என்றான் குறையோடு.

"பின்னே அய்யா என்று அழைக்கட்டுமா? 'சார்' என்பதின் மொழி பெயர்ப்பு அய்யாதானே."

"அய்யோ... அய்யோ, இரண்டுமே வேண்டாம். சும்மா பேர் சொல்லிக் 'கண்ணா' என்று கூப்பிடக் கூடாதா? கொஞ்சமேனும் பாசத்தோடு பழகுவது போல் இருக்கும்."

மீரா பற்களால் உதட்டை அழுத்திக் கொண்டாள். ஆத்திரத்தில் ஏதாவது சொல்லிவிடுவோமோ என்றிருந்தது. ஒரு நிமிடம் சென்ற பின், "ஏதோ செய்யலாமா என்கிறீர்களோ சாரி" என்றாள் - 'சா'ரில் ஓர் அழுத்தம் கொடுத்து.

"ஊம். இப்போது கேட்கக்கூட பயமாக இருக்கிறது."

"அப்படியானால் கேளாதீர்கள்" என்றாள் மீரா பட்டென்று.

"அய்யோ அய்யோ ஒரு பேச்சுக்கு சொன்னேன். அவ்வளவுதான். மீரா, காலையில் கம்பெனி மீட்டிங் ஒரே போரடிக்கும். நாம் இப்படியே நழுவி ஊட்டியைச் சுற்றிப் பார்க்கலாமா?"

"இந்த மீட்டிங்குக்காகத்தானே உங்கள் செயலாளராக நான் இங்கு வந்திருக்கிறேன். அதை விட்டு வர நான் தயார் இல்லை" என்றாள் மீரா திட்டமாக.

கண்ணன் மேலும் வற்புறுத்த வழி இல்லாமல் சென்றான்.

கண்ணன் அதே ஓட்டலில் தங்கி இருப்பது மீராவுக்கு மனதை உறுத்தியது.

மாலை வரை மில்லின் கூட்டம் நடந்தது. மாலையில் விருந்து நடந்தது. தட்டில் கிண்ணங்களைக் கண்டதும்.

மீரா எழுந்து விட்டாள். "தலை வலிக்கிறது நான் படுத்துக் கொள்ளப் போகிறேன்" என்று தன் அறைக்குப் போய் விட்டாள்.

வெகு நேரத்திற்குப் பின் கதவைத் தட்டும் சத்தம் கேட்டு மீரா கதவைத் திறந்தாள். 'கண்ணன்தான் ஒரு கையில் பாட்டிலும், மறுகையில் மதுக் கிண்ணமுமாக நின்று கொண்டு இருந்தான். நிதானமாக உள்ளே வந்து கதவுக்கு அருகில் இருந்த மேசை மேல் அவைகளை வைத்து விட்டு நிமிர்ந்தான். அவனுடைய கண்கள் விசித்திரமாய்ப் பளபளத்தன.

## 21

மீரா ஊட்டிக்குச் சென்ற மறுநாள், முகுந்தன் ஊரில் இருந்து வந்தான். அவனுக்கு ஒரே ஆச்சரியம்! ஆபீஸ் பையன் ஒருவன் வீட்டு வாயிலிலேயே காத்திருந்தான்.

"நீங்க வந்ததுமே அம்மா கூட்டிவரச் சொன்னாங்க" என்றான் அவன்.

முகுந்தன் அவனோடு விரைந்து சென்றான்.

முகுந்தன் வந்திருப்பாதை அறிந்ததும், அனிலா ஓடோடி வந்தாள். காபி வரவழைத்து, அவனிடம் ஒரு கப்பைக் கொடுத்துவிட்டுத் தானும் ஒன்றை எடுத்துக் கொண்டாள் நேரடியாகச் பேச்சைத் தொடங்கினாள்.

"திருமண விஷயமாக வெளியூர் சென்றிருந்ததாகக் கேள்விப் பட்டேன்" என்றாள்.

"தவறு அது."

"பின்னே?"

முகுந்தன் மவுனமாய் இருந்தான். அவனுடைய சொந்த விஷயம் பற்றித் தான் கேட்பதை அவன் விரும்பவில்லை என்பதை அனிலா ஊகித்தாள்.

"முகுந்தன், நான் உங்களிடம் சில விஷயம் கேட்க வேண்டியிருக்கிறது. தயவு செய்து உண்மையைச் சொல்லுங்கள். சொல்வீர்களா?" என்று கெஞ்சுங் குரலில் கேட்டாள்.

"சரி" என்று முகுந்தன் தலையசைத்தான்.

"இரு மாதங்களுக்கு முன் துவாரகா நாத்தின் விருந்துக்கு என்னோடு வருவதாக சொன்னீர்களே. ஏன்?"

சாட்டையடி பட்டவன் போல் முகுந்தன் நிமிர்ந்தான். உதட்டைக் கடித்துக்கொண்டு பேச மறுப்பவன் போலச் சும்மா இருந்தான்.

"தயவு செய்து பதில் சொல்லுங்கள் முகுந்தன். அதில் நாலு பேருடைய வாழ்வு அடங்கி இருக்கிறது - குறைந்த பட்சம் இரண்டு பேரின் வாழ்வாவது நல்லபடியாக அமையக் கூடும் மீராவுக்காகத்தானே!"

முகுந்தன் மீண்டும் திடுக்கிட்டுப் போனான். அன்று மீரா துவாரகாநாத்தின் விருந்துக்குப் போகிறாள் என்பதை அறிந்ததும், முகுந்தன் அனிலாவிடம் சென்றான். அவள் நிச்சயமாக விருந்துக்குச் செல்வாள். கம்பெனியில் பங்குதாரி என்பதால் மட்டும் அல்ல, கண்ணன் செல்லுமிடம் எல்லாம் அனிலாவும் பின் தொடருவது எல்லோரும் அறிந்த ரகசியம். அனிலாவிடம் சென்று செயலாளரின் ஸ்தானத்தில் தன்னை அழைத்துச் செல்லுமாறு கேட்டான். அவனுக்கு அலுவலகத்தில் மிகுந்த மதிப்பு உண்டு. அந்த மதிப்பில் அனிலாவும் மறு

பேச்சின்றி அவனை அழைத்துச் சென்றாள். விருந்தின் போதே அவளுக்குச் சந்தேகம் உண்டாயிற்று. இப்போது நேரடியாகக் கேட்டுவிட்டாள்.

முகுந்தனுக்கு அது புண்ணைக் கிளறிவிட்டது போல் ஆயிற்று. சமாளித்துக் கொண்டு, "ஆமாம். குடும்ப நண்பரின் பெண். அந்த மாதிரி விருந்தில் மிரண்டு விடுவாளோ என்று வந்தேன்!" என்றான்.

"மெய்யாகவே அவ்வளவுதானா?" என்று அவன் கண்களை நேராகப் பார்த்துக் கேட்டாள் அனிலா.

முகுந்தனுடைய முகத்தில் வெறுப்பும் வேதனையும் நிழலாடின. பார்வையை வேறு பக்கம் திருப்பினான்.

"மீரா கண்ணனுடன் ஊட்டிக்குப் போயிருக்கிறாள் என்பது உங்களுக்குத் தெரியுமா?" அனிலா அடுத்த இடியை வீசினாள்.

"நடக்க முடியாத காரியம்" என்றான் முகுந்தன் சினத்துடன்.

"நடந்து விட்ட காரியம். இருவரும் ஓட்டல் நீலமுடியில் தான் தங்கி இருக்கிறார்கள்" என்றாள் அனிலா.

சொல்ல முடியாத வெறுப்பை முகுந்தனது முகம் காட்டியது. சமாளித்துக் கொண்டு எழுந்து நின்றான். "இதைச் சொல்லத்தான் என்னை அழைத்தீர்களா?" என்றான் கட்டுக்கு அடங்காத கோபத்துடன்.

"அவசரப்படாதீர்கள் முகுந்தன், சென்னிமில்ஸ் வருடாந்திரக் கூட்டத்தில் கலந்து கொள்ளக் கண்ணன் சென்றிருக்கிறார். செயலாளர் என்ற முறையில் மீராவும்."

"எல்லாம் ஒன்றுதான், யார் எக்கேடோ கெடட்டும்! என்னை விட்டால் சரி, நான் போகிறேன்" என்று திரும்பினான் முகுந்தன்.

“எல்லா ஆண்களும் ஒன்று தான். நீங்கள் மட்டும் எப்படி வேறாவீர்கள்? சற்று நிதானத்துடன் கேட்டு விட்டுப் போங்கள் முகுந்தன். மீராவுக்கு ஊட்டிக்குச் செல்ல சற்றும் விருப்பம் இல்லை” என்றாள் அனிலா.

“விருப்பம் இல்லாதவளைக் கையையும் காலையும் கட்டியா கொண்டு சென்றார்கள்?” என்றான் முகுந்தன் ஏளனமாக.

“கயிறு இல்லாமலே கையையும் காலையும் கட்ட முடியும் முகுந்தன். பெண்ணாகப் பிறந்திருந்தால் உங்களுக்கும் இது புரியும். நீங்கள் வேறு பெண்ணை மணக்கப் போவதால் தனக்கு என்ன நேர்ந்தாலும் சரி என்ற விரக்தியோடு போயிருக்கிறாள். அவளே சொன்னாள். முகுந்தன் வேறு ஒரு பெண்ணை மணக்கப் போய் இருக்கிறார். எனக்குக் கல்யாணமோ கருமாதியோ எதுவும் ஒன்று தான்.” என்றாள்.

“மெய்யாகவா?”

“ஆமாம். முகுந்தன், உங்களுக்குக் கோவைக்கு விமானத்தில் டிக்கெட் தேடினேன். கிடைக்கவில்லை. இப்போது என் காரை எடுத்துக் கொள்ளுங்கள். நேராக ஊட்டி போங்கள்... உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறதோ எனக்குத் தெரியாது. இந்தக் கவரில் ஆயிரம் ரூபாய் வைத்திருக்கிறேன். எடுத்துக் கொள்ளுங்கள் போய் உங்கள் மீராவையேனும் மீட்க முடிகிறதா பாருங்கள்.”

“அவ்வளவு ஏன்? ஏதேனும் தப்பு நடக்கக்கூடும் என அஞ்சுகிறீர்களா? மீரா உரிமை இல்லாத உறவை ஏற்கக் கூடியவள் அல்ல” என்றான் முகுந்தன்.

“உங்கள் மீராவைக் குறை கூற நான் தயாரில்லை முகுந்தன். ஆனால் கண்ணன்? சுயமாய் அவர் கெட்டவர் இல்லைதான்.

ஆனால் குடித்து விட்டால் அவரை நம்ப முடியாது குடி என்றால் விடவும் மாட்டார்" என்றாள் அனிலா.

விடை பெற்றுக் கொண்டு எழுந்த முகுந்தன் ஒரு கணம் தயங்கினான். "மீராவை காப்பாற்ற நீங்கள் இவ்வளவு தூரம் பாடுபடுவது எனக்கு வியப்பாக இருக்கிறது" என்றான் மறைக்காமல்.

அனிலா தலைகுனிந்தாள். "உங்களுக்கு புத்தி கூர்மை சற்று அதிகம் முகுந்தன். நீங்கள் நினைப்பது சரிதான். இதில் என் சுயநலமும் கலந்துதான் இருக்கிறது" என்றாள் மெல்லிய குரலில்.

முகுந்தன் அவளை வியப்புடன் நோக்கினான். குடிகாரன், சபல புத்திக்காரன், என்று தெரிந்தும் அவனுக்காக ஏங்கும் பெண் ஒருத்தி இருக்கிறாளே! மீராவும் அப்படித்தானா? மீராவின் உள்ளம் பளிங்காக இருந்திருந்தால்... முகுந்தன் எவ்வளவோ முறை அவளைக் கொடூரமாகச் சாடி இருக்கிறானே: அது எவ்வளவு பெரிய தவறு.

மேலே சிந்திக்க முகுந்தனுக்கு விருப்பம் இல்லை. "கல்யாணம் கருமாதி" என்ற வார்த்தைகள் மட்டும் நினைவில் நின்றன. மடமடவென்று வெளியேறிக் காரில் ஏறினான். வீட்டிற்குப் போய்ச் சில சாமான்களை எடுத்துக் கொண்டான். கார் ஊட்டியை நோக்கி விரைந்தது.

∴ ∴ ∴

கண்ணனுடைய நடையில் தடுமாற்றம் இல்லை. நாவில் குழறல் மட்டும் சற்று கனத்து இருந்தது. ஆயினும் அவன் குடித்திருந்ததை மீரா புரிந்து கொண்டாள். முக்கியமாக அவன் கண்கள்- எவ்விதமான பாதகத்துக்கும் அஞ்சாதவை போலப் பளபளத்தன. உள்ளத்தின் வாயில் கண்கள் என்பது எவ்வளவு உண்மை.

மீராவையே கூர்ந்து பார்த்த கண்ணன் கடகட வென்று சிரித்தான். "பயமாக இருக்கிறதா மீரா? பயப்படத் தேவையே இல்லை. நான் ரொம்ப கணக்காக இருந்தேன். ஐந்தே ஐந்து கிண்ணம்தான். இந்தக் குளிருக்கு எப்படி கதகதப்பாய் இருக்கிறது தெரியுமா! நீ கொஞ்சம் ருசி பார்க்கிறாயா? ருசி மட்டும்தான்..."

# 22

கண்ணன் கிண்ணத்தில் மதுவை ஊற்றி மீராவுக்குக் குடிக்கக் கொடுத்தான். அவனது கோரமான நிலையைக் கண்டு, மீரா திகிலடைந்தாள். அவளது மேனி நடுங்கியது. வெளியே போய் விடலாமா என்ற எண்ணத்தில் கதவைப் பார்த்தாள்.

மீராவின் உடல் நடுங்குவதைக் கண்ட கண்ணன் அவள் அருகில் வந்தான். "குளிருகிறதா மீரா? என் கோட்டை போட்டுக் கொள்கிறாயா?" என்று அரை மயக்கத்தில் கேட்டான்.

அவனால் சரியாகப் பேச முடியவில்லை. ஒவ்வொரு சொல்லாக, கவனமாக சொன்னான்.

மீரா பதறினாள். "எனக்கு ஒன்றும் வேண்டாம்" என்றபடி, அவள் கதவருகே நகர்ந்தாள். வெளியே ஓடி விட வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு!

கண்ணன் முந்திக் கொண்டான். வேகமாய் கதவருகே சென்றான். "கதவை மூட மறந்து விட்டேன் பார்! உனக்கு குளிரடிக்கிறதா மீரா?" என்று கதவை மூடினான்.

குடிகாரக் கண்ணனிடம் இருந்து தப்பியாக வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த மீராவுக்கு, அவன் கதவை அடைத்ததும், தூக்கிவாரிப் போட்டது. என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தாள். "கண்ணன் கதவை மூட வேண்டாம்" என்றாள் மீரா பதட்டத்துடன்.

"மூடியே இருக்கட்டும் மீரா. அல்லது எவனாவது குறுக்கிட்டுத் தொல்லை செய்வான்."

மீரா திகைத்தாள். கண்ணன் இதுவரை அவளைத் தொடுமளவு எல்லை மீறியது இல்லை. இன்று குடி மயக்கத்தில் அவன் எப்படி நடந்து கொள்வானோ? இந்த இக்கட்டில் இருந்து அவமானம் இல்லாமல் எப்படி மீளுவது? யோசித்துப் பார்த்தாள். ஒன்றும் புரியவிலலை. மூளை மரத்துப் போன மாதிரி செயலற்று இருந்தது. கால்கள் தரையில் வேரூன்றி விட்டவைபோல் அசையமாட்டாமல் நின்றன! அச்சம் அது மட்டும் நெஞ்சில் உறைத்தது. பயத்துடன் கண்ணனைப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

கண்ணன் நிதானமாக இன்னொரு கிண்ணம் மதுவை ஊற்றினான். பாதி பருகிவிட்டு மீதியைக் கீழே வைத்தான்.

அவனது கண்கள் மேலும் சிவந்தன, வெறி கொண்டு அவளைப் பார்த்தான்.

மீரா தூண்டிலில் அகபபட்ட மீன்போல் துடிதுடித்தாள். "கண்ணன் சார் கதவை திறங்கள்" என்றாள் குரலை உயர்த்தி.

மீராவின் குரல் அவன் காதில் விழுந்ததாகவே கண்ணன் காட்டிக் கொள்ளவில்லை. கிண்ணத்தில் வைத்திருந்த மீதி மதுவை எடுத்து மீண்டும் குடித்தான்.

கண்ணனிடம் இருந்து தப்பிப்போம் என்ற எண்ணம் மீராவுக்கு இல்லை. அவள் சிலையாக நின்றாள்.

அதைத் தனக்கு சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு அவள் அருகே கண்ணன் வந்தான் "அதிகம் குடிக்கக் கூடாது இல்லையா கண்ணு" என்று குழைந்தான். 'தப்பு தப்பு' என்று கூறித் தலையில் தானே அடித்துக் கொண்டான்.

கண்ணனின் இந்தப் போக்கு. மீராவுக்கு சிறுபிள்ளை விளையாட்டு போல் தோன்றியது. ஆயினும் அவள் ஆபத்தில் சிக்கி கொண்டிருப்பதை உணரத் தவறவில்லை. கண்ணனிடம் இருந்து எப்படித் தப்பிப்பது என்று வேகமாகச் சிந்திக்கத் தொடங்கினாள்.

கிண்ணத்தில் இருந்த மது காலியானது. கண்ணனுக்கு வெறித் தலைக்கேறியது. மீராவின் அருகே வந்தான். "மீரா! காலையில் உன்னைப் பார்த்ததும் எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? அப்படியே..."

மீராவுக்கு அப்போதுதான் சுய உணர்வு வந்தது போல் பின்னடைந்தாள்.

"கண்ணன் சார். நீங்கள் வெளியே போங்கள்" என்றாள் குரல் நடுங்க.

கண்ணன் இடிஇடி என்று சிரித்தான். "இப்போதா? உன்னை விட்டு விட்டா? பேபி. கருணை செய். பேபி என்னை போகச் சொல்லாதே?" என்று அவளை நோக்கி நடந்தான்.

"சார், நீங்கள் இப்போது குடித்து விட்டுப் போதையில் இருக்கிறீர்கள். எது தப்பு, எது சரி என்று தெரியவில்லை. என் சொல்லைக் கேட்டுப் போய் விடுங்கள் தயவு செய்து..." என்று கண்ணனிடம் மீரா கெஞ்சினாள். பயத்தால் உடல் பதறியது. முகுந்தனோடு குதர்க்கம் பேசும் துணிச்சல்காரி எங்கே போனாள்?

"பயப்படத் தேவையே இல்லை, மீராக் கண்ணு நாம் நாளை மணக்கப் போகிறவர்கள் தானே?"

எவ்வளவு தூரம் தான் ஒருவர் பின்னடைய முடியும்? முதுகில் சுவர் தட்டவும் மீரா திகைத்தாள். திரும்பிப் பார்க்குமுன் கண்ணனுடைய கை மீராவின் தோளில் விழுந்தது. அந்தக் கணமே அவளுக்குப் புதிய சக்தி பிறந்தது. முழுப் பலத்துடன் கண்ணனை நெட்டி தள்ளினாள். அவன் தள்ளாடி வாயில் கதவருகில் விழுந்தான்.

மீரா வேகமாகப் பின்புறக் கதவைத் திறந்தாள். கால் போன போக்கில் ஓடலானாள்.

எவ்வளவு நேரம் ஓடினாளோ அவளுக்கே தெரியாது. ஒரு நிமிடமோ ஒரு மணியோ ஒன்றுமே தெரியாது. குடிகாரக் கண்ணனிடம் இருந்து தொலை தூரம் சென்று விட வேண்டும் என்ற எண்ணம் உந்தித்தள்ள ஓடிக் கொண்டே இருந்தாள்.

எதிரே யாரோ வருவது போல் இருந்தது. அவனை தாண்டி ஓடி முயன்றாள். ஆனால், அவன் கையை வீசி அவளைத் தடுத்துப் பிடித்தான்.

காட்டுப் புறாப் போல, மீரா ஒரு நிமிடம் விடுபடப் போராடினாள். ஆனால், "மீரா" என்ற ஒரு சொல்லில் அடங்கினாள். முகத்தைப் பார்த்தாள் அவன்... அவன் முகுந்தன்.

"முகுந்தன்!" என்ற ஒரு பெரும் கேவலுடன் அவனுடைய கைகளுக்குள் சரண் புகுந்தாள்.

முகுந்தன் இதமாக மீராவை அணைத்துக் கொண்டான்.

மழை முகம் கண்ட பயிர் போல், மீராவின் முகம் மலர்ந்தது. அவளது உள்ளம் "முகுந்தன் முகுந்தன்..." என்று உரைத்துக்

கொண்டிருந்தது. பயத்தால் நடுங்கி கொண்டிருந்த அவளது உடல் குளுமை அடைந்தது.

மேடு, பள்ளம் என்று பாராது ஓடி வந்ததால் காலில் ஏற்பட்ட வலிக்கு, முகுந்தனின் அணைப்பு மருந்தாகப் பயன்பட்டது.

கலக்கம் கொண்டிருந்த அவளது மனம் களிப்படைந்தது.

வெகு நேரம் ஆகியும் முகுந்தன் அணைப்பை விலக்க வில்லை. மீராவும் விலக்க முயற்சி செய்யவில்லை. அந்த வலிய கரங்களின் அணைப்பில் எல்லையற்ற ஆறுதலோடு கண்களில் கண்ணீர் பெருக உருகி நின்றாள்.

சற்று நேரத்தில் யாரோ வருவது போல் தோனறியது. மீரா நகர முயன்றாள். ஆனால் முகுந்தன் விடவில்லை. கை வளையத்தை விலக்காமலே நிமிர்ந்து பார்த்தான். மீராவும் தலையை மட்டும் திரும்பிப் பார்த்தாள். கண்ணன் தான்!

கண்ணன் சற்றுத் தடுமாறிய நடையுடன் அங்கும் இங்கும் பார்த்துக் கொண்டே வந்தான். ஒருவராக நின்ற இந்த இருவரையும் கண்டதும், கூர்ந்து பார்த்தான். கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டு நன்றாகப் பார்த்தான். மீராவைச் சுற்றி இருந்த முகுந்தனுடைய கைகளையும் பார்த்தான். மீராவின் முகத்தை உற்றுப் பார்த்தான். பிறகு ஒரு யோசனையோடு தலையை ஆட்டினான். பேசாமல் திரும்பிப் போனான். யாரும் ஏதும் பேச வில்லை.

கண்ணன் பார்வையில் இருந்து மறைந்ததும் மீரா திரும்பினாள்.

முகுந்தன் பரிவோடு அவள் முகத்தில் இருந்த கேசச் சுருள்களை விலக்கி விட்டான்.

"வா போகலாம்" என்றான்.

"எங்கே?"

"காருக்குள்!" என்றான்.

"சற்று தூரத்தில் கார் ரிப்பேராகி நின்று விட்டது டிரைவர் மெக்கானிக்கைப் பார்க்கப் போய் இருக்கிறான். அவன் வரும் வரை காரில் உட்கார்ந்து பேசிக் கொண்டு இருக்கலாம். உனக்கு என்னிடம் எத்தனையோ கேட்க வேண்டும் அல்லவா? நான் உன்னிடம் சில விஷயம் பற்றிப் பேச வேண்டும்" என்று அவளை விடுவித்தான்.

## 23

அவ்வளவு நேரம் சொர்க்கத்தில் இருப்பது போல் நின்ற மீராவுக்கு, இப்போது குளிர் உறைத்தது. லேசாகச் சிலிர்த்தாள். முகுந்தன் தன் கோட்டைக்கழற்றி அவளுக்கு மாட்டி விட்டான்.

"உங்களுக்குக் குளிர்" என்று மீரா தொடங்கினாள்.

"குளிராது. நான் ஸ்வெட்டரும் போட்டு இருக்கிறேன்" என்று முகுந்தன் முடித்தான்.

இருவரும் சிரித்துக் கொண்டனர். இருவருக்குமே எத்தனையோ சந்தேகம். ஆனாலும் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்புவதை உணர்ந்து கொண்டனர். அதுவே எல்லாவற்றுக்கும் மேலாய் மனதில் நிறைவு அளித்து அமைதியைத் தந்தது.

காரில் அமர்ந்ததும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இதழ்களில் புன்னகை அரும்பியது. மீரா ஏதோ கேட்க வாயெடுத்தாள். முகுந்தன் அவளைக் கையமர்த்தினான்.

"பொறு மீரா, நம்மிடையே நிறைய விஷயங்கள் தெளிவு படுத்தப்பட வேண்டி இருக்கின்றன. ஒவ்வொன்றாகப் பார்க்கலாம். முதலில் என்னுடைய சில கேள்விகளுக்குப் பதில் சொல்லுகிறாயா?" என்று கேட்டான்.

"நீங்கள் முதலில் என் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்களேன்" என்றாள் மீரா.

முகுந்தன் சிரித்தான். மூக்கைப் பிடித்துச் செல்லமாக ஆட்டினான். "ஊம், சொல்லு, நீ கண்ணனை மணக்க ஒரு நாளுமே விரும்பவில்லையா?"

மீராவுக்கு அவனிடம் பிடிவாதம் செய்ய மனம் வரவில்லை. ஒழுங்காகப் பதில் சொன்னாள். "இல்லை முகுந்தன், ஒரு நாளுமே இல்லை" என்றாள் அழுத்தம் திருத்தமாக.

"பின், நீ என்னைத்தானே விரும்புகிறாய்?"

"பரவாயில்லை, இவ்வளவு சீக்கிரமாக இதைக்கண்டு பிடித்து விட்டீர்களே" என்றாள் மீரா கிண்டலாக.

முகுந்தன் சிரித்தான். பழைய சிரிப்பு மீராவின் முகமும் மலர்ந்தது. அவளைப் பார்த்தபடியே, "பின் ஏன் அவனுடன் அவ்வளவு நெருங்கிப் பழகினாயாம்!" என்று கேட்டான் முகுந்தன்.

"எவ்வளவு பழகினோம்? ஒரு அந்தரங்கச் செயலாளர் என்ற அளவுக்கு மேல், நான் எப்போது அவரோடு பழகக் கண்டீர்கள்?" என்று மீரா எதிர்க்கேள்வி போட்டாள்.

"தினமும் அவன் காரிலேயே வீட்டுக்கு வந்தாயே! செயலாளர்கள் எல்லாம் அப்படித்தான் செய்கிறார்களோ?"

"அது சித்தி செய்த வேலை. இருவரும் ஒன்றாய்ச் சேர்ந்து. கொள்ளவும் என்னால் ஒன்றும் செய்ய முடியாமல் போயிற்று. உங்களுக்குத்தான் சித்தியைத் தெரியுமே."

"அது சரி, பீச்சுக்கு அவனோடு ஏன் போனாய்?"

"நானாகச் செல்லவில்லையே! காரில் உங்களைப் பற்றியே நினைத்துக்கொண்டு இருந்ததில் கார் கடற்கரைககுச் செல்வதையே நான் கவனிக்கவில்லை. நான் இறங்க மறுத்துக் கொண்டு இருந்த போது தான், அங்கு வந்த நீங்கள் என்னைத் தப்பாக எண்ணி விட்டீர்கள்" என்றாள் மீரா.

"சரியான முட்டாள் தனம். சரி, அது போகட்டும் துவாரகாநாத்தின் விருந்துக்குச் செயலாளர் என்ற முறையில் மறுப்புக் கூற முடியாமல் வந்து இருப்பாய். அது கூடப் தப்பில்லை. ஆனால் கண்ணன் கொடுத்த சேலைப் பரிசை ஏற்று உடுத்திக் கொண்டு வந்தாயே. அதைத்தான் என்னால் தாங்கவே முடியவில்லை!" சொல்லும் போது முகுந்தனுடைய முகம் கறுத்தது.

"சேலை பரிசா?" என்று மீரா விழித்தாள்.

"ஆமாம், விருந்து அன்று கட்டியிருந்தாயே ஒரே பளபளப்பாக. அந்தச் சேலைதான்" என்றான் முகுந்தன் வறட்சியாக.

"அது அப்பா வாங்கித் தந்த சேலை ஆயிற்றே! ஏதோ திடீர் என்று லாபம் வந்ததால், முதலாளி போனஸ் தந்தார். அதில் வாங்கி வந்தேன் என்றார்" என்று திகைப்புடன் சொன்னாள் மீரா.

"கண்ணனின் பரிசு என்று உன் சித்தி என்னிடம் சொன்னாளே" என்றான் முகுந்தன்.

“இதுவும் சித்தி செய்த வேலைதானா? கண்ணன் வாங்கியது என்றால் அதை நான் கட்ட மாட்டேன் என்று அவளுக்குத் தெரியும். அதனால் என்னிடம் அப்பா வாங்கியது என்றிருக்கிறாள். நான் கூட இவ்வளவு விலை உயர்ந்த பொருளை எனக்கு மட்டும் அப்பா வாங்கி இருக்கிறாரே என்று ஆச்சரியப்பட்டேன்.... ஆமாம், நீங்கள் அன்று விருந்துக்கு எப்படி வந்தீர்கள்? இன்றாவது நிஜத்தைச் சொல்லுங்களேன்” என்று உரிமையோடு கேட்டாள் மீரா.

“மீரா, துவாரகாநாத் அளிக்கும் விருந்து, அவர் கூட்டும் பங்குதாரர் கூட்டம் எது ஆனாலும் மது இருக்கும். ஆங்கில இசையும் ஆட்டமும் தவறாமல் இருக்கும். எதிலும் அளவே இராது. அதோடு தரமும் இராது. அளவு மீறுவது வெகு சாதாரணம். கொஞ்சம் பயந்தவர்கள் அதாவது நல்லவர்கள் எல்லாம் முதல் கட்டமான பேச்சு வார்த்தைகள் முடிந்ததும் கிளம்பி விடுவார்கள். ஆனால் நீ பார்ட்டி முடிந்த பிறகுதான் வரப்போவதாக உன் சித்தி சொன்னாள். கண்ணன் மதுவைக் கண்டால் எப்படி மாறுவான் என்று எனக்கு தெரியும். பிறகு உனக்குப் பாதுகாப்பு யார்? அதனால்தான் என் கம்பெனி டைரக்டரான அனிலாவிடம் சென்றேன். செயலாளரின் நிலையில் என்னை அழைத்துச் செல்லுமாறு கேட்டேன். நல்ல வேளையாக அவரும் குடைந்து குடைந்து கேளாமல் அழைத்து வந்தார். அதுவும் நல்லதாயிற்று” என்றான் முகுந்தன்.

மீராவுக்கு அந்தச் சம்பவம் நினைவு வந்தது. அந்தக் கம்பளிப்பூச்சி மீசைக்காரனுடைய முகம் இப்போதும் அச்சத்தை ஊட்டியது. முகுந்தனிடம் திரும்பினாள். “முகுந்தன்! அன்று அந்த ஆள்...அதுதான் ஒரு மாதிரி என்னிடம் நடந்து கொண்டானோ. அவன் ஏன் என்னிடம் மட்டும் அப்படி நடந்து கொண்டான்? என்னைப் பார்த்தால் அவ்வளவு மட்டமாகவா தெரிந்தது?”

“மட்டமா? சொர்க்கலோக தேவதை போல் அல்லவா நீ இருந்தாய்! ஆனால் அவனைப்பற்றி ஒன்றும் இல்லை. அவன் தனியாக எவள் கிடைப்பாள் என்று எப்போதுமே அலைகிறவன்” என்றான் முகுந்தன் அலட்சியமாக.

“ஆனால் நான் தனியாகச் செல்லவில்லையே கண்ணனோடு அல்லவா...”

“கண்ணன் அன்று ஒருத்திக்குத் துணை என்கிற நிலையிலா இருந்தான்?” என்றான் முகுந்தன்.

“இல்லைதான்” என்று மீராவும் ஒப்புக் கொண்டாள். “அன்று இரவு உங்களிடம் என் மனதைத் திறந்து காட்டலாம் என்று நினைத்தேன். ஆனால் நீங்களோ...” துயரத்தினால் மீராவின் குரல் கம்மியது.

முகுந்தன் அவளுடைய ஒரு கையைத் தன் கையில் எடுத்துத் தட்டிக் கொடுத்தான். அவள் தன் கையோடு அவன் கையைத் தன் கன்னத்தில பதித்துக் கொண்டாள். அதன் பின் முகுந்தன் அவளைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டான்.

“அந்த நிலவில் நீ தேவதை போல நிற்கவும் நான் தடுமாறிப் போனேன் மீரா. அதற்குள் அந்தச் சேலை... அது என் ஆசையை விஷமாக்கி விட்டது” என்றான் முகுந்தன்.

“ஆனால் அந்த அனிலாவுக்குக் கூடப் புரிந்து இருக்கிறது!” என்றாள் மீரா.

“அவள் தான் என்னை இங்கே அனுப்பியது! நீ வேறு அவளிடம் கல்யாணம், கருமாதி என்றாய் போல் இருக்கிறது. அவள் என்னிடம் அதை அப்படியே சொல்லவும் கலங்கிப் போனேன், ‘கருமாதி’ பற்றிப் பேசுகிற வயதா உனக்கு?

அப்படி யெல்லாம் பேசலாமா?'' என்றான் முகுந்தன் வருத்தத்துடன்.

“அப்படித்தான் பேசுவேன். அப்படிப் பேசியதால் தானே இப்படி ஓடி வந்து இருக்கிறீர்கள்!'' என்று விளையாட்டாய்ச் சொன்னாள் மீரா.

முகுந்தன் சிரித்தான் இணைந்து சிரித்த மீராவின் முகம் சட்டென வாடியது. முகுந்தனுடைய அணைப்பில் இருந்து விலகினாள். “முகுந்தன் அந்த மீனாவின் கதை என்ன? நீங்கள் அவளை மணக்க ஊருக்குப் போயிருப்பதாக உங்கள் நண்பர் சொன்னாரே!'' என்றாள் கலவரத்துடன்.

## 24

மீராவின் மனக் கலக்கத்தை அறிந்ததும் முகுந்தன் அவளை அள்ளி அணைத்துக் கொண்டான். “அவன் அப்படியா? சொன்னான்!'' என்றான் சிரிப்பை அடக்கிக் கொண்டு.

“சரி, உங்கள் வீட்டுக்கு வரச் சொல்லி கடைசியாக டெலிபோன் செய்தேனே! ஏன் வரவில்லை?''

முகுந்தனின் முகம் கறுத்தது. “என்னை வரச்சொல்லி விட்டு, கண்ணனோடு சினிமாவுக்குப் போனாயே!'' என்றான் ஆத்திரத்துடன்.

“இல்லை முகுந்தன் இல்லை! நான் கண்ணனோடு போகவே இல்லை!'' என்று தொடங்கி அன்று நடந்ததை

யெல்லாம் எடுத்துச் சொன்னாள். சித்தி செய்த சூழ்ச்சிகளையும், அவனிடம் இருந்து வந்த கடிதத்தைப் பார்த்து அவள் பட்டபாட்டையும் விவரமாகக் கூறினாள். "முகுந்தன் நீங்கள் ஏன் ஊருக்குப் போனீர்கள்?" என்று மீரா கலக்கத்தோடு கேட்டாள்.

"நான் ஊருக்குப் போன காரியமே வேறு" என்றான் முகுந்தன்.

"என்ன விஷயம்? என்னிடம் சொல்லாமா?"

"உன்னிடம் சொல்லக் கூடாதது என்று இனி என் வாழ்வில் என்ன இருக்கப் போகிறது? நம் திருமணச் செலவுக்கு உன் அப்பாவிடம் பணம் இல்லை அல்லவா. அதனால் ஊரில் எங்கள் நிலத்தில் கொஞ்சத்தை விற்க அம்மா ஏற்பாடு செய்து கொண்டு இருந்தார்கள். அதுவரை கொஞ்சம் நப்பாசையில் நான் இருந்திருந்தால் அந்த ஏற்பாடு நடக்கட்டும் என்று இருந்தேன். நீ போன் செய்த அன்று எனக்கு ஒரேயடியாக நம்பிக்கை விட்டு விட்டது. அன்று பார்த்து விற்பனைப் பத்திரத்தில் கையெழுத்துப் போட வா என்று அம்மா எழுதி இருந்தார்கள். இப்போது தான் விற்பனைக்கு அவசியம் இல்லையே, அதை முடிந்த அளவுக்கு தடுத்து பார்க்கலாம் என்று ஊருக்குப் போனேன்."

"தடுத்து விட்டீர்களா?" என்று அவசரமாகக் கேட்டாள் மீரா. முகுந்தன் சிரித்தான்.

"இல்லை. முன் பணம் கொடுத்த ஆள் நிலத்தைத் தந்துதான் ஆக வேண்டும் என்று போராடினான். கடைசியில் கையெழுத்துப் போட்டு விட்டு வந்தேன்!" என்றான்.

மீரா சிரித்தாள். பிறகு சிறிது வருத்தத்துடன் "உங்களுக்குத் தெரியுமா?, முகுந்தன்? நான் வேலை பார்க்கப் போனதே நம் திருமணச் செலவுக்குப் பணம் சேர்ப்பதற்காகத்தான்!" என்றாள்.

"உன் மனதில் ஏதோ திட்டம் இருப்பது எனக்குத் தெரிந்தது. ஆனால் இப்படி நடக்கும் என்று நான் நினைக்கவில்லை. உனக்கும் வேலைக்கும் சரிபடாது!"

"ஏன் சரிப்படாது? எனக்குக் கூட அப்படித் தோன்றியது. ஏன் சரிப்படவில்லை முகுந்தன்?" என்று குறுக்கிட்டு கேட்டாள் மீரா.

"பிறப்பு, வளர்ப்பு, சுற்று வட்டாரம். பழக்க வழக்கங்கள் என்றெல்லாம் உண்டு மீரா. யாருக்கு எந்த அளவு இடம் கொடுப்பது, கொடுக்கக்கூடாது என்றெல்லாம் தெரிய வேண்டும். உனக்கு 'இம்' என்று எகிறிக் குதிக்கத் தெரியும்! வீட்டு அரசியாக ஒளிவிடலாம். ஆனால் வெளியே நெளிவு களிவு அறிந்து பழக உன்னால். ஆகாது!" என்றான் முகுந்தன்.

"உம் அதைச் சொல்ல வந்த போதுதான்..."

"உன் சித்தி சொன்னாள். எவனாவது கிடைத்தால் பிடித்துக் கொள்ளும் படி. நீயும் ஆமோதித்தாய்."

"நீங்கள் அதை கேட்டீர்களா?"

"ஆமாம், இரண்டு காதாலும் நன்றாகக் கேட்டேன். எனக்கு நெருப்பையே வாரி முகத்தில் கொட்டி விட்ட மாதிரி இருந்தது. நீயா இப்படிச் சொன்னாய் என்று தவித்தேன்."

"நான் சித்திக்காகச் சொன்னேன். எதிர்ப்பதைவிட ஆமோதித்தால் வேலை பார்க்கத் தடை சொல்ல மாட்டாள் என்று நினைத்தேன். ஆனால் நீங்கள் உடனே ஆனந்தமாய் என்னைப்பற்றி தப்பாக எண்ணி விட்டீர்களாக்கும்?"

"ஆனந்தமாக இல்லை மீரா அளவற்ற வேதனையோடு. அதுவும் கூட அப்போது முடிவாக ஒன்றும் எண்ணவில்லை. அடுத்தடுத்து ஒவ்வொன்றாக நடக்கவும்..."

"வாழ்க்கையின் அடிப்படையே நம்பிக்கை. அந்த நம்பிக்கை என்னிடம் உங்களுக்கு சிறிதும் இல்லாமல் போயிற்றே!" என்று சிறிது கோபத்தடன் கேட்டாள் மீரா.

"மீரா, உன் அன்பு என் மீது தான் என்று தெரிந்த பிறகு உன்னிடம் நான் சந்தேகப்பட்டது தப்புதான். ஆனால் அந்த அன்பின் வழி தெரியாத நிலையில் நான் எதை நம்பட்டும்!" என்றான் முகுந்தன்.

"சரி, நீங்கள் உங்கள் மனதையாவது என்னிடம் சொல்லி இருக்கலாம் அல்லவா? அதை ஏன் சொல்ல வில்லை."

"ஒரு காரணம் - அம்மா. உன் வீட்டு நிலைமை சரியில்லை இப்போதே காதல் அது இது என்று உன் மனதை கலைத்து விடக் கூடாது என்று கூறிவிட்டார்கள் இன்னொன்று - நீயே யோசித்துப்பார். கண்ணனோடு என்னை ஒப்பிட்டுப்பார் ஒரு பெண்ணுக்கு வரக்கூடிய மாப்பிள்ளை என்ற வகையில் நான் அவனுக்கு ஈடாவேனா?"

"ஏன், உங்களுக்கு என்ன குறையாம்?"

"அவனிடம் உள்ள பணம்!"

"அத்தனையும் வாரிக் குப்பையில் தான் போட வேண்டும் அவர் குடிக்கிற குடி! சே!" என்றாள் வெறுப்புடன்.

இருவரும் சற்று நேரம் அமைதியாக இருந்தனர்!

"இனி சந்தேகம் ஒன்றும் இல்லையே மீரா?" என்று முகுந்தன் கேட்டான்.

"எனக்கு ஒரு நாளும் சந்தேகம் இருக்கவில்லை. நீங்கள் மீனா என்பவளைத் திருமணம் செய்வதாகச் சொன்ன போது கூட நான் பொய் என்று தான் நினைத்தேன். உங்கள் நண்பர் சொன்னதும் தான் மெய் தானோ என்று அஞ்சி விட்டேன். அது

முழுப் பொய் தானோ?" என்று அண்ணாந்து அவன் முகத்தைப் பார்த்தாள்.

"பொய் தான்!" என்று அவமானத்துடன் முகுந்தன் காட்ட வேண்டும் போல் இந்தது. ஆனால்...

"ஏன் மீரா?" என்றான் முகுந்தன் அன்புடன்.

"முகுந்தன், நம் வரையில் பிரச்சினை தீர்ந்தது. ஆனால் அப்பா, சித்தி... இவர்கள் சம்மதித்து நம் திருமணம் நடக்குமா?" என்றாள் கலக்கத்துடன்.

"நன்றாக நடக்கும்!" என்றான் முகுந்தன் நம்பிக்கையோடு. "அம்மா வந்து இரண்டு போடு போட்டால் உன் அப்பாவும் சித்தியும் அரண்டு போவார்கள். திருமணச் செலவு கூட அவர்கள் கைப்பொறுப்பு இல்லை. பிறகு என்ன தடை?"

"செலவு வைக்காத மாப்பிள்ளை இருந்தால் அழைத்து வா. என்று அப்பா கூட ஒரு தடவை சொல்லி இருக்கிறார். ஆனால் அப்பா வேலையை விட்டு விட்டாரே! ஏதோ கண்ணன் தரும் ரெடிமேடு கடையை நடத்தப் போவதாகச் சொன்னார். இப்போது இரண்டும் போயிற்றே."

"அரசனை நம்பிப் புருஷனைக் கை விட்டால் இந்தக் கதிதான். நீ வருத்தப்படாதே. அவர் முன்பு பார்த்த அளவுக்கு ஒரு வேலையை அவருக்கு என்னால் தேடிக் கொடுக்க முடியும் உழைத்து சாப்பிடட்டும். மது, சசி இரண்டு பேரையும் வேண்டுமானால் நாமே அழைத்துக் கொள்ளலாம். அம்மா ஆனந்தமாய்ப் பார்த்துக் கொள்ளு வார்கள். அவர்கள் பாட்டை மட்டும் அவர்களே பார்த்துக் கொள்ளட்டும்."

தந்தையிடம் முகுந்தன் கடுமை காட்டுகிறானே என்று மீராவுக்குத் தோன்றியது. ஆயினும், அவன் சொல்வது மெய்தானே என்று நினைத்தாள்.

இவர்கள் பேசி முடிக்கக் காத்து இருந்தது போல டிரைவர் மெக்கானிக்குடன் வந்து சேர்ந்தான், கார் சரி ஆயிற்று.

மீராவை அறையில் விட்டு விட்டு எச்சரிக்கையாக இருக்கும்படி சொல்லிவிட்டு முகுந்தன் சென்றான்.

மறு நாள் காலையில் வந்தான். கண்ணனிடம் கொடுக்குமாறு ஒரு கடிதத்தை ஓட்டல் நிர்வாகியிடம் கொடுத்தான். மீராவை அழைத்துக் கொண்டு சென்னைக்குத் திரும்பி விட்டான்.

வந்ததும் மீரா ராஜினாமா கடிதத்தை அனுப்பினாள்.

முகுந்தனுடைய அன்னையும் வந்து சேர்ந்தார்.

அதற்கு மேல் முகுந்தன் சொன்னது போல் தான் நடந்தது. முதலில் முகுந்தனுடைய அன்னையிடம் தலையை ஆட்டிவிட்டு, நாயகியின் சொல்லைக்கேட்டு கண்ணனைப் பார்க்கச் சென்றார் தில்லைநாதர். கண்ணன் வெளியூர் சென்றிருப்பதாகவும் வர நாளாகும் என்றும் தகவல் தெரிந்தது. அதற்கு மேல் அவர் அடங்கி விட்டார்.

நாயகி முணுமுணுத்தாலும், ஊர் என்ன சொல்லும் என்ற பயத்தில், செய்ய வேண்டியதை ஒழுங்காகவே செய்தாள்.

பிள்ளைகளுக்கு முகுந்தண்ணா ‘அத்தான்’ ஆகப் போவதில் மிகவும் மகிழ்ச்சி.

ஒரு சுபயோக சுபதினத்தில் முகுந்தன் மீராவின் சங்குக் கழுத்தில் மங்கல நாண் பூட்டினான்.

மாலையில் நடந்த வரவேற்புக்குக் கண்ணன் வந்தான். மீராவுக்குக் கொஞ்சம் ஆச்சரியமாக இருந்தது. ஆனால், முகுந்தன் முகமலர்ச்சியுடன் அவனை வர வேற்றான்.

மற்றவர்கள் விலகி இருந்த போது கண்ணன் மண மக்களின் அருகில் வந்து பேசலானான். "நான் இப்படி நிலைமை மாறும் என்று நினைக்கவேயில்லை முகுந்தன். நீங்கள் இருவரும் சண்டை போட்டுக் கொண்டே இருந்ததால், சந்தேகம் கூட எழவில்லை, நீ என்னிடம் சொல்லியிருக்கக் கூடாதா?" என்று கேட்டான்.

"எனக்கு இவளிடம் உறுதியான நம்பிக்கை இல்லாமல் போயிற்று. அதோடு நீயும் விரும்புவதை அடைநதே தீருவேன் என்பாயே!" என்றான் முகுந்தன்.

"அதற்காக? இன்னொருவன் விரும்பிய பெண்ணைக் கட்டாயமாக மணம் புரிவேன் என்றா நினைத்தாய்? அதிலும், என் மதிப்புக்கு உரிய நண்பனான உன்னை விரும்புகிற வளையா?"

"நான் உங்களை மறுத்தேனே!" என்றாள் மீரா அடக்கமாக,

"நான் அதை மறுப்பாகவே எண்ணவில்லை. வளர்ப்புமுறை சரியில்லை, பணத்தைக் கண்டு அஞ்சுகிறாய் என்று எண்ணி விட்டேன். சரி அதெல்லாம் போகட்டும். இப்போது என் நண்பனுடைய மனைவி எனக்குச் சகோதரி! சரிதானா?" என்றான் புன்னகையோடு.

மீரா சட்டென ஓர் எண்ணம் கொண்டாள். "அண்ணன் வெறும் அண்ணனாக இல்லாமல் அண்ணியோடு இருந்தால் அல்லவா சரியாக இருக்கும்!" என்று சிரித்தாள்.

"அண்ணி தேர்ந்து எடுத்து விட்டீர்களா?" கண்ணனும் சேர்ந்து சிரித்தான்.

"ஆமாம், அனிலா!" என்று அவன் முகத்தையே பார்த்தபடி மீரா சொன்னாள்.

"என்ன? அவளா? நாய்க் குட்டி போலக் கூப்பிட்டவன் குரலுக்கு ஓடி வரத்தான் அவள் லாயக்கு!" என்றான் கண்ணன் அசட்டையாக..

"கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்ததுகூட அளவற்ற அன்பின் காரணமாக இருக்கலாம், அல்லவா! வேறு யாரிடமாவது அவர்கள் அப்படிப் பழகி இருக்கிறார்களா?" என்று அனிலாவுக்காக வாதம் செய்தாள் மீரா.

கண்ணன் சிறிது நேரம் சிந்தனையில் மூழ்கினான். "நீ சொல்வதும் மெய்தான்!" என்றான் மெதுவாக.

"அதுதான் கண்ணா, மரியாதையாக அவள் சொல்வதை ஒப்புக் கொண்டு விடு. இல்லையேல் விடவே மாட்டாள்." என்று முகுந்தன் சிரித்தான். மீரா பொய் கோபத்துடன் அவனைப் பார்த்தாள். அவன் மேலும் சிரித்தான். அந்தச் சிரிப்பில் கண்ணனும் கலந்து கொண்டான்.

புன்னகையுடன் கண்ணன் வாயிலின் வழியைப் பார்த்தான். தொலைவில் அனிலா வந்து கொண்டு இருந்தாள். கண்ணனைக் கண்டதும் அவள் விழிகளில் ஏக்கம் தோன்றியது. அந்த ஏக்கத்தில் கண்ணன் புதிய பொருளைக் கண்டான். கண்ணனுடைய பார்வையில் அனிலா என்ன கண்டாளோ? முகத்தில் மலர்ச்சி தோன்றியது. மெல்ல அருகில் வந்தாள்.

மாலைகளின் மறைவில் முகுந்தன் மீராவின் கையை மெல்லக் கிள்ளினான்.

"என்ன, அதற்குள் ஜோடி சேர்க்கத் தொடங்கிவிட்டாயா?" என்று கிண்டலாகக் கேட்டான்.

மீரா மனம் நிறைந்த புன்னகையைப் பதிலாகத் தந்தாள்.

***


அவனும்
அவளும்
ரமணிசந்திரன்